www.gnanam.info
www.gnanam.lk

ஆகஸ்ட் 2023

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

279



விலை :
ரூபா 100/=

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் நாணயங்கள்... 8 ஞா.பா.

இலங்கையை ஒரே குடையின்கீழ் இறுதியாக ஆண்ட மன்னனாக ஆறாம் பராக்கிரமபாகு கணிக்கப்படுகின்றான் என்று குறிப்பிட்டோம். இவன் 57 ஆண்டுகள்வரை ஆட்சி செய்தான். இவ்வாறாக பண்டுகாபயன் 70 ஆண்டுகள், முட்டசீவன் 60 ஆண்டுகள், முதலாம் விஜயபாகு 55 ஆண்டுகள் என நீண்டகாலம் ஆட்சி செய்த மன்னர்களை நாம் வரலாற்றிலே கண்டுகொள்ளலாம். இதற்கு எதிர்மறையாக மகாநாமனின் மகனான சோதிசேனன், மற்றும் நிஸ்ஸங்கமல்லனின் மகனான முதலாம் வீரபாகு போன்றோர் ஒரு நாளுக்கும் குறைந்த அளவுகாலம் மன்னனாக இலங்கை வரலாற்றிலே இருந்துள்ளனர். இந்த வகையிலே கி.பி. 1208ஆம் ஆண்டு பொலனறுவையை ஆண்ட தர்மாசோகதேவன் எமது கவனத்துக்கு வருகின்றான்.

## (21) தர்மாசோகதேவனின் நாணயங்கள்

கல்யாணவதீ அரசியின் பின்னர் அமைச்சன் ஒருவனினால் **தர்மாசோகதேவன்** ஆட்சியிலே அமர்த்தப்படுகின்றான். இதிலே விந்தை என்னவென்றால் இவன் ஆட்சிக்கு ஏறும்போது இவன் **மூன்றுமாத கைக்குழந்தை**. இலங்கை வரலாற்றிலே அதிகுறைந்த வயதிலே ஆட்சிக்கு ஏறிய பெருமை இந்தக் குழந்தை தர்மாசோகதேவனையேச் சாரும். உலக வரலாற்றிலே கி.பி. 1886ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த Alfonso XIII மற்றும் கி.பி. 309ஆம் ஆண்டு பேர்சியா நாட்டைச் சேர்ந்த Shah Shapur II ஆகிய குழந்தைகள் பிறந்தவுடனேயே மன்னனாக அறிவிக்கப்பெற்ற வரலாறு உண்டு. இதிலே Alfonso XIII - குழந்தையின் உருவம் பொறித்த நாணயங்கள் அவனின் ஒருவயது – இருவயது (1887–1888) காலங்களிலே வெளியிட்டுள்ளமையையும் காணலாம். ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கி.பி. 1208ஆம் ஆண்டில் மூன்று மாதம் தொடங்கி பதினைந்தாம் மாதம் வரை (ஓர் ஆண்டு) ஆட்சியில் இருந்த இலங்கை மன்னன் தர்மாசோகதேவனின் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்கள் இலங்கையிலே வெளியிடப்பட்டுள்ளமை மூக்கின் மேல் விரல்வைத்து வியக்கும் செய்தியாக அமைகின்றது. கிடைக்கப்பெறும் ஆதாரங்களின்படி குழந்தையின் பெயர்பொறித்து நாணயம் வெளியிட்ட முயற்சியிலே உலக வரலாற்றிலே இலங்கை முன்னணியில் இருந்துள்ளது என்கின்ற விடயம் மார்தட்டிப் பெருமை கொள்ளவைக்கின்றது.



ஸ்பெயின் நாட்டைச்சேர்ந்த Alfonso XIII குழந்தை மன்னனின் உருவம் பொறித்த நாணயம் (1888) - இது இணையத்திலிருந்து பெறப்பட்ட படம்.

பொலனறுவை கால நாணயங்களின் உருவ அமைப்புகளுடன் அமைந்துள்ள தர்மாசோகனின் நாணயங்களிலே தேவநாகரி எழுத்துக்களில் **ஸ்ரீ தர்மாசோகதேவ** என்று பொறிக்கப்பெற்றுள்ளன.



இடது - நாணயத்தின் முன்பக்கம்.



வலது - மன்னனின் பெயர் தேவநாகரி எழுத்துக் களில் பொறிக்கப்பட்டுள்ளது

(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர சபை
பொது நூலகம்
09 AUG 2023
யாழ்ப்பாணம்

ஞானம்
ஒளி:24
சுடர்:03
279

# பகிர்தலின் மூலம் விரியும் அறிவும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு
ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்புபவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

## இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**

ஜெ.ஈழநிலவன் 07
சீத்தா பரமானந்தன் 15
சமரபாகு சீனா உதயகுமார் 32
மனோகரி ஜெகதீஸ்வரன் 32
கனகசபாபதி செல்வநேசன் 40

⊙ **சிறுகதைகள்**

திருமதி ஹரண்யா பிரசாந்தன் 03
அலைமகன் 10
இரண்டாம் விசுவாமித்திரன் 16
செவ்தெத் குத்ரெத் / சாலிய குணவர்தன/ மலரன்பன் 25
(மொழிபெயர்ப்புச் சிறுகதை)
ஷெல்லிதாசன் 33

⊙ **கட்டுரைகள்**

பேராசிரியர் செ. யோகராசா 08
நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர் 13
கலாநிதி ஜெகநாதன் தற்பரன் 19
வாகரைவாணன் 29
ஞா.பா.

⊙ **நூல் மதிப்புரை**

தி. ஞானசேகரன் 36

⊙ **பத்தி**

பேராசிரியர் துரை மனோகரன் 38

⊙ **வாசகர் பேசுகிறார்** 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

## தமிழர் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு

20-07-2023 அன்று இரண்டுநாள் உத்தியோகபூர்வ இந்தியப்பயணத்தை மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்தபோது, தமிழ்மக்களுக்கான 13ஆவது அரசியல் தீர்வை அமுல்படுத்தும்படி இந்தியப்பிரதமர் ஜனாதிபதி ரணிலிடம் கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதனைத் தொடர்ந்து 26-07-2023 அன்று அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அதிகாரப் பகிர்வு தொடர்பாக குறிப்பாக 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளார் ஜனாதிபதி.

தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு அவர்கள் பூர்வீகமாக வாழ்ந்துவரும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான சுயாட்சிதான் என்ற தந்தை செல்வநாயகத்தின் "தமிழரசு" சிந்தனையையும் தனித்தமிழீழம் என்ற அமிர்தலிங்கத்தின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் அதன்மூலம் தூண்டப்பட்டு ஆயுதம் ஏந்திப் போராடிய பல தமிழ் இளைஞர்களின் கோரிக்கையையும் நிறைவேற்றும் ஒரு ஆரம்ப வடிவமாக 1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி இந்திய இலங்கை அரசாங்கங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் இலங்கை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டதே இந்த 13ஆவது திருத்தச்சட்டமூலமாகும். இந்தச் சட்டமூலத்தின் அடிப்படையில் மாகாணசபை முறை ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்கான தீர்வாக முன்மொழியப்பட்டுள்ளது. முழுமையாக 13ஐ அமுல்படுத்துவதென்பது மாகாணசபை முறைமையின் கீழ் சொல்லப்பட்டிருக்கின்ற பொலிஸ், காணி, வெளிநாட்டுறவு அதிகாரங்களையும் இந்த மாகாணசபைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஆனாலும் கடந்தகாலங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்த போதெல்லாம் சிங்களத் தீவிரவாதமும் சிங்கள இன வாதிகளும் எதிர்ப்பை வெளிப்படுத்துவது வழக்கமாக இருந்தது. 13ஐ முழுமையாக நடை முறைக்குக் கொண்டு வந்தால் வடமாகாண சபையூடாக தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் நாடு பிளவுபடும் என்ற அச்சம் சிங்கள பௌத்த சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நாடு தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அரசியல் ரீதியான ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவது அவசியமானது என்பதைப் புரிந்துகொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முயற்சிகளை மேற்கொள்கிறார்.

இருந்த போதிலும் கடந்த காலங்களில் இனவாதத்தை மாத்திரமே தமது அரசியலாகக் கொண்டிருந்த சிலர் மீண்டும் இம்முயற்சிக்கு முட்டுக்கட்டையான கருத்துக்களை முன்வைத்து மக்களை மீண்டும் குழப்ப முயற்சிக்கின்றனர். மக்கள் ஆணையைப் பெறாத ஒருவர் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாது. இந்தியா கூறுவதுபோல செயற்படவேண்டாம் எனக் கூறுகின்றனர்.

அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிறைவேற்று அதிகாரத்தினால் நடை முறைப்படுத்த முடியும். அதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரவேண்டிய அவசியமில்லை.

இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் சுயநலன்களைக் கருத்தில் கொள்ளாது செயற்படுதல் அவசியமானது; அதுவே நாட்டிற்கும் நல்லது.

ooo


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு விடியல்

ஹரண்யா பிரசாந்தன்



திருமதி ஹரண்யா பிரசாந்தன்

சாரங்காவின் அகலமான பெரிய கண்கள் இன்னும் வீங்கி காணப்பட்டன. கண்களிலிருந்து வழிய எத்தனித்த கண்ணீர் கன்னங்களின் வழியாக பயணம் செய்ய ஆரம்பித்தது. கைகளினால் கண்ணீரை துடைத்து விட்ட அவள் தன் கைகளுக்குள் சிக்கியிருந்த அவனின் புகைப் படத்தை தடவிப்பார்த்தாள். புகைப்படத்தில் புன்னகைத்தபடி அவன் நின்று கொண்டிருந்தான். அவளது வாழ்க்கையில் புன்னகை காணாமல் போய் இரண்டு மாதங்கள் உருண்டோடி இருந்தன. தன் வாழ்க்கையின் துன்பப் பக்கங்களை இவ்வளவு விரைவாக வாசிக்கப் போகின்றோம் என்பதை அவள் அறிந்திருக்கவில்லை. துன்பம் அவள் வாழ்க்கையில் சுழன்று விளையாடியது. காதலித்து கைப்பிடித்த கணவன் உலகை விட்டு மறைந்து செல்வது என்பது இலகுவான விடயமல்ல. இதயத்தில் தேக்கி வைத்திருக்கின்ற சோகம் கரைந்து செல்வது என்பதும் அவ்வளவு சுலபமானதல்ல. ஊஞ்சலின் கம்பிகளை கைகள் இறுக்கமாக பற்றிக் கொண்டன. இதயத்தின் அழுகை அவள் காதுகளுக்கு சத்தமாகவே கேட்டது. இருவரும் ஒன்றாக ஊஞ்சலில் கை கோர்த்து ஆடிய காட்சி கண்களில் விம்பமாய் விரிந்து கிடந்தது.

"ஊஞ்சலில ஆடுறது ரொம்ப முக்கியம்" சொன்ன மாமியாரை ஏறிட்டுப் பார்த்தாள் சாரங்கா.

மாமியார் என்ற தமிழ் பதத்தின் அழுத்தத்தை அவள் உணரத் தொடங்கியிருந்தாள். மரணத்தின் வாடை சிறிதும் குறையாத அந்த வீட்டில் அதிகாரத்தின் ஆட்சி மாமியார் கையில் இருந்தது. மாமியார் விமலாதேவி பற்றி சொல்லியாக வேண்டும். மூன்று மகன்களை பெற்று வளர்த்து ஆளாக்கிய பெருமிதம் இன்னும் அவர்களிடத்தில் கொட்டிக்கிடந்தது. அவர்களில் இருவர் வெளிநாடுகளில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இருக்க மூன்றாவது மகன் ரகு தன்னோடு வாழ்க்கையை இணைத்துக் கொண்டது மாமியார் விமலாதேவிக்கு ஒரு பெரிய தோல்வி என்றே சொல்ல வேண்டும்.

அதற்குக் காரணம் நான் பெரிய செல்வந்தர் வீட்டு பெண் அல்ல. ஒரு அநாதையாக வாழ்ந்த என்னை குடும்பம் என்ற கூட்டுக்குள் கொண்டு சேர்த்தது ரகுவின் காதல். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் எங்கள் இருவரையும் காதல் ஒன்று சேர்த்தது. சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்த எனக்கு உறுதுணையாக இருந்தது என்னுடைய அண்ணன்தான்

அவனும் எங்கள் காதல் விரோதிதான். எங்களுடைய காதல் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதன் விளைவாக நாங்கள் இருவரும் சேர்ந்து திருமண பந்தத்தில் இணையலாம் என்று முடிவு செய்து எங்களுடைய திருமணத்தை நாங்களே நடத்திக் கொண்டோம். நண்பர்களின் மத்தியில் எங்கள் திருமணம் இனிதாக நிறைவுற்றது.

ஆத்திரமடைந்த என்னுடைய மாமியார் சிறிதுகாலம் தன்னுடைய வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருந்தார். இருந்தாலும் வேறு வழியின்றி எங்களுடனேயே தன்னுடைய காலத்தை கழிக்கலாம் என்று முடிவு செய்து எங்களை நாடி வந்தமை எனக்கு ஆரம்பத்தில் மகிழ்ச்சியை ஊட்டினாலும் பின்னால் அது வேதனைக்குரிய சம்பவமாக வளர்ச்சியடையும் என்று நான் நினைக்கவில்லை.

இப்போதெல்லாம் அவருடைய கண்களுக்கு நான் வெறுப்பின் சின்னமாக திகழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகுவின் மரணத்தின் பின் இன்னும் அதிகமாய் வார்த்தைகளை துப்ப எத்தனிக்கிறார். நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையின் அன்புக்கு அடையாளமாய் ஒரு குழந்தை இல்லாதது அவருடைய கோபத்துக்கு மேலும் உஷ்ணம் சேர்த்திருந்தது.

உடல் அசதிக்காக சாய்ந்தால் "ஒரே வருத்தம் தான்....அப்பிடியென்ன வெட்டி முறிக்கிற? பிள்ள பெறுற யோசனயே இல்ல போல" பணம் பற்றிய பேச்சு வரும் போதெல்லாம் "ம்..... பேசி முடிச்சிருந்தா சீதனமாவது வந்திருக்கும்.. இதக் கட்டி என்னத்த கண்ட?" மன வலிகளை நடனத்தில் காட்டும் பொழுதுகளில் "ஒரே இப்பிடி ஆடினா பிள்ள எப்பிடி பிறக்கும்? குதிக்கிறது தான் வேல...." வெளியே செல்ல ஆயத்த மானால் "பிள்ள இல்லாதவங்க நல்லதில கலந்து என்ன நடக்கப்போகுது? அங்கயும் போய் நாச மாக்கவா??" இவ்வாறான சொற்களோடு சாரங்காவின் போராட்டம் தொடர்ந்தது.

வழக்கம்போல் தவறுகள் எல்லாம் பெண்களையே சாரும் என்ற கொள்கைக்கு அமைவாக எனது மாமியாரும் வார்த்தைகளை வீணாக வீசி இதயத்தின் மெல்லிய இதழ்களை கிழித்து வந்தார். ரகு இருக்கும் போதே ஆரம்பித்த வார்த்தை சித்திரவதைகள் அவர் இடம் வெற்றிடம் ஆனதும் இன்னும் அதிக மாகவே...........

"புருஷன் இருக்கும்போது ஊஞ்சலில ஆடினது காணாதா?? இனியும் ஆட என்ன இருக்கு?? உனக்கு என்ன......... அவனும் போய் சேர்ந்துட்டான்... இனி உன்னை யாரு கேட்கிற?"

கண்கள் கண்ணீரை இன்னும் அதிகமாய் சுரக்கின்றன. உள்ளத்து தவிப்பை கண்களினால் பறைசாற்றி சாரங்கா எழுந்து நின்றாள். உடல் லேசாக நடுங்கிக்கொண்டிருந்தது. பொதுவாகவே ஒலியை உரத்துப் பேசினாலே அவள் இதயம் அடிக்க ஆரம்பிக்கும். மாமியாரின் கனத்த குரலுக்கு முன்னால் அவளது இதயம் பலவீனம் ஆகிப்போனது. செய்யக்கூடாத தவறை அவள் செய்தது போல புலம்பத் தொடங்கினாள் மாமியார் விமலாதேவி.

ஊஞ்சலில் ஆடும்போது நினைவுகளும் ஆடுகின்றன. மறக்க நினைக்கின்ற தருணங்கள் மனதில் படங்களாக பதிகின்றன. மகிழ்ச்சியில் திளைத்து ஊஞ்சலில் ஆடவில்லை என்பதை மாமியாருக்கு புரியவைக்க அவளது அகலமான விழிகளே போதும். ஆனாலும் நீரை தேக்கி வைத்துக் கொண்டிருந்த அந்த விழிகளின் பாரத்தை விமலாதேவி என்றுமே கவனித்த தில்லை..........

சாரங்கா மௌனமாக அந்த இடத்தைவிட்டு நகரத் தொடங்கினாள் அவளால் இடத்தைவிட்டு நகர முடிந்தது ஆனால் நினைவுகளை விட்டு?????

இனிமையாய் தொடங்கிய திருமண வாழ்க்கை ஐந்து வருடங்களைக் கடந்தது என்பது தேதிகளையும் வருடங்களையும் கிழிக்கும்போது மட்டுமே புலனானது. குழந்தை இல்லை என்ற குறையை தவிர வேறு எந்தப் பிரச்சனைகளும் இல்லாத வாழ்க்கை அவர்களுடையது. அவர்களுக்கு சரி. ஆனால் சாரங்காவுக்கு????? மாமியாரின் கைகளில் சாறாய் அவள் பிழியப்பட்டாள். தன் மகனின் காதுகளுக்கு சாரங்காவைப் பற்றி விமலாதேவி



சொல்லாமலில்லை. ஆனால் அவன் அவற்றை அங்கேயே விட்டு விடுவான். மனைவி மீது கொண்ட தீராத காதல் ரகுவை ஒரு போதும் பிரச்சனைத்தீக்குள் தள்ளியதில்லை. பிள்ளை இல்லை என்பது கணவன் மனைவி பிரச்சனையே அன்றி மற்றவர் பிரச்சனையல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அவன் எண்ணம். இரும்புக் கம்பிகளுக்குள் தான் சிக்குண்டாலும் தன் வாழ்வின் வசந்தம் கணவன் ரகு தான் என்ற உறுதியோடு தான் சாரங்காவின் பயணம் தொடர்ந்தது.

மாமியாரோடு இருக்கும் பொழுது வைத்தியரே தெய்வம் ஆவார் என்ற புது மொழிக்கு இணங்க சாரங்காவும் ரகுவும் வைத்திய பரிசோதனைகளுக்கு தங்கள் உடலை வழங்கியிருந்தார்கள்.

தடுப்பூசிகள் மாத்திரைகள் ஸ்கேன் கருவிகள் விசேட வைத்தியர்கள் வைத்திய அறிக்கைகள் போன்ற தமிழ்ச் சொற்கள் அவர்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணையத் தொடங்கின. வைத்தியசாலையில் ஒரு குழந்தைக்காக வரம் கேட்டு வாழ்ந்து கொண்டிருந்த அவர்களது மனக்குமுறல்கள் மற்றவர்களுக்கு தெரிவதில்லை. அதற்கு மாமியாரும் ஒரு விதி விலக்கல்ல.

பாசத்தை பங்கு போட வருகின்ற ஒரு புதிய உறவுக்காக ஏங்கிய சாரங்காவைப்பற்றி யாருக்கும் தெரியாது. மௌனத்தை பல கேள்விகளுக்கு விடையாக வழங்கிய சாரங்கா தன் உள்ளப்பசிக்கு பாடசாலையில் உணவு தேட ஆரம்பித்தாள். திறமையான நடன ஆசிரியரான அவளது அசைவுகளும் அபிநயங்களும் அவளை உயிரோடு நடமாட வைத்திருந்தன.

கதவைத்திறந்த சாரங்காவின் முகத்தில் மலர்ச்சி. பவித்ரா கையில் சில பொருட்களுடன் நின்றுகொண்டிருந்தாள். அவளை உள்ளே அழைத்து அமரச் சொன்னாள் சாரங்கா.

"எங்க உண்ட மாமியாரக் காணல்ல. சாரங்கா உண்மயா உண்ட மாமியாரப் பாத்தா ரொம்ப நல்லவங்க மாதிரி... இப்பிடியெல்லாம் கதைப்பாங்க எண்டு நம்பவே முடியாது"

"பக்கத்து வீட்ட போய் இருக்காங்க" அவளுக்கு பதில் சொல்லிவிட்டு விரக்தியாய் ஒரு புன்னகையை உதிர்த்தாள் சாரங்கா. குறி பார்த்து எறியும் மாமியாரின் விஷ அம்புகள் பற்றி பவித்ராவுக்கு என்ன தெரியும்? மகன் முன்னால் பாசமாய் பேசி அவன் போன பின்பு கொடூர வார்த்தைகளை கொட்டும் மாமியார் விமலாதேவியின் முன் நடிகைகள் மண்டியிட்டு நடிப்பைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

"அதானே பார்த்தேன்... இல்லாட்டி நீ எப்ப பார்த்தாலும் அழுதுட்டு தானே இருப்பா... சாரங்கா ஒரே இப்படி அழுது கொண்டிருக்கிறதால எதுவும் நடக்காது. நான் சொல்றது விளங்குதா???"

"ம்............"

"அக்சிடெண்டில ஒருத்தரிட வாழ்க்க இப்பிடி முடியுமெண்டு யாரும் நினைக்கல்ல... இப்பிடியே இருந்தா பைத்தியம்தான் பிடிக்கும்... பழைய நிலைமைக்கு வர யோசி சாரங்கா......"

....................

"இப்பத்தய நிலமயில நீ கொஞ்சம் ஒன்லைன் கிளாஸ் எடுத்தா உனக்கும் ஒரு மாறுதலா இருக்கும். பிரின்சிபலும் உன்னப் பத்தி கதைச்சி கவலப்பட்டவர். நானும் இப்ப சயன்ஸ் கிளாஸ் எடுத்திட்டுத்தான் வாறன். அதான் லேட்"

சொல்லிக்கொண்டே போன பவித்ரா அவளை நிமிர்ந்து பார்த்தாள். அவள் விழிகள் எங்கோ நிலைகுத்தி நின்று கொண்டிருந்தன. அவள் பார்வையின் அர்த்தம் பவித்ராவுக்கு புரியவில்லை. பவித்ரா சிறிது நேரம் அவளை உற்று நோக்கினாள்.

"என்ன யோசன?? ஏதாவது பிரச்சனயா?"

"இல்ல.......ஒண்டுமில்ல"

"சாரங்கா பொய் சொல்லாத.... என்ன நடந்தது?"

"என் அண்ணன் இன்னைக்கு காலயில வந்திருந்தான். கொஞ்ச நாளைக்கு முதல் தான் கேள்விப்பட்டானாம்.. ஆறுதல் சொல்லிட்டுப் போக வந்தான்........."

"நல்ல விசயம் தானே???.. அதில என்ன?? இனிமேல் உண்ட வாழ்க்க என்ன என்டுற பயம் தான் இருந்தது. பற்றிப் பிடிச்சு வாழ ஒரு விசயம் வேணுமே.. அண்ணா... அண்ணி... அவரிட பிள்ளைகள்... உனக்கும் ஒரு ரிலாக்ஸ்"

"உண்ம தான் பவித்ரா....ஆனா எனக்கு வாழ்ற ஐடியா இல்ல....."

"அடி வாங்கப்போறா நீ......கிழவி மாதிரி கதைக்காத......... உங்கட லவ்வால பிரிஞ்சு போன அண்ணன் உனக்கு இப்பிடியாச்சு எண்டதும் ஓடி வந்திட்டான் தானே.. அது போதும்..... எல்லாம் நல்லா நடக்கும்"

பவித்ரா சொல்வதுபோல் எல்லாம் நல்லதாகவே நடந்துவிட்டால்..........

அண்ணனின் வருகை சாரங்காவின் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்புமுனைதான். இனி வாழ்வதற்கு எந்த அர்த்தமும் இல்லை என்று முடிவு கட்டியபோது உறவாக நாங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறோம் என்று சொல்லி உட்புகுந்த அண்ணனை நினைத்துப்பார்த்தாள் சாரங்கா. அவனைப்பற்றிய எந்த விளக்கத்தையும் சாரங்கா கேட்கவில்லை. அவனது குடும்ப வாழ்வு அவனது பிள்ளைகள் அவனது தொழில் பற்றிய எந்த விடயங்களையும் அவள் கேட்கவில்லை.

பாலைவனத்தில் விழுந்த ஒற்றை மழைத்துளி போல் அவளது வாழ்வில் அவனது வருகை அமைந்திருந்தது. மனதளவில் போராடும் ஒரு போராளியாக அவள் தன்னை நினைத்துப் பார்த்ததுண்டு. இந்தப் போராட்டத்துக்கு மேலும் வலு சேர்க்க அவளது அண்ணன் உதவி செய்வான் என்ற நம்பிக்கை சாரங்காவுக்குள் உள்நுழையத் தொடங்கியது.

தனது நண்பியும் அதற்கு ஏற்றாற்போல் பேசியது அவள் இதய வடுக்களை மயிலிறகால் வருடியது போல் அமைந்திருந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சிகூட சாரங்காவுக்கு அதிக நாள் நீடிக்கவில்லை. ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் என்ற நோக்கில் தன்மீது அண்ணனுக்கு பாசம் அதிகம் என்று சாரங்கா நம்பிக் கொண்டு இருந்தாள். ஆனால்............

"சாரங்கா.... நீ இங்க தனிய இருந்து கஸ்டப் படாம எங்களோடயே வந்திருக்கலாம். நீயும் மாமியாரும் தானே... அவங்கட சொந்தக் காராக்கள் யாராவது அவயப் பாக்கட்டும். நீ பாக்கணும் எண்டு தலையெழுத்தா?

அண்ணன் சொன்னபோது சாரங்கா எதுவும் பேசவில்லை. தான் படுகின்ற சொல்லொணாத் துயரங்களை மனதில் நிறுத்தி அவன் பேசியது அவளுக்கு ஆறுதலளித்தது.

" ரெண்டு மகனும் வெளிநாட்டில எண்டா காசு அனுப்புவானுகள் தானே? காசக்குடுத்து எங்கயும் போயிருக்கட்டும். உனக்கென்ன?? ஏச்சு வாங்கி நீ பாக்கணுமா?.... எங்கட வீட்டயி ருந்தா உண்ட பள்ளிக்கு போறதும் ஈஸி. இந்தப் பெரிய வீட்ட வித்திட்டா ஒரு பிரச்சனயுமில்ல...."

"யாரிட வீட்ட யாரு விக்கிற??" சினந்து கேட்டவாறு விமலாதேவி ஆக்ரோசமாய் நின்று கொண்டிருந்தாள்.

"என்னடீ உங்கட அண்ணனுக்கு பைத்தியமா?? எண்ட புள்ள வாங்கின வீடு.. உண்ட இஸ்டத்துக்கு விக்க நான் விடுவனா?"

"இப்ப இந்த வீடு சாரங்காக்குதானே சொந்தம்?.. அத வித்துப்போட்டு எங்களோட வந்திருக்கட்டுமே...."

" வீடு விக்கிற பத்தி கதைக்க நீ யாரு??"

"அண்ணா ஏதோ தெரியாம சொல்லிட்டார் மாமி..... நான் வீட விக்கப்போறதில்ல.... அவர்ட நினைவா இது என்னோடயே இருக்கட்டும்" சாரங்கா மெதுவாய் பதில் சொன்னாள்.

"இங்கபாரு......எண்ட மூத்த மகனுக்கு தான் ரெண்டு பொம்பிளப்பிள்ளைகளிருக்கு..... அவன் வெளிநாட்டில இருந்தாலும் அவனிட பிள்ளைக்குத்தான் நீ இந்த வீட்ட குடுக்கணும்.. ... எண்ட ரகுவுக்கு தான் வாரிசே இல்லயே.... பிறகென்ன?? நீ சாகும் வரைக்கும் இதில இருக்கலாம்.... ஆனா நான் உயிரோட இருக்கக்குள்ளயே வீட எழுதணும் விளங்குதா???"

" அப்பிடி விட ஏலா...... எனக்கும் ஒரு பொம்பிளப்பிள்ள இருக்கு. அதிட பேரில வீட எழுதலாம் தானே?? பிள்ளைகள் இல்லாத சொத்து தானே?? சாரங்காட அண்ணன் நான். எண்ட பிள்ளைக்கே இருக்கட்டுமே...."

சாரங்கா தன் அண்ணனை ஏறிட்டுப் பார்த்தாள். தன்னுடைய வாழ்க்கை இனி விடியுமென்று நம்பியிருந்த அவள் கலங்கிய கண்களோடு அவனைப் பார்த்தாள்.

"அதானே பாத்தன். என்னடா.... கலியா ணத்தில விருப்பமில்ல எண்டு போனவன் இப்ப திரும்ப வந்து அன்பக் கொட்டுறானே எண்டு.. எண்ட பிள்ள வாங்கின வீடு. கண்டவனுக் கெல்லாம் எழுதவா நான் பாத்திட்டு இருக்கன்??... சாரங்கா சும்மா கண்ண கசக்காம ஒழுங்கா சொல்றத கேளு....பிள்ள இல்லாத வீடு எண்டா வாறவன் போறவன் எல்லாம் உரிம கொண்டாடு வானுகள்"

விமலாதேவி கோபத்தின் எல்லையில் கொப்பளித்துக்கொண்டிருந்தாள். சுவரோடு தலையை சாய்த்து அப்படியே நிலத்தில் சாய்ந்தாள் சாரங்கா. உயிரற்ற இந்த வீட்டுக் காக உறவுகள் சண்டையிட்ட காட்சி மனதில் பதிந்திருந்தது. கணவன் போன பின்பு தன் வாழ்க்கையே முடிந்ததாக கருதும் இவர் களையா நான் நம்பியிருந்தேன்? என்ற கேள்வி அவளை குடையத் தொடங்கியது.

"சாரங்கா...... உனக்கெண்டு இனி என்ன இருக்கு?... இந்த வீடு இப்ப நல்ல விலைக்கு போகும்... உனக்கு பிள்ள இருந்தா அது வேற... பேசாம வீட மகளிட பேரில எழுதி வச்சிட்டு நீ வந்து எங்களோட இரு... ஒரு அண்ணனா நான் சொல்றத சொல்லிட்டன்.. நான் கோபப்படுற மாதிரி நடந்து கொள்ளாத"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் வெளியேறினான்..... சாரங்காவின் இதயத்திலிருந்தும்..........

தலையணைக்குள் முகத்தை புதைத்துக் கொண்டாள் சாரங்கா. வழக்கம் போல் அவள் கண்ணீர் தலையணையோடு கதை பேச ஆயத்தமானது.

உறக்கத்தை எட்டிப் பிடிக்க நினைத்து போராடியும் அது அவள் கைகளுக்குள் சிக்கவில்லை. பொழுது புலரும் போது சாரங்கா இமைக்காத தன் விழிகளை ஒரு கணம் சிமிட்டிக் கொண்டாள்.

“உங்கட அண்ணன் சொல்றான்.. அப்பிடி இப்பிடியெண்டு நீ ஏதாவது செய்திராத...... உண்ட நல்லதுக்குதான் சொல்றன். ரகு செத்த பிறகு உண்ட அண்ணன் இங்க வந்திருக்கான் எண்டா காரணம் இல்லாம இல்ல. இந்த வீடு இப்ப உனக்கு சொந்தம் எண்டதால தான் உன்னட்ட வாறான்.. பிள்ள இல்ல எண்டுறது வாய்ப்பா பொயிட்டு.... சாரங்கா நான் கத்திற விளங்குதா உனக்கு?? மூத்த பெடியனிட பிள்ளைக்கு வீட எழுது..... என்ன??? நீ இப்ப எங்க போக ரெடியாகிறா ???”

“முக்கியமான இடத்துக்கு”

ரகுவின் புகைப்படத்துக்கு முன் விளக்கை ஏற்றினாள் சாரங்கா. இரண்டு இதயங்களும் பேசிக்கொண்டன. தெருவுக்கு வந்து முச்சக்கர வண்டி ஒன்றில் ஏறிக்கொண்டாள். மூளை முழுவதும் சிந்தனைப்புகை......

காத்திருக்க சொல்லிவிட்டு இறங்கிக் கொண்டாள். அந்த கட்டத்தின் உள் நுழைந்து அவள் திரும்பிவந்து ஏறிக்கொண்டாள். கைகளில் ஒரு படிவம். சாரங்காவின் நீர்விழிகள் அந்தப் படிவத்தில் படிந்திருந்தன.

அந்தப்படிவம் சிறுவர் தத்தெடுப்பு விண்ணப்பம் என்ற எழுத்துக்களை தாங்கிக் கொண்டிருந்தது.

OOO

# திரைகளுக்குள் கரைந்த காதலி நான்

– ஜெ.ஈழநிலவன்

பதின்மத்தின்
செடி வளர்த்தேன்
இருட்டறையில்

இரசம் பூசப்பட்ட
கண்ணாடியில்
தாவும் முகம்
கடைக்குட்டி சிங்கம்
போல்
என் மெய்
என்னோடிருந்தது

அவசர சிகிச்சையறையில்
நிலைகுலைந்த
மரண கணம்
ஆறுதலுக்கு
தாதியின் விரல்களில்
ஒப்புவிப்பதுபோல்
நானிருந்தேன்

தாழ்வாரம்
தொட்டு
நிறையும்
சிறு ஊற்றெனும்
அணங்கு நான்

திரைகளுக்குள்
புதைக்கும்
என் உடலை
நான் தோண்டி
அழுதேன்

ஊஞ்சல்
கயிற்றில்
பித்து ஏறி
ஆடினாய்
நான் முகம் சுழிக்க

சகித்தலின்
உச்சவரம்பில்
பெண்மைதான்
சுவர் என்றாய்

நிலா பார்த்த
குழந்தையாக
இருவரும்
புகுந்தோம்

தொடுதிரை
விரித்து
கடலென பெருத்தது
காதல் கணங்கள்

வக்கிரங்கள்
வெளித்தள்ள
என் நிலமெங்கும்
மழையென
ஆடினாய்

குழைந்த
முத்தங்களின்
மேல்
விடம் பூசி
என் அந்தரங்களை
திரையின் மேல்
திணித்தாய்

எஞ்சிய
பெருமூச்சு
பெருவெளி கடந்து
நீட்சிபெறுகிறது

செல்போன்களில்
சேமித்த
நிழற்படங்கள்
ஒவ்வொன்றாக
அவிழ
வாழ்தலின்
உயிர் மூச்சிலிருந்து
ஒரு சொட்டு
கண்ணீர்
வக்கிரங்களை
கடந்து
நதியாகிக்
கொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நவீன காவிய வரிசையில் 'விடுதலை வேட்கை'

'விடுதலை வேட்கை' என்றொரு நவீன காவியம் (கவிஞரின் வார்த்தையில் கூறுவதானால் சிறுகாவியம்) 1966இல் மட்டக்களப்பிலிருந்து வந்துள்ளது. இதனை இயற்றியவர் பண்டிதர் ஆ. சபாபதி. ஈழத்து நவீன காவியங்கள் பற்றி எழுதப்பட்ட ஓரிரு கட்டுரைகளில் 'பெயர்' அளவில் மட்டும் இக்காவியம் இடம்பெற்றிருக்கிறது. எனினும் ஈழத்திலெழுந்த நவீன காவியங்களுள் முக்கியமானதொன்றாக இது விளங்குகின்றது என்பது பலரும் அறியாததொன்று.

மேற்குறிப்பிட்ட காவியத்தின் சிறப்புகளி லொன்று இது உண்மைச் சம்பவத்தை அடியொற்றி எழுந்ததாகும். அதுவும் போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் நடந்த சம்பவமொன்றினை அடியொற்றியதாகவுள்ளது. இதுபற்றி கவிஞர் தன் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டி ருப்பது கவனத்திற்குரியது:

"சென்ற தீபாவலித் தினத்தன்று ஒரு நூலைப் படித்துக் கொண்டிருந்தேன் அதில்,

"கொழும்பிலிருந்த போர்த்துக் கேயருக்கும் கோட்டை அரசனாயிருந்த இராஜசிங்கனுக்கும் இடையில் யுத்தம் மூண்டது. அது வேறு இடங் களுக்கும் பரவிற்று. போர்த்துக்கேயர் கொஸ் கொடை என்னும் ஊருக்குத் தீயிட்டுக் கொளுத்தி சூறையாடி அங்கிருந்தவர்களை பிடித்து விலங்கு பூட்டி வடத்திலே பிணைத்து அவர்களைக் கப்பலிலேற்றி பிறவூர்களில் அடிமைகளாக விற்பதற்கு எத்தனம் செய்து கொண்டிருந்தனர். அவர்களிடையே இளமங்கை யொருத்தியும் நின்றாள். எங்கிருந்தோ வந்த அவளுடைய இளவயதுடைய கணவன் அவளுடைய கழுத்தைக் கையாற் கட்டிப்பிடித்துக் கொண்டு புலம்பினான். அவ்விருவருடைய பிரலாபத்தையும் கண்ட போர்த்துக் கேயப் படைத்தலைவன் 'அறோஞ்சஸ்' அவளை விடுதலை செய்தான். அவர்கள் இருவரும் தளபதிக்கு நன்றியுடையவர்களாக வாழ்ந்து வந்தனர்."

என்று எழுதப்பட்டிருந்தது. இதைப்படித்த போது இலங்கையிலே போர்த்துக்கேயர் இழைத்த கொடுமைகள் பற்றி மற்ற நூல் களும் படித்த எண்ணங்களும் வந்தன. உடனே மனக் கிளர்ச்சியினாற் சில பாடல்களை எழுதினேன்"

ஆக, இலங்கையைப் போர்த்துக் கேயர் ஆட்சிசெய்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களி லொன்றாக இலங்கை வரலாற்று நூலொன்று (In search of Ceylon -By Marcelline Jeyakody- Page 52) தரும் தகவலை அடிப்படையாகக் கொண்டெழுந்த வரலாற்றுக்காவியமாக இவ் விடுதலை வேட்கை அமைந்துள்ளது என்பதே கவனத்துக்குரியது.


இக்காவியத்தின் செல்நெறி பின்வருமாறு காணப்படுகிறது:

(1) ஆட்சியாளரான போர்த்துக்கேயர் செய்த கொடுமைகள்

(2) கொஸ்கொட ஊரினுள்ளோரை அடிமை களாக விற்கக் கப்பலில் ஏற்றுதல்

(3) கப்பலிலேற்றப்பட்டவர்களது மன உணர்வு

(4) குறிப்பிட்டதொரு பெண்ணின் கணவனது மன நிலையும் பழைய நினைவுகளும் ஏங்குதலும்



பேராசிரியர்
செ. யோகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) பெண்ணினது மன நிலை
(6) இருவரும் உரையாடுதல்
(7) காவலாளிகள் கணவனை மிரட்டுதல்
(8) அவன் தன்னைக் கொல்லுமாறு கேட்டல் அன்றேல் தான் இறந்து விடுவதாகக் கூறல்
(9) அவள் கதறி அழுதல்
(10) காவலாளிகள் படைத் தலை வனான அறோஞ் சலிடம் சென்று இருவரது செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தல்
(11) தளபதி அவளை அழைப்பித்து அவள்பற்றி வினவுதல்
(12) அவள் அச்சமின்றி மனிதரது அடிப்படை வாழ்வுரிமைபற்றி குறிப்பிடுதல்: பலரும் இதனை உணராதிருப்பது பற்றி வற்புறுத்தல். பலரும் இதனை உணர்ந்திருப்பது பற்றி எடுத்துரைத்தல் முன்னர் இந்நாடு திகழ்ந்த பெருமை பற்றி விவரித்தல், அன்போடு வரவேற்ற நாட்டு மக்களுக்கு போர்த்துக்கேயர் கொடுமைகள் செய்வது பற்றி கூறுதல். அவர்களது ஆட்சிபற்றி இறுதியாக பின்வருமாறு விமர்சித்தல்:

**"பாவமொன்றறி யாச்சிறு பாலகர் பதறக்**
**கூலி நின்றுலை தாயரும் குறையிரந்தலற**
**வாவி யுள்வதி முதலைகட் கவர்களை வழங்கி**
**யாவி போக்கினி ரகமகிழ்ந்தீர் இவையறமோ?**

அலெக்சாந்தர் ஆகியோர் இறுதியாக மாண்டு மடிந்தமை பற்றியும் குறிப்பிட்டு செய்ந்நன்றி மறந்தவரும் அன்பில்லாதவரும் தெய்வநிந்தனை செய்பவரும் நரகமெய்துவரென்று சாபமிடுதல்.

மேற் குறிப்பிட்டவாறு அவள் கூறிய எதற்கும் எதுவும் கூறமுடியாத தளபதி 'உன்னை காவலர் கொல்ல முற்பட்டால் 'என்ன செய்குவை' என்று கேட்க அவள் இவ்வாறு கூறுகிறாள்:

**வெட்டியெ னுடலை வீசின் வெந்துயரடைவேனல்லேன்**
**சுட்டெனைத் தொலைத்த போதும் துன்பமு முணர மாட்டேன்**
**கட்டியிக் கடலில் வீசிற் களிப்புடன் இறப்பேன்"**

அதனைக்கேட்ட தளபதி மனமிரங்கி கணவனைக் கூப்பிட்டு "வேறெதுவும் செய்யாமல் அன்போடும் அறத் தோடும் வாழ்க்கை நடத்துவதற்காக உங்களை விடுதலை செய்ய விரும்புகிறேன்" என்று கூறுகிறான். அவளது பேச்சிலுள்ள நியாயத்தையும் ஏற்றுக் கொள்கிறான். 'நாங்கள் எண்ணியவாறு நடக்க எங்களுக்கு உரிமையில்லை" என்றும் குறிப்பிடுகின்றான், தாங்கள் அறிவில்லாதவர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றான்: பதவியிலிருந்து விலகும் கடிதமெழுதிவிட்டு சாதாரண வாழ்க்கை வாழும் முடிவிற்கு வருகிறான்!

ஆக, உண்மை வரலாறும் புனைவும் கலந்து எழுதப்பட்ட இந்த நவீன காவியம் ஈழத்து நவீன காவிய வரிசையில் இவ்விதத்தில் முக்கியமானதும் தனித்துவமானதுமான நவீன காவியமாக விளங்குகிறது என்பது இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது. காதலின் மேன்மையை வெளிப்படுத்தும் இந்நவீன காவியத்தில் வரும் பெண்பாத்திர உருவாக்கமும் துணிச்சல் மிக்க பெண்ணொருத்தியை நவீன காவியத்தினூடாக நடமாடவிட்டுள்ளது!

மேற்கூறியவை அனைத்தையும் விட இக்காவியத்தின் தலைப்பும்

**" பெற்ற தாயரும் பிறந்த பொன்னாடதும் – பிறப்பால்**
**பெற்ற தாய் மொழியென்பதும் பிறப்பிடனுரிமை**
**யுற்ற வென்பதை யொருவரும் மறுத்திட**
**கற்றுணர்ந்தவர்க் கெவரிது கழறிடற் பாலார்"**

என்ற பாடற் பகுதியும்

**"விடுதலை வாழ்வே யின்பம் விழுப்பொருள் அதுவே நல்ல**
**விடுதலை வாழ்வே ஞானம் விடுதலைதானே முத்தி**
**விடுதலைதானே வீடு விண்ணக வாழ்வு மேன்மை**
**விடுதலையின்றி வாழ்தல் விழுப்பொருள் தேறாதையா"**

என்ற பாடற்பகுதியும் இந்நவீன காவியத்தின் வரவை ஈழத்தில் அறுபதுகளிலே நடைபெற்ற மொழியுரிமைப்போராட்டத்துடன் தொடர்புபடுத்திப்பார்க்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது என்பதும் அம்முயற்சி இந்நவீன காவியத்தின் முக்கியத்துவத்திற்கு இன்னொரு விதமான பரிமாணத்தை ஏற்படுத்துகின்றது என்பதும் கவனத்துக் குரியனவாம்!

○○○


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# அவள் பெயர் ஆயிசா

அலைமகன்



சுகந்தன் அன்று அலுவலகத்துக்கு நேரத்தோடு வந்துவிட்டிருந்தான். இந்த இலங்கை தூதரக அலுவலகம் இங்கே எட்டு மணிக்குப்பின்புதான் சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கும். இங்கே சேர்ந்து இரண்டு வாரங்கள்தான் ஆகிறது. ஆனால் ஆயிசாவும் நேரத்துடனேயே அலுவலகத்துக்கு வந்துவிடுவாள் என்பதை சுகந்தன் அவதானித்திருந்தான்.

அவள் இவனை முதன்முதலில் சந்தித்த கணமே கேட்ட கேள்வி மனதில் நிற்கிறது. "உங்கள் பெயருக்கு என்ன அர்த்தம்? எப்போதும் நறுமணம் வீசும் பெயராக இருக்கிறது! உங்களைப்போலவே!" விகல்பமில்லாமல் அவள் சொன்னபோது இவனுக்கு மெலிதாக சிலிர்த்தது. ஆயிஷா என்பது இஸ்லாத்தின் இறைத்தூதர் முகம்மது நபி அவர்களின் துணைவியார் என்று சுகந்தனுக்கு தெரியும். இவ்வளவு இயல்பாக பேசும் ஒரு முஸ்லீம் பெண்ணை இப்போதுதான் சுகந்தன் பார்க்கிறான். இவன் யாழில் வாழ்ந்த இடத்தில், இளமைக்காலங்களில் முஸ்லிம்பெண்களை சந்திக்க வாய்ப்புக்கிடைக்கவில்லை. இருந்தாலும் அவன் பதிலேதும் பேசவில்லை.

அவளுடன் பணி செய்யக்கிடைத்தது இவனுக்கு உண்மையில் மிகுந்த சந்தோசமாக இருந்தது. எப்போதும் விளையாட்டாக பேசும் குணம். மனத்தடைகளை மீறி இவனால் அவளுடன் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ள முடிந்தது. அவ்வப்போது சில சில கருத்து முரண்பாடுகள் வந்தாலும் எதுவும் இவர்களின் பழக்கத்தை பாதிக்கவில்லை. அவள் தனது வீட்டில் இருந்து சுவையான கறிகளை தயாரித்தால் இவனுடன் பகிர்ந்துகொள்வது வழக்கம்.

அன்றொருநாள் சுவையான கோழிக்கறி ஒன்றை சமைத்து கொண்டு வந்திருந்தாள். மதிய உணவு வேளையின் போது சொன்னாள்.

"இது நானே செய்தது. உங்களுக்கு நிச்சயம் பிடிக்கும் சாப்பிட்டுப்பாருங்கள்"

அன்று வியாழக்கிழமை. சுகந்தன் கிழமையில் மூன்று நாட்கள் மச்சம் சாப்பிடுவதில்லை.

"இல்லை இன்று நான் மச்சம் சாப்பிட மாட்டேன்"

அவளது முகம் சுருங்கியது இவனுக்கு கவலையாகிவிட்டது.

"உங்களுக்காகவே ஸ்பெஷலாக செய்தேன் food is food; மூன்று நாட்கள் தவிர்த்து நீங்க மச்சம் சாப்பிடுறீங்கதானே? அதனால் என்ன பலன். அப்பிடியென்றால் நீங்க Vegan ஆக இருக்கவேணும். அப்போதுதான் இந்த கட்டுப்பாடுகளுக்கு உண்மையான அர்த்தம் இருக்கும்"

எப்பிடியாவது இவனை சாப்பிடவைக்க வேண்டும் என்பது இவளின் அவா. ஆனால் அவனால் முடியவில்லை. ஓ.எல் படிக்கும்போது குருபகவானின் தோஷம் நீங்கவேண்டும் என்று அம்மா சொல்லி தொடங்கிய பழக்கம். விடமுடியவில்லை.

அவளின் ஹிஜாப் அணிக்கு கீழான அரேபியன் வெள்ளை நிற முகம் சற்று வாடி சிவந்தது.

அன்றொருநாள் இப்படித்தான் இவனும் ஆயிசாவும் சர்வதேச மாநாடு ஒன்றுக்கு இலங்கைத்தூதரகம் சார்பாக சமூகமளிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

வேண்டியிருந்தது. விருந்தின் தொடக்கத்தில் இவர்களை நோக்கி ஒரு சவூதி தம்பதியினர் வந்தார்கள். அவர்களில் அந்த பெண்மணி ஆயிஷாவை நோக்கி "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று வாழ்த்தினாள். ஆயிசாவும் அவளும் தழுவிக்கொண்டனர். உடனே அந்த அரேபிய பெண்மணி ஆயிசாவைப்பார்த்து "உங்கள் கணவர் தான் இதன் ஒருங்கிணைப்பாளரா?" என்றாள்

உடனே ஆயிசா வெட்கத்துடன் புன்ன கைத்துக்கொண்டே "இவர் எனது நண்பர்" என்றாள்.

"அவர் முஸ்லிமா?"

"இல்லை"

உடனே அந்த சவூதி பெண்மணி தனது கைப்பையை திறந்து ஒரு சிறிய புத்தகத்தை எடுத்தாள். அதன் தலைப்பு "அன்புள்ள அம்மா". அதனை சுகந்தனிடம் கொடுத்து நிச்சயம் இதனை படித்துப்பாருங்கள் என்றாள்.

ஆயிஷாவை தனது மனைவி என்று அந்த சவூதி தம்பதிகள் நினைத்தது சுகந்தனுக்கு மிகுந்த சந்தோசமாக இருந்தது. அவள் கொடுத்த புத்தகத்தை வாசித்தான். ஒரு தாயின் அன்புக்குரிய செல்ல மகன் இஸ்லாத்தை தழுவிய பின்னர் தனது தாயையும் இஸ்லாம் மார்க்கத்தை தழுவச்செய்த உண்மைக்கதை அது.

அடுத்தநாள் அலுவலகம் வந்த சுகந்தனிடம் ஆயிசா கேட்டாள்

"நீங்க அந்த புத்தகத்தை படித்து விட்டீங்களா?"

"ஆம்! நீ அந்த புத்தகத்தை படித்திருக் கிறாயா?"

"நான் முன்பே படித்திருக்கிறேன் அந்த அம்மாவுக்கு மகன் மீது எவ்வளவு பாசம்! அதனால்தான் மகனின் விருப்பப்படி புனித மார்க்கத்தை தழுவினார்கள்!"

"ஆனால் ஆயிசா, எல்லா மதமும் ஒன்றல்லவா?"

"ஆம் அதிலென்ன சந்தேகம்?"

"அப்படியானால் ஏன் மதம் மாறவேண்டும்?"

ஆயிசா பதிலேதும் கூறவில்லை. அவள் என்ன நினைக்கிறாள் என்பதை சுகந்தனால் ஊகிக்க முடியவில்லை. என்றாலும் அவள் புண்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

**"ஆயிசா எனது மதத்தில் ஒரு கொள்கை இருக்கிறது"**
**"ஆகாஸாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம்**
**ஸர்வ தேவ நமஸ்கார: ஸ்ரீ கேசவம் ப்ரதி கச்சதி"**
என்று சொல்வார்கள்.

"இதன் பொருள் என்ன?"

"இது சமஸ்கிருதம். ஆகாயத்திலிருந்தது விழும் மழை கடலை சென்றடைவதுபோல எல்லா வழிபாடுகளும் ஒரே இறைவனை சென்றடைகின்றன என்பதுதான் அது."

"அதே இறைவனையே நாங்கள் அல்லா என்கிறோம்!"

அந்த விவாதத்தை சுகந்தன் நீடிக்க விரும்பவில்லை. ஆயிஷாவை மணம்முடிக்க வேண்டுமென்றால் அவன் நிச்சயம் கலிமா சொல்லி முஸ்லிமாக மாற வேண்டும். அல்லாஹ்வை ஒரே இறைவன் என்றும் முகம்மது நபி அவர்களே ஒரே இறுதி இறைத்தூதர் என்றும் சாட்சி சொல்வதே கலிமா எனப்படுகிறது. எல்லா நீரும் கடலுக்குத்தான் செல்கிறது என்றாலும் வெவ்வேறு அருவிகள் செல்லும் பாதைகள் முற்றிலும் வேறு அல்லவா? மனித மனம் வாழ்நாளில் செல்லும் பாதைகள் தொடர்பிலேயே அதிகம் சிந்திக்கும். இறுதி இலக்கு மட்டுமே இலட்சியமாக நினைப்பது ஞானிகளுக்கு மட்டுமே முடியுமான ஒன்றாக இருக்கலாம். சராசரி மனிதன் தான் பயணிக்கும் பாதை பற்றியே யோசிப்பான். இறுதி இலக்கு ஒன்றா யிருப்பது பற்றி சுகந்தனால் எப்படி அம்மாவுக்கு விளக்க முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் முழுவதும் கந்தசஷ்டி, கௌரிவிரதம், திருவெம்பாவை என்று வாழ்ந்து பழகிவிட்ட அவனது அம்மாவால் எப்படி மனம் மாற முடியும் என்று விளங்கவில்லை. அவனது அம்மாவால் ஒருபோதும் "அன்புள்ள அம்மா" ஆக முடியாது.

கலாசார வேறுபாடு இருந்தாலும் ஒரே மொழி பேசக்கூடியவள். எல்லாவற்றையும் விட தன்னை மிகவும் நேசிக்கக்கூடியவள் என்பதுதான் சுகந்தனுக்கு சிந்தனையாக இருந்தது. தினமும் அவளைப்பார்க்கும்போதெல்லாம் இவன் மனம் வேறு விதமாக வித்தியாசமாக இயங்கியது. இது வேண்டாம் என்று மூளை கொடுக்கும் அறிவுரைகளுக்கு இவன் மனம் காதுக்கொடுக்க மறுத்தது.

ஒருமுறை சுகந்தன் சொன்னான்.

"ஏன் ஆயிசா அபாயாவை மட்டுமே உடுத்து கிறாய்? சுடிதாரோ, ஜீன்சோ போடக்கூடாதா?

அடுத்தநாள் தொடக்கமே அபாயாவை கைவிட்டு வேறு உடைக்கு மாறினாள். அது மிகவும் அழகா இருந்தது. சுகந்தனுக்கு மிகுந்த திருப்தியாகவும் இருந்தது. இலகுவாக இவள் சூழ்நிலைக்குத்தகுந்தாற்போல மாறக் கூடியவள்தான் என்ற ஆறுதலும் ஏற்பட்டது.

"சுகு என்ன முழு சைவமாக மட்டும் மாறச் சொல்லாதே! என்னால் முடியாது!" என்று வேடிக்கையாக சொன்னாள். இவனும் ஒன்றும் முழுச்சைவம் கிடையாது. அவள் முன்பு கூறியது போல seasonal vegetarian தான்.

"வெளிநாடுகளில் எல்லாம் பலர் கலப்பு மணம் செய்து சந்தோசமாக இருக்கிறார்களாம். எந்த சமூக தொந்தரவும் இல்லை" என்று ஒருமுறை இயல்பாக சொன்னாள் ஆயிசா.

சுகந்தனுக்கும் அது உண்மை என்று பட்டது. இவன் இன்னும் தனது காதலை வெளிப் படுத்தவில்லை. காதல் இருந்தால் அதை வெளிப்படுத்த தேவையில்லை. அதுவே சந்தர்ப்பம் வரும்போது தன்னை வெளிப்படுத்தி விடும்.

இன்றுடன் இவர்களின் பழக்கம் தொடங்கி மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இலங்கையின் சுதந்திர தினத்தை கொண்டாடு வதற்கு இலங்கை தூதரகம் ஏற்பாடுகளை செய்திருந்தது. இன்று மாலையே இரவு விருந்து ஒன்றும் ஏற்பாடாகியிருந்தது. மிக உயர்தரமான Royal Five Course Dinner. விருந்து இனிமையான இசையுடன் ஆரம்பமாகியிருந்தது. ஆயிசா மிக உயர்தரமான ஆடை அணிந்து வந்திருந்தாள். அவளைப் பார்க்கும் போது சுகந்தனுக்கு சவூதி அரச குடும்பத்து இளவரசி போல தோற்ற மளித்தாள். அவளின் ஹிஜாப் அவளுக்கு மிகவும் மெருகூட்டுவதுபோல பட்டது. விருந்தில் சுகந்தன் சிவப்புவைனை அருந்தினான். ஆயிசா அதனை தவிர்த்துவிட்டிருந்தாள். "சுகு எங்களுக்கு அது ஹராம்" என்றாள். வெறும் தோடம் பழச்சாறு மட்டுமே அருந்தினாள். அன்றைய இரவு இருவருக்கும் மிக ரம்மியமாக இருந்தது.

விருந்து முடிவடையும் தருவாயில் ஆயிஷாவை நோக்கி ஒரு பெண் குழந்தை ஓடி வந்தது. அச்சொட்டாக ஆயிசா போலவே இருந்தது. அவளை "மம்மி" என்று கட்டிக் கொண்டது.

"இது உனது குழந்தையா?" சுகந்தன் அதிர்ச்சியுடன் கேட்டான்.

"ஆமா, எனது மகள்தான்"

இவனால் அதிர்ச்சியில் இருந்து மீள முடிய வில்லை. ஒரே கணத்தில் தாஜ்மகால் நொறுங்கியதான உணர்வு.

"இவளின் அப்பா எங்கே?" சுகந்தனுக்கு வாய் குழறியது.

"இவளுக்கு ஆறு வயதாகிறது சுகு. இவள் பிறந்தவுடன் தனியே விட்டுவிட்டு போனவன்தான். இவளுக்கு அப்பாவை தெரியாது. நான் அவனை துறந்துவிட்டேன்!"

குழந்தை சுகுவின் கரங்களை பற்றி "அங்கிள்" என்று இழுத்தது.

ஆயிசா சொன்னாள் "பாத்திமா Call him dada" என்று சொல்லிவிட்டு சுகந்தனின் விரல்களை தன விரல்களுடன் இறுக கோர்த்துக்கொண்டு அவனது தோளில் கனிவுடன் சாய்ந்தாள். எவ்வளவு துணிவாகவும், அழகாகவும் காதலை வெளிப்படுத்துகிறாள். Love is always Love என்று யாரோ ஒருவர் சொன்னது அந்தக்கணத்தில் சுகந்தனுக்கு ஞாபகம் வந்தது.

சுகந்தன் அவளின் தோளினை ஆதரவாக அணைத்துப்பிடித்தான். பின்னர் சொன்னான்

"என்மனதில் உனக்குள்ள இடம் முழுவதையும் இவளும் பங்கிட்டுக்கொள்ளுவாள்"

குழந்தை இருவருக்கும் நடுவில் இருவரது கைகளையும் பிடித்து இழுத்தபடி முன்னே நடந்தது.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கர்ப்ப உபநிஷதம்

இந்திய சிந்தனா வளர்ச்சி 2500 வருடங்களோ, அல்லது அதற்கு முற்பட்டதோ என அறுதியிட்டுக் கூறமுடியாது. குறிப்பிடத்தக்க ஆரம்பம் என உபநிஷதகாலம் என்ற கி. மு. ஏழாம் நூற்றாண்டை கூறலாம். What is living and what is dead in Indian Philosophy" என்ற நூலை எழுதிய Debi prasad Chattopadhyaya கூறுகிறார். உபநிஷதம் என்பது பலநூற்றாண்டுகளாக வாழ்ந்து புடம்போட்ட சிந்தனைகளின் சேர்க்கையே. தொடர்பறாத சிந்தனை வளர்ச்சியின் சேர்க்கையே உபநிஷதம். அவ்வாறான உபநிஷதங்கள் எத்தனை என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது.

அன்றைய உபநிஷத காலத்திலே உலகின் பல விந்தைகளை அறிந்து விடைகாணத் துடித்த ஒரு சமுதாயத்தைத் தரிசிக்கிறோம்.

இந்தப் பிரபஞ்சம்தான் யாது, இது எதிலிருந்து உருவாகிறது, எங்கே செல்கிறது அதற்கான பதிலோ, இவை சுயமாகவே உருவானது சுயமாகவே இயங்குகின்றன. பின் அவை சுயமாகவே அழிந்து விடுகின்றன. உபநிஷத ஆசிரியரோ கட்டுப்பாடற்ற சுதந்திர உணர்வை எதிலும் காண விரும்புகிறார். இத்தகைய சுதந்திர சிந்தனையையே எப்பொழுதும் வலியுறுத்த விரும்புகிறார் விவேகானந்தர் என Romain Rollend தனது 'விவேகானந்தர்' என்ற நூலில் குறிப்பிடுகிறார். Romain Rollend 1915இல் இலக்கியத்திற்கான Nobel பரிசு பெற்ற அறிஞர். அவர்மேலும் கூறுகிறார்.

ஆரம்ப கால இந்தியச் சிந்தனைகள் ஈரான் வழியாகக் கிரேக்கத்தை அடைந்து கிரேக்க சிந்தனையாளரை வளம்படுத்தியது. நீண்ட காலங்கட்குப்பின் Plotinus அறிவை வளம்படுத்த கிழக்கு நோக்கி வந்தார். இந்திய தத்துவ ஞானத்தை கற்றவர் மனதில் இந்திய உபநிஷதங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனால் அதன் தொடர்ச்சியாக இரண்டாம் நூற்றாண்டு Hellenic சிந்தனைகளில் நூற்றுக் கணக்கான கிழக்கின் சிந்தனைகளை எடுத்துக் காட்ட முடியும் என Romain Rollend கூறுகிறார் ( page 90- The Discovery of India -Jawaharlal Nehru)

சாந்தோக்கிய உபநிஷதத்தில் வியப்புக் குரிய கூற்று ஒன்று காணப்படுகிறது. சூரியன் ஒருபோதும் மறைந்து தோன்றுவதில்லை.



நாட்டிய கலாநிதி
**கார்த்திகா கணேசர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சூரியன் மறைவதாக எண்ணும்போது நாளின் இறுதியில் அவன் இடம் பெயர்கின்றான். அவன் மறுபக்கம் செல்ல இருள்பரவுகிறது. மக்கள் சூரியன் உதிக்கிறான் எனும்போது அவன் மறுபக்கத்தில் இருளாக்கி இடம் பெயர்கிறான். அவன் இடம் பெயர்கின்றானே தவிர அவன் ஒருபோதும் மறைவதில்லை.

மேலும் உபநிஷதங்கள் தொடர்ந்தும் உடல்வலிமையையும் தெளிந்த சிந்தனையையும் வலியுறுத்துகின்றன. எதை செயல்படுத்தியும் உடலையும் மனதையும் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அறிவைப் பெருக்கவோ ஒரு காரியத்தைச் சாதிக்கவோ கடின உழைப்பு, தியாகம், மெய்வருத்தம் பாராது உழைக்க வேண்டும் என்கிறது. இவ்வாறு கூறும் உபநிஷதம் உடற்கூற்றியல் மனித உருவாக்கம் பற்றி எல்லாம் தெளிவாகச் சிந்தித்து எழுதத் தவறவில்லை.

இந்த வகையில் கர்ப்ப உபநிஷதம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. கர்ப்ப உப நிஷதம் தாயின் வயிற்றில் உள்ள கருவளர்ச்சியைப்பற்றி விரிவான விளக்கத்தை அளிக்கிறது. பிறப்புக்குப் பிறகு மனித உடலின் உருவாக்கம் வளர்ச்சிபற்றிக் கூறுகின்றது. உடலின் பல்வேறு அம்சங்கள் பற்றி விரிவான விளக்கத்தைத் தருகின்றது. Paul Deussenஉம் மற்றையோரும் இதை உடலியல் அல்லது மருத்துவக் கையேடு எனக் கருதுகிறார்கள். இது நவீன உபநிஷத நூல்களின் 108 தொகுப்பில் 17 எண் என பட்டியல் இடப்பட்டுள்ளது. இப்பொழுது எமக்குக் கிடைக்கும் பிரதி கல்கத்தா கையெழுத்துப் பிரதியை ஆய்வு செய்யப்பட்டதாகும். இந்தப் பிரதியில் சில அத்தியாயங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இருந்தும் கிடைக்கும் பிரதி, தாயின் கருவறையில் சிசு உருவாவதிலிருந்து மனித உடற்கூற்றியல்பற்றிய பல விளக்கங்களைத் தருகிறது.

சிசுவின் உருவாக்கம்பற்றி பிற்பட்ட காலத்து ஆயுள்வேத நூல்கள் பேசியபோதும் கி. மு. ஏழாம் நூற்றாண்டிலே மிகத் தெளிவாக கர்ப்ப உபநிஷதம் ஆராய்ந்துள்ளது என்பதே பலரையும் வியப்பில் ஆழ்த்துகிறது. இவை இன்றைய மருத்துவ உலகில் நுண்நோக்கி (Microscope) மூலம் அறிவதை அன்று இவர்கள் எவ்வாறு கண்டறிந்தனர் என வியக்க வைக்கிறது. கர்ப்ப உபநிஷத்தில் கூறப்பட்டவை யாவற்றையும் நான் விளக்க வில்லை. கருப்பையில் கருத்தரித்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதையே இங்கு காண்போம்.

ஆண் பெண் சங்கமத்தின் பின் முதன் நாள் தாயின் கருவறையில் ஆணின் உயிர் விந்தும் பெண்ணின் கருவும் இணைந்த ஒரு நுண்ணிய சேர்கை உருவாகிறது. ஏழாவது இரவுக்குள் அது ஒரு குமிழியாக உருப் பெறுகிறது. 15ஆம் நாள் இரவு அது ஒரு கட்டியாக மாறுகிறது. ஒருமாத காலத்தில் அது கடின மாகிறது. இரண்டு மாதங்களின் முடிவில் தலை உருவாகிறது. கால்களின் பாகம் மூன்று மாதங்களுக்குள் தோன்றும். வயிறு இடுப்பு மற்றும் கணுக்கால் நான்காவது மாதத்தில் தோன்றும். முதுகெலும்பின் நெடுவரிசை ஐந்தாவது மாதத்தில் உருவாகிறது. ஆறாவது மாதத்தில் முகம் மூக்கு மற்றும் காதுகள் தோன்றும். ஏழாவது மாதம் கரு ஜீவனுள்ள ஆத்மாவாகிறது. எட்டாவது மாதத்தில் அனைத்து உடல் உறுப்புகளையும் கொண்டுள்ளது. ஒன்பதாவது மாதத்தில் கரு முழுமையாக உருவாகி வெளியே வரத்தயாராகிறது.

தென் இந்திய வரலாறு என்ற நூலை எழுதிய நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார், எமது கோயில்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கான நிலையமாக மட்டும் இயங்கவில்லை. இவை சமூகத்திற்கு வேண்டியப பல காரியங்களையும் செய்தன. வங்கிகளாக, கல்வி நிலையங்களாக, இயங்கிவந்தன. அங்கு காணப்படும் சிற்பங்கள், மக்களுக்கு அறிவூட்டும் வகையில் அமைந்ததை நாம் உணர முடிகிறது. இன்றுபோல யாவருக்கும் எழுதப் படிக்கத் தெரியாததால், கருத்தை மக்களுக்கு எடுத்து விளக்க கர்ப்ப உபநிஷதத்தில் கூறியதை சிற்பமாக வடித்திருக்கலாம். சோழ மன்னன் குஞ்சர சோழன் தான் கட்டுவித்த வர முக்தீஸ்வரர் ஆலயத்தில் ஆண்விந்து பெண்ணின் கருப்பையை நோக்கி செல்வதாக புடைப்புச் சிற்பமாக் காணப்படுகிறது. ஆண்விந்து கிடையாகச் சாய்ந்து இருக்கும் கும்பத்திலே ஒரு அரும்பை போட முயல்வதை காணலாம். இங்கு கும்பம் (குடம்) கருப்பையாகும்.

இந்தியப் பெருங்கண்டம் பூராவும் மங்கலப் பொருளாக விளங்குவது நிறைகுடம். இது தாய்மையின் நீர் நிறைந்த கருவறை. பன்னிரண்டு சக்திகளில் ஒன்று கிரணிய கர்ப்பகா


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஆகும். அதன் அர்த்தம் தங்க கருப்பை என்பதாகும். உயிரின் உற்பத்தி பெண் உடலில் தோன்றும். இதையே இங்கு சிற்பமாகக் காண்கிறோம். வரமுக்தீஸ்வரர் ஆலயம் தமிழகத்திலுள்ள அறியதுறையில் காண முடிகிறது. இந்தக் கோயில் 1000 வருடங்கட்கு முன் கட்டப்பட்டது.

வளர்ச்சியடைந்த சிசுவின் உருவை சிற்பமாக கால பைரநாதர் கோயிலில் காண முடிகிறது. இதுவும் தமிழகத்திலேயே உண்டு.

கர்பறக்ஷ் அம்பிகா சமேத ஸ்ரீ முல்லை வன நாதர் ஆலயம் திருக்கருகவூர், பாபநாசம் தாலுகா தஞ்சாவூர் கும்பகோணம் தெருவில் உள்ளது. இது இராஜராஜ சோழன் காலத்தில் 985-1014 கட்டப்பட்டது. இங்கு காணப்படும் கல்வெட்டுகளில் கர்ப்பம் பற்றி பேசப்படுவதுடன் இங்கு இறைக்கான விசேஷ ஆராதனைகள் கர்ப்பம் பற்றியதாக உள்ளது. இந்த ஆலயம் கர்ப்பத்திற்கான முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. ஒருகாலத்தில் இங்கு வைத்தியர்கள் மக்களுக்கு கர்ப்பத்திற்கான சகல உதவிகளை செய்து கொடுத்ததாக இருக்கக்கூடும் என ஆய்வாளர்கள் கருது கின்றனர்.

மேகாலயாவின் உஜ்யனியில் காணப்படும் லிங்கத்தில் இருந்து கீழே தட்டையாகக் காணப்படும் ஆவுடையார் வழியாக ஒரு பாம்பு போன்ற உருவம் போவதைக்காண முடியும். எமது இந்துக் கோட்பாட்டிலே சிவனும் பார்வதியும் உலகின் தந்தையும் தாயும். சிருஷ்டியின் அடையாளமே லிங்கம். லிங்கத்தில் உருவான ஆண் விந்து பெண்மையை சென்றடைவதாக மிகத்துல்லியமாக விளக்குகிறது இந்த லிங்கம்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது எம்மவர்கள் நுணுக்குக்காட்டி கண்டறிவற்கு முன்பே இவற்றையெல்லாம் வெகு துல்லியமாக அறிந்திருந்ததை உணர முடிகின்றது. கிறிஸ்துவுக்கு முன் 7ஆம் நூற்றாண்டுக்கு முதல் கண்டறிந்தது மட்டுமல்லாது அறிந்து கொண்டவை தொடர்பறாது விளக்கமாக சிற்பமாகவும் வடிக்கப்பட்டமையைக் காண்கிறோம்.

○○○

# காற்றோடு பேசுகிறேன்!

காற்றோடு பேசுகிறேன்
கற்பனையில் மகிழ்கிறேன்
நிசத்தினில் மறுக்கப்பட்ட
நினைவுகளில் களிக்கிறேன்
நிதர்சனமாய் வாழ்கிறேன்

எதிர்ப்பற்ற என்னுலகில்
நானே ராணி
புறக்கணிப்புகள் இல்லா உலகு
மனத்தில் கோடரித் தாக்குதல்கள் நடத்தப்படாத
மானபங்கங்கள் தொடராத
நித்தம் புது ரோசாவாய் மலர்ந்து
அழகில்லையென்று உணர்வுகளில்
ஆழமாய் ஆணிஅடிக்காத
காற்றோடு பேசுகிறேன்

படித்தும் பட்டம் வாங்கியும்
கறுப்புவண்ணம் என்றே
எட்டிவராத வரன்கள்
பொறுப்பில் பொசுங்கும் பெற்றவர்
உருக்கும் தனிமை விரக்தி
இத்தனையும் போக்க காற்றோடு பேசுகிறேன்
ரொக்கமில்லையென சொக்கட்டான் ஆடும்
திருமணச் சந்தையின் நிராகரிக்கப்பட்ட
ரணங்களின் வலிகளை
பரிதாபத்தோடு நோக்கும்
பார்வையின் மொழிகளை
வெறுக்கும் மனதின் வலியோடு
நித்தம் சிலுவை சுமப்புகளை
காற்றோடு பேசுகிறேன்
கவிதைகளாய் வரிக்கிறேன்

காற்றே தோழியாய் பறவைகளின் ஒலியே
காலைப்பண்ணாய் நிசப்தமான பொழுதுகளிலும்
தென்றலாய் தழுவி தாலாட்டி மனவலிகளுக்கு
ஒத்தடம் தரும் வஞ்சமற்ற உறவாய்
மூலைக்குள் முடங்கியிருக்கும்
துர்ப்பாக்கியவாதியான முதிர்கன்னியின்
உணர்வுகளை மூச்சிலே கலந்து
முகாரியாகவல்ல மோகனமாகவே
நித்தமும் காற்றோடு பேசுகிறேன்

**கீத்தா பரமானந்தன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# கூப்பன் பொத்தகம்

இரண்டாம் விசுவாமித்திரன்

"புள்ள கெதியா தேத்தண்ணி ஒண்டு ஊத்தித் தா. பேப்பர் வாசிக்கப் போறன்.."

மீராலெவ்வப் போடியாரு தேத்தண்ணியக் குடிச்சிட்டு பேப்பர் வாசிக்கத் தோங்கினாரு.

அவரு பேப்பர் வாசிக்கிறது ஒரு கல. அதப் பாக்கிறதுக்கு சோட்டயா இரிக்கிம். றாக்கைல பத்திரமா இரிக்கிற கண்ணாடிப் பொட்டிய எடுத்து வந்து மான்தோல் விரிச்ச சாய்மனக் கதிரயில வசதியா இருந்து பொட்டிய தொறந்து கண்ணாடிய கவனமா வெட்டல எடுப்பாரு. சாறன்ட தொங்கலால கண்ணாடி ரெண்டயும் அதுக்கும் நோகாம கைக்கும் நோகாம லேசா தொறைப்பாரு. பொறகு மொகத்தில போட்டு ஒருக்கா அண்ணாந்து பாப்பாரு. இனி வாசிக்கலாம் ண்டு அவர்ர மனம் செல்லும். அப்ப வாசிக்கத் தோங்குவாரு.

பேப்பர வாசிக்கத் தோங்கினா கிட்ட ஆரும் நிக்கப் பொடா. ஒவ்வொரு பக்கமா ஒவ்வொரு எழுத்தா வாசிப்பாரு. மனசிக்குள்ளால வாசிக்காரா சத்தம்போட்டு வாசிக்காரா ண்டு தெரியாத அளவுக்கு சின்னொரு சத்தம் கேக்கும்.

"வெளயாட்டு வெசயத்தயும் வசுக் கோப்புக் காரி அரவாசி உரியானோட இரிக்கிற படத்தயும் போட்டுப் போட்டு பேப்பர நெறச்சிப் போட்டானுகள்."

பேப்பர்காரனுகளோட போடியாருக்கு கோவம் வருகுது. அவரு அதுகள மட்டும் தான் வாசிக்கிறெல்ல. மத்தபடி ஒவ்வொரு எழுத்தயும் வாசிச்சிப் போட்டுத்தான் முடிப்பாரு. பேப்பர்ல அரவாசி துப்பணியால நலஞ்சிரிக்கும். வாசிச்சி முடிச்சா பகல் சாப்பாட்டுக்கு செரியா இரிக்கும்.


இண்டைக்கி காலத்தால வெளிய போனவரு வரக்கொள்ள ஒரு பேப்பர் எடுத்துக்கிட்டு வந்து வாசிக்காரு.

இந்தியாவில வெவசாயிகள் கச்சயோட நிண்டு போராட்டம் செய்ர படமும் அதோட என்னயோ வெளக்கமும் போட்டிருந்ததக் கண்டுக் கிட்டாரு.

கொஞ்ச நாளக்கி முந்தி வெவசாயிகள் எல்லாரும் ஒண்டு சேந்து இந்தியாவில போராட்டம் செஞ்சாக. ரேடியோவில டீவிலயெல்லாம் அதப் பத்தித்தான் கதச்சாக. பேப்பரெல்லாம் வெவசாயிகள் வெயிலுக்க வெறும் மேலோட கச்சயோட நிக்கிற படத்தத் தான் போட்டிச்சி. அதெல்லாம் அவருக்கு ஞாபகம் வந்திச்சி.

இப்ப நம்முட நாட்டுல செரியான ஒணவுப் பஞ்சம். முந்தியொருக்கா இப்படியான பஞ்சமொண்டு வந்த நேரத்திலதான் மக்களுக்கு கவுண்மேந்து கூப்பன் பொத்தகம் குடுத்த. குஞ்சி குறுமான், பிள்ள குட்டி, பெரியாள் சின்னாள் ண்டு பாராம எல்லாருக்கும் கூப்பன் பொத்தகம் கெடச்ச. கூப்பன் கடயில சாமான் கெடச்சிச்சி. இப்ப கூப்பன் பொத்தகமும் இல்ல. கூப்பன் கடயும் இல்ல. கூப்பன இல்லத்தாக்கின பொறகு கொஞ்சச் சனங்கள ஏழச் சனங்களாக் கணக்குப் போட்டு ஜனசவிய ண்டு சாமான் குடுத்தாக. ஜனசவிய மாறி இப்ப சமுத்தி வந்திரிக்கி.

இண்டைய பேப்பர்ல வந்த வெவ சாயிகள்ர படத்தப் பாத்தோடன அவருக்கு இதெல்லாம் ஒண்டுக்குப் பின்னால ஒண்டா ஞாபகம் வந்திச்சி.



**இரண்டாம் விசுவாமித்திரன்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்த நேரமாப் பாத்து கேத்தடில ஆரோ கூப்பிர்ர சத்தம் கேட்டிச்சி. பேப்பர கைல வெச்சிக்கிருந்தாப்போல தலய கெழுச்சி கேத்துப் பக்கம் பாத்தாரு

புளியர்ர மகன் நிக்கான்.

புளியர்ர தத்தி ண்டா ஊர்ல எல்லாருக்கும் தெரியும். புளியருக்கு ஏழெட்டு ஆம்பிளப் புள்ளயள். அதில ஒரு ஆள்தான் ன்னா போடியார்ர ஊட்ட வந்து நிக்கிறவன். போடியார்ர பழய கூட்டாளி. ஒண்டாப் படிச்சவன். செரியான கரப்பத்தான் பூச்சி. எல்லா எடத்திலயும் நிப்பான். அவனுக்குத் தெரியாத வெசயம் ஊர்ல ஒண்டுமில்ல. ஊருக்குள்ள போட்டுக் கோழியொண்டு களவு போனதில இருந்து வளஞ்ச வட்ட கெழல் கண்டத்துக்க ஆன வந்து அழிச்சாட்டியம் பண்ணயும் கரண்டு வேலி போட்ட வெசயம் வர அவனுக்குத் தெரியும்.

"காலமில்லாக் காலம். என்ன ந்தப் பக்கம்"

போடியாரு அவன உள்ள கூப்பிட்டாரு.

"கம்புக்கட்டுக்க பேப்பரும் கைல மீன் கோருவயுமா நீங்க வந்ததக் கண்டன். கன நாளாக் கதைக்கல்ல. பேசல்ல. ஒங்களக் கண்டு கதைக்கிற வேலயும் ஒண்டு இருந்திச்சி. அதான் வந்தன். காலயில எங்க போன" புளியர்ர மகன் கேட்டான்.

"காலத்தால சூரியன் தலயக் கெளப்பி பொழுது விடியிற நேரம். பச்சத் தண்ணியால வாயக் கொப்பளிச்சி பொஞ்சாதி தந்த இஞ்சி போட்ட தேத்தண்ணிய குடிச்சிக்கிட்டிருந்தன். அந்நேரமாப் பாத்து வயல்காரன் வந்து சேந்தான். அவனுக்கிட்ட மூணு மூட வெத நெல்லு எடுத்து கொளத்தில எளகப் போடு. நான் கொஞ்சம் சொணங்கி வாறனண்டு சென்னன்".

போடியாரு மூச்சி உடாம தொடந்து செல்லிக்கிட்டே இருந்தாரு.

"தண்ணிச்சோறு திண்டிட்டு கொளத்தங்கரப் பக்கம் போனன். கொஞ்சம் தள்ளி மத்தக் கரையில அத்தாங்கு போட்டு ஒருவன் மீன் புடிச்சிக்கிட்டிருந்தான். கறிப்பாட்டுக்கு என்னயும் பாப்பமெண்டு அந்தப் பக்கம் போனாப்போல கொக்கிசான் மீன் நாலஞ்சி கெடந்திச்சி. அத வெலயக் கேட்டு வாங்கி ஆத்து வாழ நாரால கோருத்து எடுத்துக்கிட்டு ஊட்ட வந்தன். வரக்கொள்ள வாசிக்கிறதுக்கு பேப்பர் ஒண்டும் வாங்கிட்டு வந்தன். அதத்தான் நீ கண்டிரிக்காய்".

படுத்தெழும்பி கொளக்கட்டுக்குப் போனதில இருந்து பேப்பர வாங்கிட்டு ஊட்ட வந்தது வரைக்கும் ஒவ்வொண்டாச் செல்லி முடிச்சாரு.

போடியார்த்தனத்த தள்ளி வெச்சிட்டு பழய கூட்டாளித்தனம் முன்னுக்காயிச்சி. மனந்தொறந்து ரெண்டு பேரும் பேசத் தோங்கினாக.

"பேப்பர்ல என்ன கெடக்கு" புளியர்ர மகன் கேட்டான். "பேப்பர்லெண்டா நம்மிட நாட்டு வெசயம் பெரிசா ஒண்டுமில்ல. ஆனா இந்தியாவுல வெவசாயிகள் கச்சயோட நிண்டு போராட்டம் செய்ர படத்த இண்டைய பேப்பர்ல போட்டிருக்கானுகள்."

"வேறென்னவெசயம்போட்டிருக்கானுகள்" புளியர்ர மகனுக்கு புதிசா என்னென்டான வேணும்

"வேற ஒண்டுமில்ல. வெவசாயிகள்ர அந்தப் படத்த பாத்தோடன எனக்கி நம்முட நாட்டில அந்தக் காலத்தில பாவிச்ச கூப்பன் பொத்தகம்தான் நெனப்பு வந்திச்சி. ஒனக்கு கூப்பன் பொத்தகம் ஞாபகம் இரிக்கா"

கூட்டாளியக் கேட்டாரு.

புளியர்ர மகனுக்கிட்ட இருந்து வெளக்கம் வரத் தோங்கிச்சி.

"பொத்தகமெண்டா நாம வாசிக்கிற மாதிரிப் பொத்தகமில்ல போடியார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பன் பொத்தகம் பென்சில்ர ஒசரம் இரிக்கிம். மட்டய ரெண்டா மடிச்சாப்போல பொத்தகம். நாலு பக்கம். ஒணவுப் பங்கீட்டு அட்ட ண்டு மொதல் பக்கத்தில அச்சடிச்சிரிக்கும். அதுர கடசிப் பக்கத்தில ஒரு வெவசாயிர படம் போட்டிரிக்கிம். கச்ச கட்டின வெவசாயி கைப்பொட்டியோட நிண்டு வயலுக்க நெல்லு வெதைக்கிற படம். அந்தப் படத்தயும் பேப்பர்ல கெடக்கிற படத்தயும் பாத்துத்தான் ஒங்களுக்குக் கூப்பன் பொத்தகம் ஞாபகம் வந்திரிக்கிம். என்ட நெனப்புச் செரிதான போடியார்''.

புளியர்ர மகன்ட கதயக் கேட்டு போடியாருக்குச் செரியான சந்தோசம். போடியார்ர சந்தோசத்தப் பாத்து கூட்டாளிக்கு சந்தோசம்.

கூப்பன் பொத்தகம் அவகிட கதயில உசிரு பொழச்சி வந்துக்கிருந்திச்சி

"போடியார் இன்னம் கொஞ்சம் கேளுங்க. கூப்பன் பொத்தகம் மூணு தெரிப்பா இரிக்கிம். கொழந்தக் கூப்பன், புள்ளக் கூப்பன், சாதாரண கூப்பன். மூணும் மூணு கலர்ல இரிக்கிம், நான் செல்ற வெசயம் செரியா பொழயா''

தலையால ஓமெண்டு சென்ன போடியாரு கூப்பன் பொத்தகம் பத்தி வேற செல வெசயம் சென்னாரு.

"நீ செல்றது சரி. கூப்பன் பொத்தகத்தில உள்ளுக்கு முத்திர மாதிரி ஒண்டு ரெண்டு மூணு ண்ட எலக்கம் போட்டிரிக்கும். கெழமைக்கு ஒருக்கா கூப்பன் கடயில கொண்டு போய் எல்லாக் கூப்பனயும் குடுத்தா ஒவ்வொரு கூப்பன்லயும் எலக்கம் போட்ட ஒரு புள்ளிய வெட்டி எடுத்துக்கிட்டு மெனெச்சரு சாமான் தெருவான். அரிசி, பருப்பு, கறுத்தச் சீனி, பயறு, கடல, மாசி, ஆன மார்க்கு நெருப்பொட்டி, உடுப்புக் கழுவுற சன்லைட்டுக் கட்டி. இப்பிடி தேவயான சாமானுகள் கெடைக்கிம். சாமானுகள செரியா நிறுத்துத் தெரயும் மாட்டானுகள். ஒழுப்பத்தப் புடிச்சிக்கிட்டுத்தான் தெருவானுகள். கூப்பனுக்குக் கெடைக்கிற பிச்சாட்டரிசிய நம்மிட சனம் பெரிசா சாப்பிட மாட்டா. அந்த அரிசிய வேணாண்டு செல்லிப் போட்டு அதுக்குப் பதிலா வேற சாமானுகள வாங்குவாக''.

போடியாரு இதுகளச் செல்லி முடிச்சிட்டு இன்னொரு வெசயமும் சென்னாரு.

"கூப்பன் பொத்தகத்த வெச்சி கொஞ்சப் பேரு காசி ஒழச்சானுகள். கூப்பன்கட மெனச்சர் மாரு ஊருல பெரிய பணக்காரணெண்டு ஒலாத்தினானுகள். எல்லாம் ஏழச் சனத்திரயச் சொரண்டி குறுக்கு வழியால ஒழச்ச பணம்''

இன்னொரு கதயும் இரிக்கிண்டு புளியர்ர மகன் சென்னான்.

"செல பொம்புளயள் கூப்பன் புடிப்பாக. கூப்பன் புடிக்கிறெண்டா ஏழச்சனங்களுக் கிட்டருந்து கூப்பன் பொத்தகத்த மொத்தமா வாங்கி ஒவ்வொரு கூப்பனுக்கும் கொஞ்சம் கொறச்சி குத்து மதிப்பா காசி குடுப்பாக. பொறகு கூப்பன் புள்ளிய வெட்டி ஒட்டி மனெச்சருக்கிட்டக் குடுத்து லாவம் வெச்சிக் காசி வாங்குவாக. இல்லாட்டி சாமான வாங்கி அத யாவாரிமாருக்குக் குடுத்து காசி ஒழைப்பாக. கூப்பன் புடிச்சி நாலு கொமரக் கரயேத்தின கதயும் இரிக்கி''

"இனி கூப்பன் பொத்தகத்திர கதய உடுவம். என்னோட கதைக்கிற வெசயம் ஒண்டு இரிக்கிண்டு சென்னாய்லா. என்னெண்டு அதச் செல்லன்.''

போடியாரு ஆவலோட கேட்டாரு.

"ஒண்டுமில்ல போடியார். ஒங்களுக்கும் சமுத்தி கெடைக்கிதாம். போடியாருக்கு என்னடா சமுத்தி ண்டு ஊருக்குள்ள அரசல் பொரசலா ஒரு கத இரிக்கி. பெரச்சின வரும்போல தெரியிது. ஒங்களுக்கு சமுத்தி இரிக்கா. அது மெய்யாண்டு கேக்கத்தான் வந்தனான்''

புளியன்ட மகன் சும்மா வருவானா? சோழியன்ட குடுமி சும்மா ஆட மாட்டா. போடியாரு மனசிக்க நெனச்சிக்கிட்டாரு.

கதச்சி முடியிர நேரமாப் பாத்து புளியர்ர மகன்ட பக்கட்டுக்க இருந்து போண் மணி அடிச்சிச்சி. காதுக்க போண வெச்சிக்கிட்டு கதச்சிக் கதச்சி வெளிய போனான்.

"போடியார் நான் அவிசிரமாப் போகணும். பொறகு ஒரு நாளக்கி வாறன்''

கேத்தடிய நிண்டு செல்லிக்கிட்டு அவன் எங்கயோ பறந்து போறான்.

போடியார்ர மனசிக்க படக்கு படக்கு ண்டு அடிக்கத் தோங்கிச்சி. சால்வய எடுத்து ஒதறி தோள்ள போட்ட போடியாரு யாரயோ பாக்கக் கெளம்புறாரு.

வாசல்ல படுத்துக் கெடந்த கறுத்தப் பூன ஒரு முடிவும் எடுக்காம தலய ஒசத்திப் பாக்குது.

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாறுகால நீதி மற்றும் இடைக்கால நீதியில் சமூக நிறுவனங்களின் பொறுப்புடைமை

**(யாழ் விஞ்ஞான சமூகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவு நடாத்திய 29வது வருடாந்த ஆய்வு நிகழ்வில், புகழ்பெற்ற ஆளுமைகளின் விரிவுரையாக 31.04.2023 வெள்ளிக்கிழமை யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நிகழ்த்தப்பட்ட கலந்துரையாடலின் எழுத்துரு வடிவமாக இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது)**

### அறிமுகம்

இலங்கையில் போர் முடிந்து அல்லது யுத்தம் முடிந்ததாக அறிவித்து 14 வருடங்கள் கடந்து விட்டன. கடந்த 40 வருட காலச் சக்கரத்தின் தடங்கள் போரின் தாக்கங்களினாலும், ஆயுத நெருக்கடிகளின் பாதகமான சூழ்நிலைகளினாலும், அதிகம் காவுகொள்ளப் பட்டே இருந்திருக்கின்றது. 1991ல் இந்திய அமைதி காக்கும் படையின் இறுதி இராணுவம் இன்று போன்றதொரு தினத்தில்தான் இலங்கையிலிருந்து வெளியேறி இருந்தது. இருப்பினும் பொருளாதார ரீதியில் இன்னமும் தேசிய அரசுகளில், அண்டைநாடுகளில், அன்னிய தேசங்களில் தங்கி வாழவேண்டிய நிலையில் சமகால மக்கள் வாழுகின்றனர். இத்தகைய பின்னணியில் நிலைமாறுகால நீதி அல்லது இடைக்கால நீதி அன்றேல் இடர்கால மாற்றீட்டு நீதி தொடர்பில் சமூக நிறுவனங்களின் பொறுப்புடைமை குறித்து நிகழ்கால இருப்பையும், யதார்த்தத்தினையும் உணரவைக்கச் செய்யும் பொருட்டு சமகாலத்தே அனைவரும் கண்ணோட்டம் செலுத்துவது அவசியமாகிறது.

### சமூக நிறுவனங்கள் என்பன யாவை?

முறைசார்ந்த, முறைசாரா அல்லது கட்டமைக் கப்பட்ட, கட்டமைக்கப்படாது தாமாகவே தொண்டு அடிப்படையில் கூடிக் கலைந்து செல்லும் குழுமங்கள், குழுக்கள், வலைப் பின்னல்கள், சமூக நிறுவனங்கள், சமூகத்தின் நிலைகள் என சமூக நிறுவனங்கள் தனியன் களின் தொகுதியையும் சமூகத்தின் பிரஞ்ஞை யினையும் "சமூக நிறுவனம்" என வரை விலக்கணப்படுத்தலாம். குறிப்பிட்ட "சமூக நிறுவனத்தின்" நோக்கு தனியன்களின் தொகுப்பாகவும், பன்னோக்குக் கொண்டதாகவும், சமூக பிரஞ்ஞைக்கான வெளிப்பாடாகவும் அமைந்து காணப்படலாம். யுத்தத்தின் பின்பு சமூக நிறுவனங்கள் என்பதற்குள் அரசசார்பற்ற தொண்டு அமைப்புக்களும், கம்பனிகளும், வலிந்து உதவும் தொண்டர் அமைப்புக்களும் உள்வாங்கப்பட்டு இருந்தமையும் நோக்கத் தக்கது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், கிராமிய மேம்பாட்டுச் சங்கங்கள் என சிறப்பாக இன்னமும் ஏதோ ஒரு வகையில் செயற்பட்டு வரும் அமைப்புக் களும் சமூக நிறுவனங்களுக்கான சிறந்த உதாரணங்களே ஆகும்.

### கணக்கு ஒப்புவிப்புப் பொறுப்புடைமை சார்நீதி

போர் அல்லது ஆயுத நெருக்கீடுகளுடன் "சமூகம்" என்பது குறித்ததொரு நிறுவனம் சார்ந்திருந்த போர்க்காலங்களில், நிகழ்ந்த அநீதிகள், போர்க்கால விதிமுறைகள் பின்பற்றப்படாமை குறித்த குற்றச் சாட்டுதல்கள் கணக்கில் எடுத்துக் கொளளப்பட்டு, கணக்கு ஒப்புவிப்பு (Accoutability) பொறுப்புடைமை



**கலாநிதி . ஜெகநாதன் தற்பரன்** (L.L.M)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Liabilities) என்பிக்கப்படுவதற்கு உலகில் பல்வேறு முறைமைகள் (Means and Methods) அணுகும் விதங்கள் பின்பற்றப்பட்டிருந்தன.

இத்தகு நிலைகள் மாறுகின்ற போதான காலப்பகுதிகளில் நீதி நிலைநாட்டப்படுவதற்கு நிலைமாறுகால நீதி (Transformative justice) முன்னர் இருந்த நிலைமைகளுக்கு மீளவும் எடுத்துச் செல்வதற்கு மீள் உருவாக்க நீதி (Restorative Justice), இடைக்காலத்திற்குப் பொருத்தமான ஒரு நீதியை சமூக நல்லிணக்கத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்கால நீதி (Transitional Justice), பாதிப்புக்கு உள்ளாக்கியவர்களைப் பழிவாங்கல் என்பதனை வலியுறுத்தும் சட்டவாட்சிக்கான நீதி (Retributive Justice) என கணக்கு ஒப்புவிப்பு பொறுப்புடைமைசார் நீதி மற்றும் சட்டவாட்சி (Justice and Rule of Law) சார்ந்த விடயப்பரப்புக்கள் யாவும் பரந்த விடயப்பரப்புக்களைக் கொண்டவை.

இத்தகு பின்னணியில் சமூக நிறுவனங்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களையும், சிறப்பான எதிர்கால வாழ்வையும், கட்டியெழுப்ப வல்லதான நிகழ்ச்சி நிரல்களினை செயற்படுத்துகின்றனவா? அவ்வாறாகச் செய்தால் அத்தகு செயற்பாடுகள் மக்களின் மத்தியில் சாதகமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய ஏது நிலைகளைக் கொண்டுள்ளனவா? எதிர்மறை அல்லது பாதகமான விளைவுகளினை இல்லாது, நீர்த்துப் போகக்கூடியதான அன்றேல், அத்தகு நிலைமைகளினை நலிவடையச் செய்யத்தக்கனவாகக் காணப்படுகின்றனவா? என்கின்ற கேள்விகளை முதன்மைப்படுத்தி சமூக நிறுவனங்களின் பங்கும் செயற்பாடும் நான்கு முக்கியமான விடயப் பரப்புகளில் இக்கட்டுரையில் அணுகப்படுகின்றன.

(1) நேரிய தொலைதூர இலக்குக்கு சரியான பாதை எது?
(2) எமது கோரிக்கை என்ன?
(3) சட்டவாட்சி முறைமை எது?
(4) எமது சமூகத்தின் அர்ப்பணிப்புடனான ஈடுபாடு?

## 1. நேரிய தொலைதூர இலக்கும் சரியான பாதையும்

1983 ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து அல்லது அதற்கும் முன்பு 1956ல் இருந்து தமிழ் பேசும் மக்கள் 1956 தொடக்கம் 1983 வரை, 1983 தொடக்கம் 1987 (இந்தியாவுடனான- ஒப்பந்த காலம்)வரை, 1987 தொடக்கம் 1991 வரை (இறுதி இந்திய இராணுவம் வெளியேறும் வரை), 1992 தொடக்கம்1995 வரை (இலங்கை இராணுவத்தால் யாழ்குடாநாடு கைப்பற்றப்படும் வரை), 1995 தொடக்கம் 2001 வரை (சமாதான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் வரை), 2006 தொடக்கம் 2009 வரை எனப் பல்வேறு கால கட்டங்களைக் கடந்து வந்துள்ளனர். அரசாங்கங்கள், மற்றும் அரசின் மூன்று அலகுகளும் (நிர்வாகம், சட்டம், சட்டவாக்கம்) சமூக நிறுவனங்களினை நல்லிணக்கம் சார்ந்த நடைபடி முறைமைகளினை சரிவர நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒருமித்து அமுலாக்குவதற்கு அனுமதிக்காத காலப்பகுதியாகக் காணப்பட்ட காலமது.

அதிகாரப்பரவலாக்கம், சட்டவாட்சியின் குறைபாடுகள், மனித உரிமைகள் மீறப்படுதலினைக் கண்டித்தல் எனப் பல கோரிக்கைகள் சமூக நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்டிருந்தபோதும், அரசியல் சார் குடியியல் உரிமைகளினை மட்டும் நோக்கியதாக முதன்மைப் படுத்துவனவாக சமூக நிறுவனங்களின் செயற்பாடுகள் அமைந்து காணப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசினால் முதன்மைப்படுத்தப்படாத அல்லது கவனிக்கப்படாத விடயப் பரப்புக்களுக்கு முதன்மை கொடுக்கத் தலைப்பட்டபோது ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட குழுவும் (Presidential Task Force-PTF), அரசசார்பற்ற அமைப்புக்களின் செயலகமும் (NGOs Secretariate), அரசுசாரா சமூக நிறுவனங்களைக் கட்டுப்படுத்த முயற்சித்தன.

அரசியல் சார், தேர்தல் பரப்புரைகளில், நிதி வளங்களினைக் கையாள்வதில் சமூக நிறுவனங்கள், அரசின் கடும்போக்குக்கு ஆளாகின. 2009ம் ஆண்டின் பின்பு நிலைமைகள் சீராகக் காணப்படுவதாகக் கருதப்படினும் சமூக நிறுவனங்கள் மீதான சட்ட வரையறைகள் இவ்வருடத்தில் வெளியிடப்பட்ட வர்த்தமானி வெளியீடுமூலம் மீளவும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.


கூட்டுறவு, நல்லிணக்கம் போன்ற சமூக அமைப்புக்களின் தாரக மந்திரங்கள் இந்நிலைமை காரணமாக மேலும் நலிவுற்ற நிலைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களினையும், சமூக நிறுவனங்களினையும் எடுத்துச் செல்கின்றன. இது அபாயகரமான, அனர்த்த நிலைக்கு ஏதுவான அடிப்படையினைத் தோற்றுவிப்பதான அரச ஆக்கிரமிப்பு நிலைக்கு தள்ளிச்செல்லும் ஏதுநிலைகளே சமகாலத்தில் காணப்படுகின்றன.

சீரியவாழ்வும், ஜனநாயகப் பண்பும், வளச் சுரண்டலும், பொருளாதாரம் சார் நன்மைகள் ஊக்குவிப்பு செய்யப்படல், எனத் திட்டமிடப்பட்ட ஏகாதிபத்தியம் அரசினாலும், அரசு உந்துதல் செய்யும் சமூகக் கட்டமைப்புக்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மனித உரிமைகள் மீறப்பட்டாலும் பொருளாதாரம் மேலோங்கினால் நாடு வளம் பெறும் என்கின்ற அபரிமிதமான எண்ணம் (சீனாவின் மகுட வாக்கியம்) நடைமுறைக்கு வந்துவிட்ட நிலைகளே சமகாலத்தில் காணப்படுகின்றன. இதன் மூலம் அசாதாரண வாழ்வு நிலையைக் கூட மக்கள் சாதாரண வாழ்வு நிலையாக ஏற்றுக் கொள்ளப் பழக்கப்பட்டிருப்பர்.

ஆதலினால், சமூக நிறுவனங்கள் ஏற்புடைத்தான சாதாரண வாழ்வு, ஏற்றுக் கொள்ளக் கூடிய வாழ்வு முறைமை, அசாதாரண வாழ்வு முறைமைகளினை நிலைபேறானதாக வைத்திருக்கவும், அதற்கு அமைவாக அரசாங்கத்தினை தேர்வு செய்யவும் மக்களை விழிப்பு நிலையில் வைத்திருத்தல் அவசியம். இதனைப் பின்வரும் வரைபு மூலம் விளங்கிக் கொள்ளலாம்.




(A) இவ் வரைபுகளில், காலத்திற்குக் காலம் முன்னேற்றமான பரிணாம வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருக்கும் மனித வாழ்வு சமூகத்துடன் நல்லிணக்கத்தினை, உலக அமைதியினை நோக்கி நகரும். பொருளாதார சமூக உரிமைகள் சீரிய முறையில் வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருக்கும். மனித உரிமைகள் யதார்த்தமாகும். மனிதம் மேம்படும். என்கின்ற கருத்தினை (A) பிரதிபலிக்கின்றது.

(B) மேற்படி (A) யினை அண்மித்ததாக சிறு அசைவுகள், மாற்றங்கள், ஏற்படக்கூடிய ஏதுநிலைகள் காணப்படலாம். உள்ளூர் வெளியுலக தொடர்பு , பணவீக்கம், உள்ளூர்ப் போர் எனப் பல நிலைமைகள் காரணமாக (B) என்கின்ற இந்நிலை ஏற்படலாம். (A) யுடன் ஒன்றிச்செல்லல் என்கின்ற கருத்தினை (A) பிரதிபலிக்கின்றது.

(C) (A) யிலிருந்து முற்றிலும் விலகி (B) அல்லாத புதிய ஒரு வாழ்வு முறைக்கு இட்டுச் செல்லல். என்கின்ற கருத்தினை (C) பிரதிபலிக்கின்றது.

இங்கு (A) உம், (B) உம் மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றபோது புதிய ஒரு வாழ்வு முறையாகிய (C) என்னும் நிலைமை கூட சாதாரணமாகி விடுன்றது. சிறந்த உதாரணம் அண்மையில் (2023), இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட பொருட்களின் விலை உயர்வும், பொருளாதார மீட்சிக்கான ஜனாதிபதியின் யுக்தியும் நோக்கப்படலாம்.

இதே நிலைமை முற்றிலுமாக விலத்திச் செல்கின்ற போதும், அசாதாரணமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற போதும் (C) யினை மக்கள் ஏற்றுக் கொள்கின்ற போது (C) எனும் அசாதாரண நிலை (A) எனும் சாதாரண நிலையாக மாற்றமடையும். இதுவே வாழ்வு என மக்கள் பழகிக்கொள்வர். இலங்கையின் வடபுலத்தே இராணுவத்தின் ஆட்சியினை மக்கள் 1995ற்குப் பின்பும், 2009ற்குப் பின்பும் ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டனர் என்பது இதற்குரிய சிறந்த எடுத்துக்காட்டு.

இவ்வாறாக சீரிய வாழ்வு குறித்த எண்ணக் கருக்கள் துலாம்பரமாக சமூக நிறுவனங்கள் மூலம் மக்களுக்குத் தெளிவுற, நயம்பட எடுத்துச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு சமூகத்திற்கு உண்டு. செயற்படாமல் உள்ள கூட்டுறவுச் சங்கங்களும், சனசமூக நிலையங்களும் குறிப்பிட்ட வரையறைக்குள் தம்மைக் மட்டுப்படுத்தாது விரைவாக செயற்படதிட சங்கற்பம் பூண வேண்டும்.


2. **கூட்டான எமது கோரிக்கை என்ன?**

கணக்கு ஒப்புவிப்பு பொறுப்புடைமை சார் நீதியில் முன்வைக்கப்படுகின்ற, முதன்மை பெறும் முறைமைகளில் நான்கின் விபரிப்புக்கள் பின்வருமாறு :

I. **மீள்கட்டுமானம் செய்யப்படலுக்கான நீதி** - Restorative Justice

**நெருக்கீட்டுக்கான எதிர்காலம் முன்வைப்புக்கள்**

- பாதிப்புக்குள்ளானவர்களுக்கான நிவாரணம்/இழப்பீடு.





- சமூக நல்லிணக்கம்
- குற்றப்பொறுப்புடைமை

இவற்றின் மூலமாக முன்னர் காணப்பட்ட நிலைமைக்கு சமூகத்தினை மீளிணைவு செய்தல். உதாரணமாக, இலங்கை மக்கள் இயல்பாகவே நல்லிணக்கத்துடன் முன்பு வாழ்ந்தவர்கள் எனக் கருதினால் சமகால எத்தனிப்புகள் மூலம் அதே நிலைமைக்கு மீளக்கொணர்தல். சிங்கள, முஸ்லீம், தமிழ் என்ற பேதம் இன்றி அனைவரும் ஒன்றாக வாழத் தலைப்படல் என்பதான நிலைமை.

I. **இடைக்கால நீதி** – Transitional Justice

நிகழ்ந்ததாகக் கருதப்படும் உரிமை




மீறல்கள், போர்க்கால யுத்தவிதி மீறல்கள் விசாரிக்கப்பட்டு, சர்வதேச /உள்ளூர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உண்மைகள் இனங்காணப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டு, மன்னிப்புக் கோரி அவை வழங்கப்பட்டு சமூக நல்வாழ்வுக்கு வித்திடுதல் என்பதான முறைமை. இங்கு எக்காலம் என்பதுவும், விசாரணை முறைமை என்பதுவும், அடையவிரும்பும் இலக்கு என்பதுவும் அணுகப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக தென்னாபிரிக்காவின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுப் பொறிமுறையைக் கருதலாம்.

I. **நிலைமாறுகால நீதி** – Transformative Justice

நிலைமாறுகால நீதி - இங்கு காலங்கள் மாறுகின்ற பொழுது இயைபான நீதி என்பது சுதந்திரமானதும் நியாயமானதுமான சட்டத்துறை மூலமும் (Independence of Judiciary and Judiciary Independence) சட்ட மீளாய்வு முறை மூலமும் (Judicial Review) சாத்தியமாதல் வேண்டும். அத்தகு ஆட்சி முறை (Rule of Law) நடைமுறைப்படுத்தப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்அரசும் (Good State), நல்ல சட்டமும் (Good Law) அவசியமாகின்றது. அத்துடன் மக்களின் நம்பகத்தன்மையான சட்டங்கள் பாராளுமன்றத்தினால் சமகாலத்திற்கு ஏதுவாக இயற்றப்படல் வேண்டும். இத்தகு பாரிய மாற்றங்களும், அர்ப்பணிப்புக்களும் அவசியமானது.

I. **பழிவாங்கல் அல்லது தண்டனை முதன்மைப்படுத்தும் நீதி** – Retributive Justice

பழிவாங்கல் அல்லது தண்டனை முதன்மைப் படுத்தும் நீதி என்பது முன்பு கூறப்பட்ட இடர்கால, போர்க்கால அனர்த்த கால நிலைமைகளுக்கு சற்று வேறுபாடானது. காரணகர்த்தாக்கள், பிரகிருதிகள், பாதிப்புக்குள்ளானவர்களை, மீள் பாதிப்புக்கு உள்ளாக்கியவர்களைக் காலக் கண்ணோட்டத்தில் அவதானிப்பு செலுத்தி சம்பந்தப்பட்ட திறத்தவர்களைத் தண்டித்தல், புனர்வாழ்வு அளித்தல், மீள் சமூகமயப்படுத்தல், தகவுநிலையை இல்லாது செய்தல், நிறுவனங் களினை மாற்றம் செய்தல், என சமூகத்தின் விருப்புக்கு ஏற்ப தண்டனை முறைமையினை ஏற்று நடைமுறைப்படுத்தல். இம்முறைமை மனித உரிமைக்கு முரணானதாக இருக்கலாம் என்பதனால் இம்முறைமை அண்மைக் காலங்களில் பின்பற்றப்படுவதில்லை. ஆனாலும் "ருவண்டாவில்" இம்முறைமை பின்பற்றப்பட்டு இருந்தமையைக் காணலாம்.

**தொகுப்பு:**

ஆதலினால், விபரிக்கப்பட்டவற்றில், உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக்கு உள்ளாக்குதல், இழப்பீடு அல்லது தண்டனை யுடன் நஷ்டஈடு கோரிக்கை முன்வைப்பு, நல்லிணக்கம், (ஒருமித்த) இலங்கைக்குள் அமைதி என, எந்த முறைமையினை நாம் வரவேற்கிறோம். ஏற்பு செய்யப் போகின்றோம். எமது நேரிய, சீரான, ஒருமித்த பாதை எது? தெற்கு சூடான், தென்னாபிரிக்கா, ருவண்டா, குர்திஸ்தான், கென்யா என பல நாடுகள் இம்மாதிரிகளைப் புலமையாகக் கையாண்டுள்ளன. புலமைத்துவமும், சர்வதேச பட்டறிவும் இதற்கு முதன்மையானது. எனவே, சமூக நிறுவனங்கள் செய்ய வேண்டிய முதன்மையான பணிகளில் எது சிறந்தது?. என்பதனை ஆய்ந்தறியவும், மேலே விபரிக்கப்பட்டவற்றில் ஒன்றா அல்லது புதிய பாதையா என்பதனை உய்த்தறியவும் தலைப்படவேண்டும்.

3. **அடுத்து சட்டவாட்சி முறைமை மற்றும் எமது பங்கும் செயற்பாடும் தொடர்பான தொடர்புறு விடயப்பரப்புக்கள் இரண்டினை ஒருமித்து நோக்குவோம்.**

இருதேசம் ஒருநாடு, ஒற்றையாட்சிக்குள் சுயாட்சி முறைமை, தனிநாடு என எமது தமிழ்த்தரப்புக் கோரிக்கைகள் கூட்டு உடன்படு நிலையுடனான ஏற்பு (Collective agreement and Acceptance) என்பதனைப் பிரதிபலிப்பதாக இல்லை. சட்டவாட்சிப் பண்பு இயல்புக்கும் கோரிக்கைக்கும் அமைய வேறுபட்ட பரிணாமங்களைத் தோற்றுவிக்கும். சமூக நெருக்கடி காலத்திற்குக் காலம் பல்வேறு நெருக்குதல்களினை சமூகத்திற்குப் பரிசாகக் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக, அமைதியான வாழ்வு முறையில் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் மூலமான ஒரு உடன்படு நிலையை ஒருமித்துக் கொண்டுவர இயலவில்லை. உரியமுறைத் தீர்வுகள் முன்வைக்கப்படக்கூடிய ஏது நிலைகள் சமகாலத்தில் உள்ளதாகவே கருதப்படுகின்றது. இளைஞர்கள், சிரேஷ்ட புலமையாளர்கள், சிறுவர் என மக்கள் பங்களிப்புடன் மக்களின் விருப்புக்கள், வேண்டுதல்கள் அல்லது தேவைகள் இனங்காணப்படல் வேண்டும். சமூக நிலைப்பாடும் சட்டவாட்சியும், சமூகக் கோரிக்கைகளும் தொடர்புற்றுக் காணப்படல் வேண்டும்.

உதாரணமாக, தமிழ்க்கட்சிகள் கோரிக்கை விடுக்கின்ற விடயப்பரப்புகளும் மக்களினால் முன் வைக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளும், இரு வேறு நிலைப்பாட்டினை முதன்மைப்படுத்துகின்றன.

நிலைமாறுகால நீதியினை ஏற்பதாகவும், பழிவாங்கல் மற்றும் தண்டனையினை ஆதரிப்பதாகவும், பொதுமக்கள் கோரிக்கை விடுகின்ற போதும் மீள்கட்டமைப்பு அல்லது நிலைமாறுகால நீதியினை தமிழ்த்தரப்புக் கட்சிகள் கோருவதாகவும் இவற்றுக்கும் அப்பால் கலப்பு பொறிமுறை அல்லது புதிய பொறிமுறையின் முக்கியத்துவத்தினை புலம்பெயர் அமைப்புக்கள் வலியுறுத்துவதும் அவதானிக்கத்தக்கது.

அத்துடன், பல்வேறு முறைமைகள் காணப்படுகின்றபோது தென்னாபிரிக்கா முறைமையின் ஏற்பானது, அதன் சாத்தியப் பாடுகள் ஆராயப்படாது. அவசரமாக அந்நிலை மட்டும் பின்பற்றப்பட அரசாங்கம் தலைப்படுவது ஏன்? அத்தகு முறைமைகள் தமிழ்த்தரப்புக்குப் பொருத்தமானதா? இத்தகு நிலைமைகள் மட்டும் தீர்வைக் கொண்டுவருமா? எவரும் ஆய்வு செய்ததாக தெரிய அல்லது அறியக் கிடைக்கவில்லை.

அரசியற்கட்சிகள் முன்வைப்புக்களினை முன் நிறுத்துவதும், மக்கள் தமது பேரணி களில், ஆர்ப்பாட்டங்களில் பலதரப்பட்ட முறைமைகளினை முன்வைப்பதும், இவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய நடபடி முறைமைகளினை அரசாங்கம் கட்டவிழ்த்து விடுவதும் இவை அனைத்தையும் பார்த்தும் சமூக நிறுவனங்கள் நிவாரணங்கள் வழங்குதலை மட்டும் செய்து வருகின்றமையும், சமகாலத்தே இலங்கையில் நோக்கத்தக்க துரதிஷ்ட சம்பவங்கள ஆகும். இந்நிலைமைகள் மாற்றம் பெறல் வேண்டும். உரியமுறைத் தீர்வுகள் எட்டப்படுதல் வேண்டும். இதற்கு சர்வதேசத்தின் உதவுகைகள், புலம் பெயர் தனியன்களின் அமைப்புக்களின் புலமைத்துவம் உதவியாக இருக்கலாம். இவை யாவுமே சமூக நிறுவனங்களின் பொறுப்பு டைமையாகக் காணப்படுகின்றன.

அமெரிக்காவில் நிறவெறிக்காகப் போராடிய தத்துவஞானி மாட்டின் லூதர் கிங் இவற்றினையே "வன்முறைகளற்ற அமைதி முறைமை" மூலம் பின்பற்றினார். சமூக நிறுவனங்களின் வன்முறைகளற்ற ஒவ்வொரு அசைவும் சமூகத்தின் நிலைப்பாடுகளுக்கான அரசின் இருப்பினைக் கேள்விக்கு உட் படுத்தும் ஒரு நிலைப் புள்ளியாகக் (entry point) கருதினார். அத்தகைய புள்ளி பல விடயங்களுக்கு நுழைவாகவும், திறவுகோலாகவும் அமையலாம். அதனை, இனங்காணவும், பயன்படுத்தவும் சமூகம் பழகிக் கொள்ளுமாயின் எமது தரப்புக்கள் கொல்லப்படுவது என்பது தடுக்கப்படுவதற்கும், பலவீனமான தங்கிவாழும் சமூகம் உருவாகாமல் இருப்பதற்கும், எதிர்காலம் பாதிப்புறாத நிலையில் பேணிப் பாதுகாப்பதற்கும் உதவிசெய்யும். எதிர்காலமானது எம்மால் விட்டுச் செல்லப்படும் கடன்களுக்கும், செலுத்தப்படாத கொடுப்பனவுகளுக்கும் (unsettled dues) பொறுப்புக்கு உள்ளாக்கப்படாது, சுதந்திர ஜனநாயகத்தினை புதிய கோணத்தில் அணுகுவார்கள் என தத்துவஞானி மாட்டின் லூதர் கிங் கருதினார்.

ஆதலினால், புதிய ஜனநாயகத்திற்கு சிறந்த அடித்தளத்தினை அமைப்பதற்கும், கூட்டு ஒப்பந்த நிலைக்கும், சிறப்பான அணுகுமுறை குறித்த ஒருமித்த நிலைப்பாட்டிற்கும், அதன் வழி எமது நீண்ட கனவை நிலைநாட்டவும் சமூக நிறுவனங்களாவன சிறந்ததும், ஏற்புடைத் தானதுமான நீதியை நிலைநாட்டவல்ல ஏதுநிலைகளுக்கு அமைவான பொறுப்பு டைமைகளை யதார்த்தமாக்கவல்ல செயற்பாடு களை, அமுல்படுத்த வேண்டும். அதுவே, சமகாலத்தின் இன்றியமையாத தேவைப்பாடும் ஆகும்.

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

துருக்கிய சிறுகதை



# மரணவீட்டுக்கு சாப்பாடு

மூலம்: செவ்தெத் குத்ரெத்

ஜனவரி மாதம் மெல்லிருள் கவிந்து ஊர் சோபையிழந்து காணப்படுகிறது. மந்த நிலையில் முடங்கிக்கிடக்கின்றது வீதி. மக்கள் மிகவும் அத்தியாவசியத் தேவைகளுக்காக மட்டும் வெளியில் செல்கிறார்கள். ஓக் மரங்களின் தூறில், தேவா முற்றத்தில் பிள்ளைகள் கூடி விளையாடும், மென்காற்று வீசும் இதமான இடங்கள் எல்லாமே வெறிச்சோடிப் போயிருக்கின்றன. தண்ணீர் கொண்டு வருவதற்காக மலை உச்சிக்கு கிணற்றுக்கு போவோர் ஒருவர் இருவரை மட்டுமே எப்போதாவது காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒருநாள் பகலில் மலையுச்சி நீர்நிலைக்குப் போன பெண்ணொருவள் அரண்டு போனவளாய் திகிலுடன் ஓடி வருகின்றாள்.

"மலையுச்சி கற்பாறைக்கடியில் துர்ஷன் அகா செத்துக்கிடக்கிறான்"

பயப்பீதியுடன் கூறுகிறாள் மூச்சு இரைக்க இரைக்க.

அந்த வீதியில் துர்ஷன் அகாவை தெரியாதவர்கள் யாருமில்லை. வீட்டுக்கு வீடு தண்ணீர் விநியோகம் செய்வது அன்றாடம் அவனது பிழைப்பு. குடிசையொன்றில் தனது மனைவி இரு பிள்ளைகளுடன் மிகவும் சிரமத்தடன் காலம் தள்ளிக்கொண்டிருந்தான். மரச்சட்டமொன்றின் இரு முனைகளிலும் பொருத்தப்பட்டுள்ள சங்கிலியில் தொங்கும் வாளிகள் மட்டுமே அவனது சொத்து. காவடிகட்டி தோளில் சுமந்து தினந்தோறும் தண்ணீர் சுமப்பது மலையுச்சியிலிருக்கும் கிணற்றிலிருந்து.

"தண்ணீர், தண்ணீர்" வீதியில் ஒரு தொங்கலிலிருந்து மறு தொங்கல் வரை அவனது குரல் பெரிதாக ஒலிக்கும்

"துர்ஷன் அகா எங்களுக்கு ஒரு நடை"

"எங்களுக்கு மூன்று நடை"

"எங்களுக்கு ரெண்டு............" காவடிச் சட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள சங்கிலியில் தொங்கும் வாளிகள் இரண்டுதான் ஒருநடை என்பது.

மலையுச்சிக்குப் போய் நீர் நிரப்பிக்கொண்டு வருவது மிகவும் சிரமமான வேலை. நீர் நிரம்பிய காவடிச் சட்டத்தை தோளில் சுமந்தவாறு வீதியின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்குமாகச் சத்தமிட்டவாறு நடந்து கொண்டிருப்பான். ஒரு நடைக்கு மூன்று குறூஸ் பணம் கிடைக்கும். இந்தத் தொழிலில் காசு சம்பாதிப்பது குண்டூசி முனைகளால் கிணறு தோண்டுவதுபோல. இவனது தொழிலை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கும் நான்கு பேர்கள் அன்றாடம் வயிற்றை நிரப்பிக்கொள்வது இலேசானதல்ல.

கடவுளின் கருணையினால் அவனது மனைவி இல்நாஸுக்கு ஒரு கிழமைக்கு இரண்டொரு நாட்களுக்கு சில வீடுகளில் துணி துவைப்பதற்கான வேலைக்கு சிறிது பணம்





மலரன்பன்

சிங்கள மொழியில் – சாலிய குணவர்தன

தமிழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும். சில நாட்கள் உடுப்புகள் கழுவ மேலதிகமாக தண்ணீர் தேவைப்படுவதால், நாலைந்து நடைகளுக்கான மேலதிக பணமும் கிடைப்பதுண்டு. இப்படித்தான் அவர்கள் வாழ்க்கை ஓடியது.

இப்பொழுது எல்லாமே முடிந்துவிட்டது.

தண்ணீர் சுமையுடன் மலையுச்சி கற்பாறையில் கால் சறுக்கி உருண்டுபோய் விழுந்தவனின் தலையிலடிபட்ட காயத்தினால் அந்த இடத்திலேயே உயிர்பிரிந்துவிட்டது.

அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டாள் இல்நாஸ். இனி என்ன செய்வது. ஒன்பது வயதில் ஒருவனும் ஆறு வயதில் இன்னொருவனும் என இரண்டு மகன்மார்கள். தனியொருத்தியான அவளால் இனி என்ன செய்யமுடியும். இவர்களைக் காப்பாற்றுவது எப்படி. கிழமைக்கு ரெண்டோ அல்லது மூன்றோ நாட்களுக்கு மட்டும் கிடைக்கும் சொற்ப காசைக்கொண்டு எப்படி வாழ்வது.? பலவாறு யோசித்தாலும் தீர்வு தெரியவில்லை.

மரணம் நிகழ்ந்த வீட்டுக்கு ஒருநாள், இரண்டு நாட்களும் உணவு கொடுப்பது அந்த ஊர் வழக்கம்.

இல்நாஸுக்கும் அவளது இரண்டு மகன் மார்களுக்கும் முதலாவதாக சாப்பாடு வந்தது பெரும் தனவந்தர் வியாபாரி,

வெள்ளை பங்களா என்ற பெயரைக்கொண்ட நூயிஃப் இஃபேன்ட் என்றவரின் வீட்டிலிருந்து. துர்ஷன் அகால மரணமடைந்ததற்கு மறுநாள் பகல் வெள்ளை பங்களாவில் பணிபுரியும் வேலைக்காரர் பெரியதொரு தாம்பாளத் தட்டுடன் இவர்களின் வீட்டு முற்றத்தில் நிற்கிறான். தட்டில் நூடில்ஸ், கோழி சூப், இறைச்சி, சோஸ் என அறுசுவை உணவு வகைகள் இருக்கின்றன.

உண்மையிலேயே அன்று சாப்பாட்டைப் பற்றிய நினைவு பெரிதாக இல்லை. தாம்பாளத்தின் மூடியைத் திறந்து பார்த்தபோது உணவு வகைகளும், மணமும் சாப்பிடவேண்டும் என்ற ஆசையைத் தூண்டியது. தாம்பாளத்தை சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். வாழ்நாளில் இதுபோன்ற உணவை தொட்டுக்கூட பார்த்திராத அவர்கள், சுவைத்து வயிறார உண்டனர். மீதமிருந்தவை அடுத்தடுத்த வேளைகளுக்கும் போதுமானதாக இருந்தது.

அதற்கு அடுத்த நாள் மற்றுமொரு வீட்டிலிருந்து சாப்பாடு வந்தது. அதேபோல அடுத்தடுத்து சில வீடுகளிலிருந்து சாப்பாடு வந்தது. என்றாலும் வெள்ளை பங்களா சாப்பாட்டுக்கு நிகராக ஒன்றுமில்லை. வேறு வீடுகளிலிருந்து கிடைத்த சாப்பாடு வெள்ளை பங்களா சாப்பாட்டைப்போல இல்லாவிட்டாலும், இல்நாஸின் பானையில் வேகும் சாப்பாட்டைவிட ருசியாக இருந்தது. இனி, உயிருள்ளவரை இந்தத் துன்பம் தொடரப்போகிறது என்பது இல்நாஸுக்கும் பிள்ளைகளுக்கும் விளங்கியது, பக்கத்து வீடுகளிலிருந்து வந்த சாப்பாடு நின்ற பின்னரே.

அக்கம் பக்கத்து வீடுகளின் சாப்பாடு நின்றுபோன முதல்நாள், வழக்கம்போல பகல்வேளை சாப்பாடு வரலாம் என எதிர்பார்த்து வாசல்பக்கம் ஏதாவது சத்தம் வந்தால் ஓடிப் போய் பார்ப்பதும். வெறுமனே திரும்பி வருவதுமாக இருந்தார்கள். வீதியில் போவோர் வருவோரின் சத்தம் அதுவெனத் தெரிந்தது. யாராவது வந்து கூப்பிடுவார்கள் என்றால் அதுவுமில்லை. அந்தியாகும்வரை எதிர்பார்த்து ஒருவரும் வராமையினால் இரவுக்கான உணவை சமைக்கும்படியாகிற்று. வீட்டில் எஞ்சியிருந்த சிறிதளவு பொருட்களைக்கொண்டு சமையல் நடந்தது. ஓரிரு நாட்களில் மாவு, உருளைக்கிழங்கு, எண்ணெய் என்பன முடிந்து விட்டன. அதன் பின்னர், வீட்டு மூலையில் சிறிது வெங்காயம், பூடு, இரண்டு மூன்று கையளவு சோளம் என்பவற்றோடு அன்றைய ஒருவேளை சாப்பாடு அரையும் குறையுமாய். பானை சட்டிகள், பெட்டிகள் சிறிய போத்தல்கள் எல்லாம் காலியாகி விட்டன.

மறுநாளும் ஒருவாறு கழிந்தது. அதற்கடுத்த நாள் சின்னப்பையன் பசி பொறுக்கமுடியாமல் அழத்தொடங்கினான். துணி துவைக்க வருமாறு டவுனில் யாராவது கூப்பிட வருவார்கள் என இல்நாஸ் எதிர்பார்த்து காத்துக்கிடந்தாலும், எவரும் வரவோ செய்தியனுப்பவோ இல்லை. அதற்கடுத்த நாள் படுக்கையிலிருந்து எழும்பவில்லை. பிள்ளைகள் சாப்பாட்டை நினைத்து கனவு கண்டுகொண்டிருந்தார்கள். ஜேம் தடவி சீனி தூவப்பட்ட பாண் சின்னவன் சொப்பனத்தில். பெரியவன் கனவில் பலகாரங்கள் நிறைந்த தாம்பாளத்தட்டு. எல்லாவற்றையும் ஒரே வாயில் விழுங்கிவிட ஆசை எழுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையில் முனங்கிக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் குரலைக்கேட்டு இல்நாஸின் கன்னங்களில் கண்ணீர் வழிகின்றது. வீட்டின் முன்னால் உள்ள வீதியில் வழமைபோலவே எல்லாம் நடைபெறுகின்றது. வீடொன்றின் கதவு மூடப்படும் சத்தம். அது அந்த வீட்டின் பிள்ளை பள்ளிக்குப் போக வீதியில் இறங்கும் நேரம். அடுத்ததாக கேட்கும் பாதங்களின் அடிசத்தம், தனது மனை நோக்கிச் செல்கின்ற பாபர் தாஸின் எபேத்தினுடையது. தொடர்ந்து கேட்கும் ஒலி, மின்சார சபை எழுதுவினைஞன் குரல். சப்பாத்து தைக்கிறவன் நடந்துசெல்லும் சரக் சரக் சத்தம். வெள்ளை பங்களாவுக்கு பாண் கொண்டு வருகின்ற வண்டியின் குதிரையின் குழம்பொலி. குதிரையின் முதுகில் இருபுறமும் தொங்கும் பாண்களால் நிரம்பிய கூடைகள். கூடைகளின் கிரி கிரி சத்தமும் தூரத்தே வரும்போதே கேட்கிறது.

பாண் வண்டி வரும் சத்தம் முதலில் இளையவனுக்கும் அடுத்ததாக மூத்தவனுக்கும் கேட்டது. குளிரைத் தாங்கிக்கொள்ள இல்நாஸ் துப்பட்டியால் போர்த்துக்கொண்டு வெளியில் வருகிறாள். இரண்டு இறாத்தல் பாண் வாங்குவது அவளது நோக்கம். உடுப்புகள் துவைக்கும் காசில் பாணுக்கான கடனை செலுத்திவிடலாம். பாண்கள் நிறைந்த கூடைகள் கண்களுக்கு தெரிகின்றது. வியாபாரியிடம் பேச வாயெடுக்கும் முன்னர், அவன் குதிரையில் தட்டி,

"போ! போ!" என குதிரையை ஓட்டத் தொடங்குகிறான். அவளது முயற்சி தவிடு பொடியாகியது. அவளது வாயிலிருந்து ஒரு வார்த்தையேனும் வெளிவராமல், சுவர்க்கலோக மணம் வீசும் ஆகாரம் அவளது வீட்டைக் கடந்து சென்றது. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான நீண்ட கைகள் அவளுக்கு இருக்கவில்லை.

அவள் வீட்டுக்குள்ளே வந்தாலும் எதிர்பார்ப்பு களுடன் காத்திருக்கும் தனது பிள்ளைகளின் வெளிறிப்போன கண்களைப் பார்ப்பதற்கே பயமாகவிருக்கின்றது. வீட்டிலிருந்தவர்கள் ஒருவரும் ஒன்றுமே பேசவில்லை. வெறும் கைகளோடு வந்த அம்மாவின் முகத்தை உதாசீனத்தோடு பார்த்த பிள்ளைகள் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொள்கின்றனர். நீண்ட நேரம் நீடித்த மௌனத்தை இளையவன் கலைக்கின்றான்.

"அம்மா இனியும் என்னால் பொறுக்க முடியாது. எனது வயிற்றுக்குள்ளே என்னவோ செய்யுது!"

"துக்கப்படவேண்டாம் என்னுடைய நல்ல மகனே. அது பசியினால் வரும் வலி. எனக்கும் வயிற்றுக்குள் என்னவோ செய்யுது".

"நான் செத்துவிடுவேன் - நான் செத்து விடுவேன்" மூத்தவன் தம்பியை பரிதாபமாகப் பார்க்கிறான்.

இல்நாஸ் பிள்ளைகள் இருவரையும் பார்க்கின்றாள்.

இளையவன் மௌனமாகின்றான். அவளது முகம் மேலும் கறுத்து விடுகின்றது. உதடுகள் சுருங்கி காய்ந்துவிடுகின்றன. இரத்த ஓட்டக் குறைவினால் தோல் சுருங்கி சுருக்கம் விழுகின்றது. கடைசியில் இல்நாஸ், மூத்த மகனை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே செல்கின்றாள்.

"நீ சில்லறைக் கடைக்குப்போய் போதேஸ் முதலாளியிடம் அரிசி, மாவு, உருளைக்கிழங்கு கடனுக்கு வாங்கிக் கொண்டு வா மூணு நாளில் நான் காசைக் கொண்டுவந்து தருவேன் என்று சொல்...."

சில இடங்களில் கிழிந்து போயிருந்த அவனது கம்பாயம் குளிரைப்போக்குவதற்கு உதவியாக இருக்கவில்லை. கால்கள் நடப்பதற்குச் சக்தியற்றுத் தள்ளாடின. நடக்கும் போது வீதியோரக் கடைகளின் சுவர்கள் மதில் சுவர்கள் போன்றவற்றை கையால் பிடித்துப் பிடித்து மெதுவாகச் செல்கின்றான். வீதியில் மேடொன்றில் அமைந்திருந்த கடையை அடைந்தவன் அடுப்பினடியில் போய் நின்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். வாடிக்கையாளர்கள் எல்லோரும் போய் முடியும்வரை அடுப்பினருகில் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றான். சரியான தருணம் வந்தவுடன் முதலாளியின் அருகில் சென்று அரிசி, மாவு, உருளைக்கிழங்கு ஒவ்வொரு இறத்தல் நிறுக்கும்படி சொல்கிறான். காசு கொடுப்பதற்காக கையை விட்டுத் துழாவி, உடனே வீட்டுக்குப் போவதுபோல பாவனையுடன்,

"ச்சா...மறந்தே போய் காச வீட்ல வைத்து விட்டு வந்து விட்டேன். இந்தக் குளிரில் வீட்டுக்குப்போய் திரும்பி வருவது பெரிய சிரமம்.. சாமான் கணக்கை புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நான் நாளைக்குக் காலையில் காசு கொண்டு வந்து தருவேன்..."

அது ஒரு தைரியமான முயற்சிதான் என்றாலும் முதலாளியோ வியாபார அனுபவத்தில் கரைகண்டவர்.

"முதல்ல கையில காசு, அப்புறம்தான் சாமான். சரியா, நீ நல்லா மெலிந்து போயிருக்கிறாய்...காசு இருந்தா இப்படி மெலிய வேண்டியதில்லையே" தனது பொய் அம்பலமாகிறதை எண்ணி உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேறுகின்றான்.

வீதியில் பனிக்குளிரின் தாக்கம் கடைக்குப் போகும்போது இருந்ததை விட அதிகமாக இருக்கின்றது. தூரத்தே வெள்ளை பங்களாவின் புகை போக்கியில் புகை வேளியேறுவது தெரிகின்றது. அந்த பங்களாவில் வசிப்பவர்கள் எவ்வளவு சந்தோஷமாக இருப்பார்கள். அவர்கள்பால் அவனுக்கு பொறாமை ஏற்படவில்லை. தனது வாழ்க்கையில் முதல் முறையாக அதி விசேஷமான அறுசுவை உணவுகளைத்தந்த அவர்களைப்பற்றிய கௌரவமான மதிப்பே அவனுக்கிருக்கின்றது. கூடியவரை வேகமாகச் சென்றவனின் தாடைகள் ஒன்றுடன் ஒன்று மோத பற்களின் நறநற சத்தம் கேட்கின்றது. அம்மாவிடமோ தம்பியிடமோ ஒன்றும் சொல்வதற்கில்லை. வெறுங் கையுடன் வந்தவனைக் கண்டதும் உண்மை புரிந்துவிடும். உடைகளை மாற்றிக் கொண்டவுடன் படுக்கையில் விழுகிறான்.

"ஐயோ குளிருது! கூதல் ஐயோ கூதல்...! அவனது உடலில் வெதுப்பகம் ஒன்றின் உஷ்ணம். இல்நாஸ் வீட்டிலிருந்த துணிகளைத் தேடி எடுத்து அவனது உடலில் போர்த்துகிறாள். உடல்நடுக்கம் இரண்டு மணித்தியாலம் வரை நீடிக்கின்றது.. பின்னர் காய்ச்சல் குறைந்து விட்டது. அவனது ஆடைகளைக் களைந்துவிட்டு உடம்புச் சூட்டைக் குளிராக்கும் எத்தனத்தில் தனது குளிர்த கைகளால் உடலைத் தடவுகின்றாள் இல்நாஸ்.

அந்தியாகும் வரை வீட்டினுள் அங்கு மிங்கும் நடந்தபடி இருக்கின்றாள். செய்வதென்னவென்று புரியவில்லை. யோசிக்க யோசிக்க ஒன்றையுமே தீர்மானிக்க முடியவில்லை. சூரியன் மறைகின்றது. மகனின் போர்வைகள் கலைந்தது ஞாபகத்துக்கு வருகின்றது.

பாவனைக்கு உதவாது என வீட்டின் ஒரு மூலையில் ஒதுக்கிவைக்கப் பட்டுள்ள தகரத்துண்டுகள், இரும்புத் துண்டுகள் லொட்டு லொசுக்குகள் தெரிகின்றன. இது போன்ற பொருட்கள் வாங்கும் கடையொன்றும் நகரத்தில் இருப்பதாக பக்கத்து வீட்டுக்காரி சொன்னது ஞாபகத்துக்கு வருகின்றது. அதற்கும் விடியும் வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டுமென நினைத்துக் கொள்கிறாள். அந்தத் தீர்மானத்தின் படி மனதுக்கு ஓரளவு நிம்மதி வருகின்றது. அங்கு மிங்கும் விட்டினுள்ளே நடந்து கொண்டிருந்தவள், நடையை நிறுத்தி பெரியவனின் படுக்கையருகில் அமர்கிறாள். மகனுக்கு காய்ச்சல் அதிகமாக இருக்கின்றது. ஒன்றும் பேசாமல் பொறுப்புணர்வுடன் தொட்டுப் பார்க்கிறாள். பசியைப் பொறுக்கமுடியாதவனாய் இளைய மகன் கண்விழித்தவாறு படுக்கையில் கிடக்கின்றான். பெரியவன் நோயின் தாக்கத்தினால் முணங்கியவாறு படுக்கையில் புரண்ட வண்ணம் இருக்கிறான். அவனது கன்னங்கள் வீங்கியிருக்கின்றன. சுயநினைவற்றவனாய் வாய்புலம்பத் தொடங்கினான்.. தனது அண்ணனின் அருகில் உட்கார்ந்து கொண்ட இளையவன், தனது தாய்க்குமட்டும் கேட்கும்படி மெதுவான குரலில் கேட்கிறான்

"அம்மா. அண்ணா செத்துப் போயிருவானா?"

"ஏன் மகனே அப்படிக் கேட்கிறாய்?"

சிறிது நேரம் அமைதியாகவிருந்த தாயின் காதருகே வாயை வைத்து, தனது அண்ணனுக்குக் கேட்கும்படி

"அண்ணா செத்துப்போனால் அந்த வெள்ளை பங்களாவிலிருந்து சாப்பாடு கொண்டுவருவாங்கள்."

ooo


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில ஆங்கிலச் சொற்களும் அவற்றின் பொருளும் ஓசை நயமும்



வாகரைவாணன்

உலகின் பல நாடுகளிலும் பேசப்படும் ஒரு மொழி ஆங்கிலம். இது காரணமாகவே அது 'உலக மொழி' (World Language) என்ற பேரையும் பெற்றது. Anglo – Saxon ஐ அடித்தளமாகக் கொண்ட இம் மொழி கி.பி. 5-7 நூற்றாண்டுகளில் Teutonic என்னும் படையெடுப்பாளர்களால் (Invaders) பிரித்தானியாவுக்கு (Briton) அறிமுகமானது. இம்மொழி கி.பி. 12ம் நூற்றாண்டில் சாதாரண மொழியாகவும் அதேநேரம் ஆற்றல் பெற்றதாகவும் விளங்கியது. அன்றிருந்து மின்னல் வேகத்தில் வளர்ச்சி அடைந்து உலக மொழி என்ற பேருக்கு உரியதாயிற்று. இதற்கு இங்கிலாந்து (பிரிட்டன்) பல நாடுகளை கட்டியாளத் தொடங்கியமையும் ஒரு முக்கிய காரணமாகும்.

பிற்காலத்தில் சேக்ஸ்பியர் (Shakes Peare : 1564-1616) செல்லி (Shelly : 1792-1822) என்னும் பெரும் புலமையாளர்கள் தமது மொழிக்கும் நாட்டுக்கும் தனிப்பெரும் புகழைச் சேர்த்தமையையும் இன்றும் வரலாறு சொல்லிக்கொண்டிருக்கிறது. இத்தகு பெருமையையும் சிறப்பையும் உடைய ஆங்கில மொழியின் சொல்லோசை நயமும் (Alliteration) கருத்தாழமும் கொண்ட சில சொற்களே இக்கட்டுரையின் முதன்மை அம்சங்களாகின்றன. அவற்றை இனி அவதானிக்கலாம்.

ஒருவரின் உடல் நிலை மட்டுமன்றி செயலும் நன்றாக அமைந்திருந்தால் அதனை Well என்றும், இல்லையெனில் Dull என்றும் சொல்லலாம். இது போல் உணவு சுவையாக இருந்தால் Taste என்றும் மாறுபட்டிருந்தால் Waste என்றும் குறிப்பிடலாம். கடவுள் இருக்கிறார் என்னும் கோட்பாடு Theism என்றும் அதற்கெதிரானது Atheism என்றும் வழங்கும். இச்சொல்லின் ஆரம்பமாகவுள்ள 'A' என்னும் ஆங்கில எழுத்து தமிழில் உள்ள அநீதி என்னும் சொல்லின் முதன்மையாகவுள்ள 'அ' என்னும் தமிழ் எழுத்தை ஒத்திருக்கக் காணலாம். இவ்விரு எழுத்துக்களுக்கும் (அ, A) இல்லை என்றே பொருள். இது போன்றதே Sleep, Asleep என்னும் சொற்களும். முதல் சொல்லுக்கு நித்திரை என்றும் மற்றத்திற்கு மரணம் என்றும் பொருள். இச்சொல் 'விளையாட்டு' கற்றோர்க்கும் பெரும் ஆச்சரியத்தைத் தரலாம்.

Womb என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பெண்ணின் கருப்பை என்றே பொருள். இச்சொலலே Woman எனவும் ஆனது. எனினும் அதில் உள்ள Man என்னும் சொல் மனிதனின் ஆரம்ப இடம் Womb என்பதை எடுத்துக்காட்டும். Worry என்னும் சொல் கவலை என்ற பொருளையும் Sorry என்ற சொல் 'மன வருத்தம்' என்ற பொருளையும் தரும். Humble என்னும் ஆங்கிலச் சொல் தமிழில் 'எளிமை' என்ற பொருளைத் தருவது போல் Simple என்ற சொல்லும் அது போன்ற பொருளைத்தரும்.

Name என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு பெயர் என்று பொருள். அதே நேரம் அதற்கு புகழ் என்றும் பொருள் உண்டு. இதனை மாவீரன் முதலாம் நெப்போலியன் அல்லது முதலாம் இராஜஇராஜ சோழன் என்ற பெயர்கள் எடுத்துக்காட்டும். இந்தப் புகழ் என்ற சொல் ஆங்கிலத்தில் Fame என்றும் வழங்கும். Home என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு வீடு என்று பொருள். இதனை Dome என்ற சொல்லும் வெளிப்படுத்தும். Mild என்ற சொல்லுக்கு 'சாதுவான' என்ற பொருளையும் தரலாம். ஆனால் அதற்கு எதிரானது Wild என்ற சொல்லாகும். Ear என்ற சொல்லுக்குக் காது என்ற பொருள். ஆனால் காது கொடுத்து ஒருவன் கேட்பதை Hear என்ற அதே ஆங்கிலச் சொல் உணர்த்தும்.

God என்னும் சொல்லுக்குக் கடவுள் என்று பொருள். ஆனால் இச்சொல்லின் தோற்றத்திற்கு அனைத்து மக்களினதும், 'கடவுள் நல்லவர்' என்ற நம்பிக்கையே காரணம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் Good என்னும் சொல்லின் ஓரெழுத்து மற்றைய அது God என ஆனது. தந்தையைக் குறிக்கும் தாதா அல்லது தாத்தா என்னும் சொல்லின் திரிபே Dad அல்லது Daddy என்னும் அங்கிலச் சொல்லாகும். இது 'மா' (அம்மா) என்னும் பழந்தமிழ்ச்சொல் திரிந்து Mater, Mother, Mummy என்னும் லத்தின் ஆங்கிலச் சொற்கள் உருவானதைப் போன்றதாகும்.

Port என்னும் சொல் துறைமுகத்தையும் Boat என்னும் மற்றுமொரு சொல் படகு அல்லது தோணியையே சுட்டும். Brave என்னும் சொல் வீரம் அல்லது உறுதியை வெளிப்படுத்தும் அதேவேளை Bravo என்னும் சொல் வீரனைப் போற்றுவதாக அமையும். She, He என்னும் சொற்கள் அவள், அவன் என்னும் பொருளை உடையவை என்பது ஆங்கிலம் கற்றோர் அறிந்ததுதான். ஆனால் She க்குள் (S-HE) He இருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்? இது, அவள், அவன் உறவையே வெளிப்படுத்தும்.

Friend என்னும் சொல் தமிழில் நண்பன் என்று சொல்லப்பட்டாலும் அது ஒருவர் மற்றவரோடு சுதந்திரமாக (Free)ப் பழகுவதையே குறிக்கும். Freedom என்ற சொல்லும் அதே கருத்தையே அளிக்கும். மிக நல்லது, மிகக் கெட்டது எனும் பொருளையே Best, Worst என்னும் ஆங்கிலச் சொற்கள் உணர்த்தும். Meet, Mate என்னும் சொற்களும் ஒருவர் மற்றொருவரைச் சந்தித்தாலும் பின் நண்பராவதற்கும் அச்சந்திப்பே அடிப்படையாகும் என்பதை அதே சொற்கள் வெளிப்படுத்தும். இனம் என்பது ஆங்கில மொழியில் Race எனப்படும். ஆனால் அந்த இனம் எப்படிப்பட்டது என்பதை அதன் Base (அடித்தளம்) எடுத்துக்காட்டும். அதே நேரம் வாழ்க்கையில் எழும் பிரச்சனைகளை Face பண்ணுவதற்கும் (எதிர்கொள்வதற்கும்) அவ்விரண்டும் பெரும் ஏதுவாகவும் அமையும்.

Fence என்னும் சொல்லுக்குத் தமிழில் 'வேலி' (வளவைத் தடிகளால் சுற்றி அடைத்தல்) என்று பொருள். இதனையே ஆங்கில மொழியில் Defence என்னும் சொல் வெளிப்படுத்தும். Diction என்னும் சொல்லுக்குத் தமிழிலும் சொல் (கூறு) என்று பொருள். Dictation என்பது சொல் அல்லது சத்தமாக வாசித்தல் என்னும் கருத்தைத்தரும். சொற்களின் வரிசையை Array என்னும் சொல் காட்டும். இச்சொல்லே ஆங்கிலத்தில் Arrangement என்ற சொல்லாகவும் ஆனது. Dictionary (அகராதி) என்ற சொல்லும் Diction, Array என்னும் இரு சொற்களாலும் உருவானது. இதற்குச் சொற்களின் வரிசை என்று பொருள்.

Direction என்ற சொல் ஒன்றை நெறிப்படுத்துவதையே காட்டும். (உதாரணம் திரைப்படம்) இதுவே Director எனவும் ஆயிற்று. Secret (இரகசியம்) என்னும் பொருளையே Secretary என்னும் சொல்லும் கொண்டுள்ளது. Library என்னும் மிகவும் பிரபல்யமான ஆங்கிலச் சொல் Liber (புத்தகம்) என்னும் லத்தின் சொல்லும் Array என்னும் ஆங்கிலச் சொல்லும் கலந்ததால் உருவானதாகும். இத்தகைய கலப்பை ஆங்கிலச் சொற்களில் பெரிதும் காணலாம். ஆதவனின் ஒளி (Light) மறைந்த பின்பு தோன்றுவது அந்திப் பொழுது என்றாலும் அது இருளின் ஆரம்பமாகும். இந்த இருள் ஆங்கிலத்தில் Night எனப்படும். இவ்விரு சொற்களின் (Light, Night) ஆரம்பத்தில் உள்ள ஓர் எழுத்து (L, N) வேறுபாடு அவற்றுக்கிடையே (இருளும் ஒளியும்) காணப்படும் நெருக்கத்தையே காட்டும். இது Wife, Life என்னும் சொற்களிடையே தென்படும் எழுத்து (W, L) வேறுபாட்டையும், ஒன்றிப்பையும் போன்றதாகும். Bright, Sight என்னும் சொற்களையும் கூர்ந்து நோக்கினால் அவை இரண்டும் Light என்னும் சொல்லைக் கொண்டுள்ளமை தெரியும்.

Black, Dark என்னும் இரு சொற்களும் பொதுவாக கரிய நிறத்தையே சுட்டும். ஆயினும் இவ்விரு சொற்களிலும் ARC என்னும் சொல் இருப்பது தெளிவானது. இச்சொல்லுக்கு LUMINOUS DISCHARGE BETWEEN TWO ELECTRODES என்று ஆங்கில அகராதியில் பொருள் இருப்பதும் கவனிக்கத்தக்கது. இது, மேற்படி சொற்கள் இரண்டும் ஒரே பொருளைக் கொண்டவை என்பதைத் தெளிவாக்கும். Sand என்பது மண்ணையும் Land என்பது நிலம் அல்லது காணியைக் குறிக்கும். இவ்விரு சொற்களையும் இணைத்தே மகாகவி பாரதி 'காணி நிலம்' வேண்டும் என்று பாடினான். பாரதியைப் பொறுத்தவரையில் இரண்டும் ஒன்றுதான். Almighty என்னும் சொல்லில் உள்ள AL என்பது ALL (எல்லாம்) என்னும் சொல்லின் திரிபாகும். Dimise என்னும் சொல்லுக்கு மரணம் என்று பொருள். எனினும், ஒருவர் இந்த உலகில் இருந்து திடீரென Dismiss ஆவதையே (இறப்பதையே) அது வெளிப்படுத்தும். இதிலிருந்து Dismiss என்னும் சொல்லின் திரிபே Dimise என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Neither, Either என்னும் சொற்கள் 'இது அல்ல அது' என்ற பொருளையே தரும். இவை இரண்டு சொற்களும் Whether என்னும் சொல்லோடு தொடர்புடையவை. Poem என்னும் சொல் கவிதையையும் Poet என்னும் சொல் கவிஞனையும் குறிக்கும். Disciple என்னும் சொல்லுக்கு சீடன் என்றும் Discipline என்னும் சொல்லுக்கு ஒழுங்கு என்றும் பொருள். இதிலிருந்து சீடன் என்பவன் ஒழுங்கைக் கடைப் பிடிப்பவனாக இருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. Principal என்னும் சொல்லுக்குப் பாடசாலை அதிபர் என்றும் Principle என்னும் சொல்லுக்கு 'அடிப்படை உண்மை' என்றும் பொருள். Host என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு விருந்தினன் என்று பொருள். இச்சொல்லே, Hostel, Hospital என்னும் சொற்களின் அத்திபாரமாகவும் அமையும். இவ்விரு இடங்களும் விருந்தினர் இல்லம் போல் நடத்தப்பட வேண்டும் என்பதையே Host என்னும் சொல் உணர்த்தும். நமது பேச்சு வழக்கில் OK என்னும் ஆங்கிலச் சொல் இடம்பெறுவதை அறிவோம். அச்சொல் Korrect என்னும் சொல்லின் குறுக்கமாகும். இதுவே இன்று Correct என்று திரிந்து வழங்கும். அதாவது 'K' என்னும் எழுத்து 'C' என்னும் எழுத்தாக மாறியுள்ளது. இத்தகு மாற்றங்கள் இன்றும் பெயர்களில் இடம்பெறுவதைக் காணலாம்.

Dawn என்னும் சொல்லுக்கு 'ஒரு நாளின் தொடக்கம்' என்று பொருள். ஆனால் Morn என்னும் சொல் காலை நேரம் என்ற பொருளைத் தரும். EVE என்னும் சொல்லுக்கு Evening (பின்னேரம்) அல்லது Festival (திருநாள்) என்று பொருள். அதேநேரம் Event என்பது நிகழ்வு என்ற பொருளைத்தரும். ACT என்னும் சொல் செயல், செய் என்னும் பொருளைக் கொண்டது. இச்சொல்லே Actor (நடிகர்) என்னும் பொருளையும் காட்டும். இச் சொற்களை மூலமாகக் கொண்ட Activity என்னும் சொல் செயல் என்பதோடு சுறுசுறுப்பு என்னும் கருத்தையும் வழங்கும். புழுகுதல் என்னும் தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் Boast எனப்படும். ஆனால் Boost என்பது ஒருவரை ஊக்கப்படுத்துதல் என்ற கருத்தை உடையது. Guard என்ற சொல் பாதுகாத்தல் என்ற பொருளோடு அதில் உள்ள 'G, D' என்ற எழுத்துக்கள் GOD (கடவுள்) என்ற கருத்தையும் வெளிப்படுத்தலாம். Regard என்ற சொல்லுக்கு மதிப்பு, மரியாதை என்று அர்த்தம். Reward என்ற சொல் பரிசு என்ற பொருளைத்தரும். Save என்ற சொல்லுக்கு மீட்பு என்று பொருள். அதனால்தான் கிறஸ்தவர்களால் யேசு கிறிஸ்து Saviour என்று வணங்கப்படுகின்றார்.

Week என்னும் சொல்லுக்கு கிழமை (வாரம்) என்றும் இது போன்று உச்சரிப்பை உடைய Weak என்னும் சொல் பலவீனம் என்ற பொருளையும் தரும். Thief என்னும் சொல் திருடன் என்ற பொருளையும் Theft என்ற சொல் திருட்டு என்ற பொருளையும் வெளிப்படுத்தும். Child என்னும் சொல் குழந்தை என்னும் பொருளையும், Mild என்னும் சொல் குழந்தையின் சாதுவான (Gentle) பண்பையும் வெளிப்படுத்தும். Devil என்னும் ஆங்கிலச் சொல்லை இரண்டு சொற்களாகக் கவனித்தால் அதில் ஒன்று EVIL (தீயது) என்பதையும் மற்றைய D என்னும் எழுத்து Divine (தெய்வீகம்) என்ற பொருளையும் உணர்த்தும். 'பேய்' என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் Devil என்று குறிப்பிடப்படுவதையும் நாம் அறிவோம்.

Difference என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு வித்தியாசம் என்று பொருள். Reference என்னும் சொல் குறிப்பு என்னும் பொருளைக் கொண்டது. Reverence, Deference என்னும் சொற்கள் வணக்கம், மரியாதை என்னும் பொருளை உடையவை. Elect, Select என்னும் இரு சொற்களில் முதல் சொல் Election என்று தேர்தலை நினைவூட்டினாலும் மற்றது ஒன்றில் இருந்து மிக நல்லதைத் தெரிவு செய்தல் என்ற பொருளையே தரும். Creation என்ற சொல் படைத்தல், உருவாக்குதல் என்ற அர்த்தங்களையும் Re-Creation என்பது மீண்டும் உருவாக்குதல் என்ற கருத்தையே நல்கும். Awake என்னும் சொல் 'நித்திரை விட்டெழல்' என்றும் Wake என்பது மிகுந்த கவனம் (Attentive) எனவும் வழங்கும். Recreation என்னும் மற்றொரு சொல்லுக்குப் பொழுதுபோக்கு என்றும் பொருள். ILL என்னும் ஆங்கிலச் சொல் வியாதியையும் Well என்பது உடல் நலத்தையும் குறிக்கும். Use என்பது பயன்படுத்து என்றும் Abuse அல்லது Misuse என்பது தவறாகப் பயன்படுத்தல் என்றும் பொருள் தரும்.

கவிதைகளில் இடம்பெறும் ஓசைநயம் கட்டுரைகளில் கால் ஊன்றுவதில்லை. ஏனெனில் இரண்டும் ஒன்றல்ல. ஆயினும் இக்கட்டுரையை நான் எழுதத் தொடங்கியதும் ஓசை நயம் மிக்க ஆங்கிலச் சொற்கள் என் மனத்தோடு ஒன்றுசேர்ந்துவிட்டன. அதன் விளைவே இக்கட்டுரை. இது ஆங்கில மொழி ஆட்சி செய்யும் காலம். அதனால் இப்படைப்பும் வாசகர்களை ஈர்க்கும் என்பது எனது நம்பிக்கை.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதுவொரு காலம்...

இதுவரை எனக்குள் பொய்களே
போதிக்கப்பட்டிருக்கின்றன
இதுவரை எனக்கு பொய்யர்களே உறவுகளாய்
இருந்திருக்கின்றனர்

அந்தக்காலத்தில் என்றால்
அம்மம்மா அம்மம்மாவின் சகோதரிகள்
அம்மையா அம்மையாவின் சகோதரர்கள்
என்றுமட்டுமில்லாமல்
அப்பாவின் மூத்த உறவுகளும்
தின் குடி கெட்டித்தனமாய் படிக்கோணும்
கவனமாய் போய் வரோணும்
என்றுதான்
பாராட்டி, சீராட்டியுள்ளனர், இப்பவும்
அந்த மொழிகளை தேடுவதிலேயே
எனது பொழுதைக்கழிக்கிறேன்

ஒரு பதமாய்
ஒரு சம்பவம் மட்டும் சொல்கிறேன்

அந்தக்காலத்தில் மூன்று பொழுதும்
குத்தரிசிச் சோறுதான் சாப்பாடு

காலையானால்
பழுஞ்சோறும் சம்பலும், அதனுடன்
மண்சட்டியில் காய்ச்சிய பழைய
அரைச்சகறிக்குழம்பும் சேர்த்து
குழைச்சுப்போட்டு
கவளம் கவளமாய் அம்மம்மா தருவார்

நாங்கள் இளவல்கள் எல்லோரும்
குந்தியிருந்து, அவர்
தருவதை கைகளில் ஏந்தி உண்டு
மகிழ்வோம்
அந்த சுவைக்கு ஈடாய், இன்று
எந்த சுவையும் உண்டோ..?

சுவை உணவில் மட்டுமில்லை என்பது
காலம் கடந்த ஞானமாய் எனக்குள்
ஊடுருவல் செய்கிறதே...

அன்பு சுமந்த கரங்களின்
அந்தக்காலத்தினை ஏங்கியபடியே
ஒரு கவள சோற்றுருண்டையை
கைகளில் ஏந்தியபடி
என் மூத்தவன் மகனை அழைக்கிறேன்

அவனுக்கு வயது மூன்றுதான் இருக்கும்

குலுங்கி குலுங்கி சிரித்தபடி
என்னிடமே ஓடி வருகிறான்
நான் தந்த சோற்றுருண்டையை
வேண்டாம் என்பது போல திரும்பி
என்னவரிடமே ஓடிப்போகிறான்

அவருடைய கையில் வடிவான
"சமபோசா உருண்டை"
அதை வாங்கி உருசிக்கிறான்
என்ர பேரன்...

அவனை குற்றம் சொல்லி
என்ன பயன் பெற முடியும், நான்?
காலம் எல்லாவற்றையும் மாற்றிப்போட்டுது,
பிள்ளைகளின்ர
ஆரோக்கியமும் குறைஞ்சு போட்டுது...

– சமரபாகு சீனா உதயகுமார்

---

# கவிதைகள் இரண்டு

மனோகரி ஜெகதீஸ்வரன்

கஞ்சாப் புகையை இழுத்து
கருத்தை அதிலே நிறுத்திப்
பிஞ்சு செய்யும் செயலைப்
பின்னே இருந்து பாரும்
நஞ்சை விதைத்து இங்கு
நாசம் செய்வார் யாரோ
வஞ்சம் கொண்ட பகையே
வளரக் காரணம் கேளும்

கொலைவெறியர் ஆட்டம் கண்டு
கொடுவீச்சு பலவும் தாங்கி
தலைதப்பி வந்தோம் அன்று
தடுமாறி அனைத்தும் இழந்து
வலையிட்டே மீண்டும் வருத்தி
வதைக்கின்றார் வறுமை கூட்டி
தலைமுறைக் காப்பை யெண்ணி
தாங்குகின்றோம் அனைத்தும் வாங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# எது நடக்குமோ....அது......!

**ஷெல்லிதாசன்**



மாலினி....பிள்ளை மாலினி.....

அடுத்த வீட்டு கமலா மாமியின் குரல் வாசலில் ஒலித்தது.

எட்டிப் பார்த்தேன்.

மாமி எங்கள் வீட்டுக் கேற்றுக்கு முன்னால் நின்று அழைப்பதைக் கண்ணுற்றேன்.

கேற்றடிக்கு போன நான், கேற்றை திறந்தபடி "என்ன மாமி இந்த நேரம்...இரவு பத்து மணியாகுது. ஆருக்கும் சுகமில்லையோ?"

"இல்லையடி பிள்ளை...எனக்கொரு உதவி செய்வியே பிள்ளை"

"சொல்லுங்கோ....உங்களுக்கு இல்லாத உதவியே"

"பிள்ளை மாலினி... நானும், மகள் சித்திராவும், பிள்ளையளும் நாளைக்கு விடியக் காலை ஐந்து மணி பஸ்சுக்கு கொழும்புக்குப் போறம்"

"என்ன கொழும்புக்கோ...?"

"ஓமடி பிள்ளை...ஒரு கிழமை பள்ளிக்கூட லீவெல்லே..மூத்த மகளிட்டை போகப் போறன்

அவளும் அடிக்கடி வரச்சொல்லி கோல் எடுத்தபடி...அதுதான்."

"ஏன் மாமி கொழும்புக்குப் போறதுக்கு காசு ஏதாவது தேவையோ...?"

"அப்பிடி இல்லை மாலினி...வீட்டுத் திறப்பை உன்னட்டை தரப்போறன் பிள்ளை. எப்பிடியும் நாங்கள் திரும்பி வர நாலைச்சு நாளாகும். அதுவரைக்கும் நீதான்...."

"அதுக்கென்ன மாமி தந்திட்டுப் போங்கோ... இரவிலை லயிற்றைப் போட்டிட்டு வந்தாச் சரிதானே மாமி"

"ஓமடி பிள்ளை. அதோடை பிள்ளை... எங்கடை ஜிம்மிக்கு சாப்பாடு போடவேணும்... அதுக்கு மச்சந்தான் வேணுமெண்டில்லை... எதுவும் சாப்பிடும். மற்றது ஒண்டு சொல்ல மறந்திட்டன் பிள்ளை... சாடியளிலை வைச்சிருக்கிற பூக்கண்டுகளோடை மற்ற மரங்களுக்கும் கொஞ்சம் தண்ணியும் விடவேணும் பிள்ளை... கோவிக்கிறியோ எல்லாத்தையும் தலையிலை போடுறனெண்டு".

"உதிலை என்ன மாமி கோவிக்கிறத்துக்கு இருக்கு....உங்களுக்குச்செய்யாத உதவியே. கவலைப்படாதேங்கோ மாமி. நீங்கள் வரும்வரைக்கும் முடிஞ்சவரைக்கும் வீட்டை பாக்கிறன்."

"அதோடை பிள்ளை ஒண்டைச் சொல்ல மறந்து போட்டன். புதன் கிழமையளிலை இந்தப் பக்கம் குப்பை ரக்ரர் காரங்கள் கட்டாயம் வருவாங்கள். வெளியிலை நாங்கள் உரபாக்கிலை போட்டு வைச்சிருக்கிற குப்பையளை மறக்காமல் அவங்களிட்டை கொடுக்க வேணும்...அதுதான்."

"ஓம் மாமி..நாங்களும் போடத்தானே வேணும். அதோடை உங்கடை குப்பையளையும் போடுறது பெரிய வேலையே மாமி.? இப்ப திறப்பு கொண்டு வந்தனீங்களோ...இல்லை.."

"இல்லைப் பிள்ளை நாளைக்கு காலமை போகேக்கை தாறன்..இப்ப போட்டுவாறன் பிள்ளை"

எனச் சொன்ன மாமி அங்கிருந்து அகன்று சென்றாள்.

000

அன்று புதன் கிழமை, எங்கள் பகுதி யிலுள்ள குப்பைகள் அகற்றும் ரக்ரரின் சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது. அவசர அவசரமாக எனது வீட்டுக் குப்பைகளடங்கிய பாக்கை தூக்கியெடுத்து வீட்டு வாசலில் வைத்துவிட்டு, கமலம் மாமி வீட்டுத் திறப்புகளை எடுத்துக்கொண்டுபோய் முன் கேற்றை திறந்து உள்ளே போய், வீட்டு முன் வாசல் கதவைத் திறந்து, இரவு போட்டுவிட்டுப் போன மின் விளக்கை அணைத்துவிட்டு நின்றவேளை, ஜிம்மி பலமாகக் குலைக்கும் சத்தங் கேட்டு எட்டிப் பார்த்தேன்.

கேற் வாசலடியில் நாலைந்துபேர் நின்றபடி "நாங்கள் டெங்கு செக்பண்ண வந்திருக்கிறம்.. நாய் கடிக்குமோ உள்ளே வரலாமோ" எனக் கேட்டபடி எனது பதிலையும் எதிர் பாராமல் உள் நுழைந்து தங்களது டெங்கு பரிசோதனையில் மும்மரமாக இறங்கி வீட்டு வெளிப்பகுதியெல்லாம் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தனர்.


எனக்கு மனம் திக்குத் திக்கென அடித்தது.

ஏதாவது சிரட்டையள், யோக்கட் கப்பு களுக்கை கொஞ்சம் தண்ணி நிண்டாலும் பரிசோதிக்க வந்தவர்களுக்கு அதுவே காணும், டெங்கு நுளம்பு இல்லாவிட்டாலும் அவர்களது விசித்திரக் கண்களுக்கு டெங்கு நுளம்பு நெளிஞ்சு நெளிஞ்சு மேலே வரும்.

நல்ல காலத்துக்கு அப்படியொன்றும் அவர்களது கண்களுக்குத் தென்படாததால் வெளியேற ஆயத்தமான போது திடீரென ஒரு அதிகாரி "அக்கா...வீட்டிலை பிறிஜ் இருக்கோ?"என்றார். நான் ஓம் எனச் சொல்லி வாய் மூடும் முதலே இருவர் வீட்டின் உள்ளே பாய்ந்து, ஒரு ஆள் வீட்டு விறாந்தை மூலையில் இருந்த பிறிஜ் அருகே போய் அதனைத் திறந்தான். குப்பென ஒரு மணம் எனச் சொல்ல முடியாது பிண நாற்றம். எட்ட நின்ற எனக்கே வயித்தைப் பிரட்டிகொண்டு வந்தது. "என்னக்கா உங்கடை வேலை...ஏதோ மீனோ இறைச்சியோ வைச்சிட்டு பிறிஜ்சை போடாமல் விட்டால்... என்ன ஆக்களப்பா ஒரே..பிணநாத்தம்." என நான்தான் வீட்டுக்காரி என்பதுபோல திட்டிவிட்டு, பிறிஜ்சின் கதவை தடாரென கோபத்துடன் அடித்து சாத்திவிட்டு "இஞ்சை பாருங்கோ அக்கா உடனடியா உள்ளை இருக்கிறதெல்லாத்தையும் அள்ளிக் குப்பை யிலை போட்டிட்டு துப்பரவாக்குங்கோ.. அடியிலை ஒரே தண்ணியா நிக்குது..டெங்கு நுளம்பு கட்டாயம் இருக்கும்" எனச் சொன்னதும் எனக்கு பயமாயிருந்தது ஏதும் எழுதித் துலைச்சால்..?

நல்ல காலத்துக்கு மேலும் அங்கு நிற்க முடியாத அவலத்தில் மூக்கைப் பொத்தியபடி என்னை ஒரு முறைப்பு முறைச்சபடி விட்டால் காணுமெண்டவிதத்தில் வெளியேறிச் சென்றனர்.

இந்த வேளை பார்த்து குப்பை சேகரிக்கும் ரக்ரர் சத்தம் கேட்டதை அவதானித்த நான், மூக்கை மூடி ஒரு துணியால் கட்டியபடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிஜ்சைத் திறந்து நாத்தமடித்துக் கொண்டிருந்த தயிர் சட்டியையும், அழுகி ஒழுகிக் கிடக்கும் மரக்கறி பாக்கையும் எடுத்து ஒரு பெரிய பையில் போட்டு இறுக்கக் கட்டியெடுத்து வெளியேயுள்ள குப்பை பாக்கில் கொண்டுபோய் போட்டு, அதனை குப்பையேற்றும் ரக்ரர் காரரிடம் ஒப்படைத்து ஒரு பெருமூச்செறிந்து நிமிர்ந்தேன்.

என்னடா ஒரு தொல்லை ஒரு பத்து நிமிசத்துக்கிடையில் ஒரு உயிரை வாங்கிய பரபரப்பு எனக்கு.

*000*

கமலம் மாமியும், மகள், பேரப் பிள்ளைகளும் அடுத்த நாள் வியாழன் மாலை கொழும்பிலிருந்து திரும்பவும் வந்துவிட்டதை அறிந்த நான், அவர்களது வீட்டுத் திறப்பை ஒப்படைக்க அங்கு சென்றேன்.

டெங்குக் காரர் வந்ததும், பிறிஜ்சை அவர்கள் திறந்து பார்த்ததையும் விலா வாரியாக நான் சொல்லி முடித்துவிட்டு, “மாமி, நல்ல காலத்துக்கு குப்பை ரக்ரர் காறங்கள் வந்ததாலை, பிறிஜ்சுக்குள்ளை வெடில் நாத்தமடிச்ச தயிர் சட்டியையும், அழுகி ஒழுகிக் கிடந்த மரக்கறி பாக்கையும் அள்ளி கட்டி எடுத்துக்கொண்டுபோய் வெளியிலை இருந்த குப்பை பாக்கிலை போட்டு குப்பை ரக்ரர் காரரிட்டை குடுத்திட்டன்” என மிகுந்த கெட்டித்தனத்துடன் மாமியிடம் சொல்லிட்டு மாமியைப் பார்த்தேன்.

“எல்லாம் போச்சு...எல்லாம் போச்சு“ என தலையிலடித்த மாமி மயங்கி தரையில் சரிந்தாள்.

எனக்கோ, மகள் ரேவதிக்கும்கூட ஒன்றுமே புரியவில்லை.

“கொழும்பாலை இங்கை வரும்வரை அம்மா எல்லாரோடையும் நல்லதா சிரிச்சுக் கதைச்சுத்தானே வந்தவ” என மகள் ரேவதி எனக்குச் சொல்லி அழுதுகொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்த மாமி “கொழும்பாலை வந்த களைப்பு அதுதான்...”

எனச் சமாளித்துவிட்டு, மகளைப் பார்த்து “பிள்ளை எனக்கு கொஞ்சம் கோப்பி போட்டுட்டு வா.. பிள்ளை எனக்கு களைப்பாயிருக்குது” எனச்சொல்லி மகளை அனுப்பிவிட்டு, என்னை ரகசியமாக வெளியே அழைத்துக்கொண்டு போன மாமி, எனக்குச் சொன்ன கதையைக் கேட்டு எனக்கும் மயக்கமாக வந்தது.

பின்னை மயக்கம் வராமல் என்னதான் செய்யும்?

கொழும்புக்குப் போகமுதல் மாமி தனது எல்லா நகைகளையும் போட்டுக்கொண்டு போகப் பயந்து, தனது ஒருசோடிக் காப்பு, இரட்டைப் பட்டுச் சங்கிலி, இன்னும் சின்னச் சின்ன நகைகளை ஒரு லேஞ்சியில் போட்டு முடிந்து, அலுமாரிக்கை, சாமிப்படத்துக்குப் பின்னால், சமயலறைக்குள் இருந்த மிளகாய், கோப்பி டப்பாக்களுக்கை ஏதாவது ஒன்றில் வைத்தால் தற்செயலாய் கள்ளங்கள் இரவிலை நுழைஞ்சால் முதலில் அதுகளைத்தான் ஆராய்வாங்கள் எனப் பலமாக யோசித்து விட்டு, கள்ளன்கள் ஆராய்ந்து பார்க்காத ஒரு இடத்தில் அவற்றை மறைத்து வைக்க எண்ணி, தான் முதல் நாள் வாங்கி வைத்திருந்த மரக்கறிகள் நிறைந்த பொலித்தீன் பையில் அவற்றை மறைத்து வைத்து பிரிஜ்சின் அடியில் போட்டு விட்டுப் போனதையும், கொழும்புக்குப் போவதற்கு முதல் நாள் ராத்திரி பலத்த இடி மின்னல் மழையாயிருந்ததால் மகள் பிரிஜ்சை நிறுத்தி வைத்துவிட்டு மீண்டும் அதை போட மறந்துபயணம் செய்ததாலையும் வந்த வினைதான் என, கமலம் மாமி சொன்ன கதையைக் கேட்டு எனக்கு அழுவதா சிரிப்பதா எனத் தோன்றவில்லை.

மாமியின் முகத்தைப் பார்த்தேன் கன்றிச் சிவந்திருந்தது.

பாவம் மாமி இழந்த ஆறேழு பவுண் நகைகளையும் நினைக்க எனக்கு கவலையாய் இருந்தது. நன்மை செய்யப்போய் இப்பிடியெல்லாம் நடக்குமெண்டு ஆர் நினைச்சது...

இப்ப பவுண் விக்கிற விலைக்கு...!

அழுது கொண்டிருந்த மாமியை எப்படித் தேற்றுவது?

“உன்னுடையது எதையிழந்தாய்...? எதற்காக நீ அழுகிறாய்..?” என்ற கீதாசாரத்தின் வரிகள்தான் எனக்கு அந்தவேளை ஞாபகத்தில் உதிக்க அதனை மாமிக்குப் பிரயோகிப்பதைத் தவிர எனக்கு வேறு வழி தோன்றிவில்லை.

OOO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசி. கந்தராஜாவின்

# அகதியின் பேர்ளின் வாசல்





தி.ஞானசேகரன்

அவுஸ்திரேலியாவில் வாழும் ஆசி கந்தராஜா பூங்கனியியல், உயிரியல் தொழில்நுட்பத்துறைப் பேராசிரியர். பல்கலைக்கழகப் பணிநிமித்தம் இவர் சென்ற நாடுகளில் தான்கண்ட வித்தியா சமான நிகழ்வுகள், வாழ்வியல் தரிசனங்கள் ஆகியவற்றைப் படைப்புகளாகத் தருபவர். ஏற்கனவே இவரது நூல்களாக பாவனை பேசலன்றி, உயரப்பறக்கும் காகங்கள், கள்ளக் கணக்கு, பணச்சடங்கு ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் கீதையடி நீ எனக்கு என்ற குறுநாவல் தொகுதியும் கறுத்தக் கொழும்பான், செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக்கத்தரிக்காய் மண்அளக்கும் சொல் ஆகிய புனைவுக்கட்டுரைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன. இவற்றைவிட Horizon ஆங்கில மொழி பெயர்ப்புச் சிறுகதைத் தொகுதி மற்றும் ஹெய்க்கோ சிங்கள மொழி பெயர்ப்புச் சிறுகதைத் தொகுதி ஆகியனவும் இவரது நூல்களாகும்.

அகதியின் பேர்ளின் வாசல் இவர் எழுதிய வரலாற்றுப் புதினம். ஈழத்தமிழரின் உரிமைப் போர் 1982இல் ஆரம்பித்து ஏறத்தாழ மூன்று தசாப்தகாலம் நீடித்தது. இக்கால கட்டத்தில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து பல்வேறுநாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். ஆசி கந்தராஜாவின் இந்த நாவல், இப்புலப் பெயர்வின் ஆரம்பகால வரலாற்றினை அடியொற்றி மிகைப்படுத்தலோ திரிபுபடுத்தலோ இன்றி எழுதப்பட்ட நாவலாகும்.

சிங்களப்பேரின வாதத்தின அராஜகமும் அதற்கெதிராக எழுந்த தமிழர்களின் போராட்டமும் தமிழர்களை ஏதிலிகளாக்கி புலம் பெயர வைத்தன. இப்புலப் பெயர்வின்போது இன்னுமொரு பகுதியினர் நிலைமையைச் சாதமாக்கி பொருளாதார மேம்படுத்தலுக்காக அகதியென்ற போர்வையில் புலம் பெயர்ந்தனர். இதற்கான காரண காரியத் தொடர்புகளை யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூக பொருளாதார பண்பாட்டுப் பின்னணியில் ஆராய்கிறார் ஆசிரியர். அதேவேளையில் உலகளாவிய அரசியலையும் வல்லரசுகளின் தந்திரோபா யங்களையும் விளக்கமாக கூறிச் செல்கிறார்.

பாலமுருகன் மேற்படிப்புக்காக சட்ட பூர்வமாக பேர்ளின் வந்தவன். தவராசா சட்டபூர்வமற்ற முறையில் அகதியாக பேர்ளின் வந்தவன். இந்த இருவருமே இந்த நாவலின் முக்கிய பாத்திரங்கள். இப்பாத்திரங் களினூடாக கதையை நகர்த்திச் செல்கிறார் ஆசிரியர். பால முருகனின் சுயவரலாறாக ஒரு கதையும், இனக்கலவரம் காரணமாக உண்டான போர்க்கால நெருக்கடியால் புலம் பெயர்ந்த தவராசாவின் கதையும் இணைந்தும் பிணைந்தும் நாவலில் நகர்த்தப்படுகின்றன.

வெளிநாட்டில் உயர்கல்வி பெற்ற பாலமுருகனுக்கு யாழ்ப்பாணச் சமூகத்தில் கிடைக்கும் கௌரவமும் மரியாதையும் இவற்றை அவனுக்கு அளிக்க நினைக்கும் குடும்பங்களின் போட்டிகள் இவற்றையெல்லாம் பெரிதாக நினைக்காத காதல்மனம், காதலை வெளிப்படுத்தத் தயங்கும் ஆண்பெண் மன நிலைகள் என அவனது வாழ்க்கைக் கோலங்கள் மனக்கோலங்களாக நகர்த்தப்படுகின்றன. அதேவேளை அவனது புறநிலைக்கோலங்களாக பேர்ளின் நகரமும் சோசலிச


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கட்டுமானமும் அதனை இல்லாதொழிக்க முதலாளித்துவ கட்டுமான அரசும் நாவலில் விவரிக்கப்படுகின்றன. ஈழத்து அகதிகளின் இருப்பையும் பணிகளையும் தண்டனைகளையும் நீதிமன்ற விசாரணைக்கு உதவும் ஒருவனாக இவன் வலம் வருகிறான். ஒரு கட்டத்தில் தனது பள்ளிக்காலத்து நண்பன் தவராசாவின் கதையும் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டிய நிலையில் அவன் இனம் மொழி சார்ந்த அடையாளத்தினால் தனது நண்பனையும் காப்பாற்றி புதியதொரு வாழ்க்கைக்குள் நுழைத்து சாட்சியாக ஒப்பம் இடுகிறான்

இணைக்கதையாக நகர்த்தப்படும் தவராசாவின் கதையில் இலங்கை அரசியலில் ஈழத் தமிழர்களின் போராட்ட வாழ்க்கை மற்றும் உரிய ஆவணங்கள் ஏதுமின்றி ஜேர்மனிக்குள் வந்திறங்கும் ஈழத்தமிழ் அகதிகளின் இருப்பையும் வாழ்க்கையையும் விபரிப்பதாக அமைகிறது. சட்டவிரோதமாக குடிபெயரும்போது போதைவஸ்த்துக்கடத்தலில் தொடர்புள்ளவனாக சந்தேகத்தின்பேரில் சிறையில் வாட நேரிடுகிறது.

இவர்களூடாக கதை நகரும்போது யாழ்ப்பாண சமூகத்தின் அன்றைய சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு கூறுகள் மற்றும் சாதிய மேல்தட்டு வர்க்கத்தினரின் செருக்குகள் மூடநம்பிக்கைகள் சுயநலம் போன்றவை விவரணமாகின்றன.

மேலும் புலம்பெயர்ந்து செல்வோரை இலக்காக கொண்டு போதைவஸ்த்துக்கடத்தல் மனிதக்கடத்தல் போன்ற அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும் செய்யும் பணமுதலைகள் சட்ட விரோதமாக புலம்பெயரும் பெண்களை சீரழித்துச் சிதைத்த காமுகர்கள் எனப்பல விடயங்கள் விவரணமாகின்றன.

சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சியின்போது ஒரேநாடாக இருந்த ஜேர்மனி இரண்டாம் உலகப்போரில் இரண்டாகப்பிரிந்ததும் அவ்வாறு பிரிந்த கிழக்கு ஜேர்மனியை ரஷ்ய மேலாதிக்கத்தின் சோஷலிச ஆட்சிகொண்ட பகுதியாகவும் மேற்கு ஜேர்மனியை அமெரிக்கா பிரித்தானியா பிரான்ஸ் நாடுகளின் கூட்டணியில் முதலாளித்துவ ஆட்சி முறைமை கொண்டதாகவும் விளங்கியது.

மேற்குறிப்பிட்ட நான்கு வல்லரசுகளுக்கிடையேயான பொஸ்டம் உடன்படிக்கை முக்கியத்துவம் பெறுகிறது. இந்த உடன்படிக்கை ஒப்பந்தம் புலம் பெயர்ந்து சென்ற அகதிகளின் இறங்கு துறையாக கிழக்கு ஜேர்மனியை மாறுவதற்கு காரணியாகவும் அமைந்து விடுகிறது இவ்வாறு கிழக்கு ஜேர்மனியை சென்றடைந்த அகதிகள் அங்கிருந்து மேற்கு ஜேர்மனியின் தலைநகரான மேற்கு பேர்லினுக்கு சுரங்க ரயில்பாதை மூலமாக திட்டமிட்டு மாற்றப்பட்டனர். இதுகிழக்கு ஜெர்மனிக்கும் மேற்கு ஜேர்மனிக்கு மிடையான ஒரு பனிப்போராக மாறியது. முதலாளித்துவ ஆட்சியில் இருந்த மேற்கு ஜேர்மனிக்கு தொல்லை கொடுப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

மெற்குலக அரசியல் தந்திரத்தை விளக்க, சொரியல் காணியும் பங்குக் கிணறும் வாய்க்கால் வழியும் போன்ற யாழ்ப்பாணத்தில் நிலவும் காணிக் கோட்பாட்டை ஆசிரியர் காட்டுவது சுவாரஸ்யமானது.

மேலும் புலம்பெயர்வின்போது இடைத் தங்கலாக இந்தியாவின் பம்பாய் நகரிலுள்ள தாராவியும் அதனை அண்மித்த மாத்துங்கா மற்றும் அங்குள்ள சிவப்பு விளக்குப்பகுதி போன்ற இடங்கள் நாவலில் ஆவணமாகின்றன.

போதைவஸ்த்து கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தின் பெயரில் தவராசா சிறையில் வாடியபோது அவனுடன் சிறையில் கூட இருந்தவர் அலெக்ஸ் என்னும் ஒரு ஜேர்மனியர். அவருடன் தவராசா நெருக்கமான உறவைப்பேணுகிறான். முதலாம் திகதி ஒக்டோபர் மாதம் 2017ம் ஆண்டு ஒரு பாலினத் திருமணம் ஜேர்மனியில் அங்கீகரிக்கப்பட்டது. தவராசா தனது அறுபதாவது வயதில் அலெக்ஸை சட்டப்படி திருமணம் செய்து கொண்டார். அவர்களது திருமணத்துக்கு பேராசிரியர் டாக்டர் பாலமுருகனே கையெழுத்துப் போட்டார் என நாவல் நிறைவுபெறுவது.

இந்த நாவலில் கையாளப்பட்டிருக்கும் மொழிநடை விதந்து கூறப்படவேண்டிய தொன்று. யாழ்ப்பாண மண்வாசனைச் சொல்லாடல்கள் விரவிவர கதையை நகர்த்துகிறார் ஆசிரியர். இன்று வழக்கொழிந்து வரும் சில சொற்களுக்கு புத்துயிர் அளித்திருக்கிறார் ஆசிரியர். ஆற்றொழுக்கான அவரது மொழிநடை நாவலுக்கு மேலும் வளம்சேர்ப்பதாக அமைகிறது.

ஈழத்தமிழரின் புலம்பெயர் வரலாறு, அரசியல் சமூகவியல் பண்பாட்டியல் புவியியல் ஆகிய அம்சங்களுடன் இணைக்கப்பட்ட சிறந்ததோர் ஆவணமாகத் திகழ்கிறது அகதியின் பேர்ளின் வாசல் நாவல்.

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## நினைவில் நிற்பவர்கள்

கண்டி மாநகரைப் பொறுத்தவரை, கண்டி மலையகக் கலை கலாசாரச் சங்கம் அடிக்கடி கலை இலக்கியவாதிகளையும், அறிஞர் பெரு மக்களையும் நினைவுகூர்ந்து வருகின்றது. அந்த வகையில், அண்மையில் ஓர் இந்திய அறிஞர் பெருமகனும், இரு இந்நாட்டுக் கலைஞர்களும் நினைவுகூரப்பட்டனர். இந்தியச் சட்டமேதையும், ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் உயர்வுக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்தவருமான டாக்டர் அம்பேத்கார், நம்நாட்டு நாடக, திரைப்படக் கலைஞர்களான எஸ். விஸ்வநாதராஜா, கண்டியூர் சந்திரா ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வாக அது இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் ஈழத்துப் பாலசுப்பிரமணியம் எனப் புகழ்பெற்ற பஸீல், பழைய திரைப்படப் பாடல்களைப் பாடி, நிகழ்ச்சியைச் சிறப்பித்தார். இத்தகைய நிகழ்ச்சிகளை அடிக்கடி நிகழ்த்தி வரும் மலையகக் கலை கலாசாரச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ராஜா ஜென்கின்ஸ் எல்லோரதும் பாராட்டுக்கு உரியவர்.

டாக்டர் அம்பேத்கார் இந்தியப் பெரும் தலைவர்களில் ஒருவர். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அவர், அம்மக்களின் உயர்வுக்காக அரும்பாடுபட்டவர். இந்திய அரசியல் சட்டத்தை வரைந்தவர். அவரது வாழ்க்கைச் சரிதம் டாக்டர் அம்பேத்கார் என்னும் திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. மலையாள நடிகர் மம்முட்டி அம்பேத்காராக அற்புதமாக நடித்துள்ளார். நேரடியாக அம்பேத்காரையே பார்ப்பது போல வேடப்பொருத்தமும், நடிப்பும் இருந்தன.

விஸ்வநாதராஜா நாடக, திரைப்பட நடிகராக விளங்கியவர். இலங்கையில் தயாரிக்கப்பட்ட நிர்மலா திரைப்படத்தின் மூலம் அவர் திரைப்பட நடிகரானார். அவர் இரண்டாவதாக நடித்த காத்திருப்பேன் உனக்காக என்ற இலங்கைத் திரைப்படத்தில் தான் நான் முதன்முதலாக விஸ்வநாதராஜாவின் நகைச்சுவை நடிப்பைப் பார்த்து மகிழ்ந்தேன். படத்தைப் பார்த்தபின், இலங்கைத் திரைப்படங்கள் பற்றி மல்லிகையில் நான் எழுதிய கட்டுரையில், விஸ்வநாதராஜாவின் சிறந்த நடிப்பைச் சிலாகித்து எழுதினேன். இலங்கைத் திரைப்படத்துறைக்கு ஒரு புதிய சிறந்த நகைச்சுவை நடிகர் கிடைத்துள்ளார் என்று குறிப்பிட்டிருந்தேன். விஸ்வநாதராஜா வேறு சில இலங்கைத் தமிழ்ப்படங்களிலும், சிங்கள, ஆங்கிலப் பட்ங்களிலும் நடித்துள்ளார். தமிழ், சிங்கள, ஆங்கிலத் திரைப்படங்களுக்குத் திரைக்கதைகளும் எழுதியுள்ளார். ஒரு கலைஞர் மாத்திரமன்றி, பல்துறை விற்பன்னராகவும் விளங்கியவர். அவரது நினைவேந்தல் நிகழ்வில், எழுத்தாளரும், கவிஞருமான அவரது மனைவி இஸ்மாலிகா அவர் பற்றிப் பேசினார்.

கண்டியைச் சேர்ந்த சந்திரா, பாடசாலைக் காலத்திலேயே நடிப்பு, நடனம் ஆகிய கலைகளில் ஈடுபாடு கொண்ட கலைஞராக விளங்கினார். பல பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றுத் திகழ்ந்தார். எதிர்காலத்தில் தாம் ஒரு நடிகையாக வரவேண்டும் என்று விரும்பியிருந்தார். ஒரு திரைப்படத்திலாவது தாம் நடிக்கவேண்டும் என்றும் விருப்பம் கொண்டிருந்தார். முகச் சாயலில் பிரபல இந்திய நடிகை அஞ்சலி தேவியை ஒத்திருந்ததால், இலங்கை அஞ்சலி தேவி என்றும் குறிப்பிடப்பட்டார். அவர் எதிர்பார்த்தபடியே காத்திருப்பேன் உனக்காக என்ற இலங்கைத் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. இத்திரைப்படத்தில், அவரது புதல்வர் ராஜா ஜென்கின்ஸும் நடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களில் காத்திருப்பேன் உனக்காக என்ற திரைப் படத்துக்கும் ஒரு தனியிடம் உண்டு.

## பாராட்டவேண்டிய பெரும்பணி

"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என்று கூறினார், பாரதிதாசன். தமிழுக்குத் தொண்டு செய்வோர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமல்லர். தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிறநாட்டினரும் பிறர் வியக்கும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

தமிழுக்குத் தொண்டு செய்துவந்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர், ஜி.யு. போப். கனடாவின் பிரின்ஸ் எட்வேர்ட் தீவில் பெடெக் என்ற நகரத்தில் 1820இல் பிறந்த போப், தமது 19 ஆவது வயதில் தென்னிந்தியாவுக்கு வருகை தந்தார். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளை அவர் தமிழ்நாட்டில் கழித்தார். தமிழ் இலக்கியங்களின் பெருமை அறிந்த அவர், திருக்குறள் (1886), திருவாசகம் (1890), நாலடியார் (1893) முதலான வற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அவற்றின் சிறப்பை உலகறியச் செய்தார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கினார். அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் பன்னிரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 1968இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது, மெரினா கடற்கரையில், அவரது உருவச்சிலை நிறுவப்பட்டு, அவர் கௌரவிக்கப்பட்டார்.

அண்மையில், ஜி.யு.போப் பிறந்த இடமான பிரின்ஸ் எட்வேர்ட் தீவில் பெடெக் நகரத்தில், அவரது 200 ஆவது பிறந்தநாளை நினைவுகூருமுகமாகக் கனேடியத் தமிழர் பேரவை அவரது உருவச்சிலையைத் திறந்து வைத்து, அவரது தமிழ்ப்பணியைக் கௌரவித் துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினும் இச்செயலைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். உண்மையில், கனேடியத் தமிழர் பேரவையின் இச்செயல் போற்றிப் பாராட்டுவதற்கு உரியது.

## மூன்று நல்ல மாற்றங்கள்

தமிழ்த் திரையுலகில் அவ்வப்போது தேவைக்கேற்பப் பல்வேறு மாற்றங்கள் இடம்பெறுவதுண்டு. அவற்றில் மூன்று நல்ல மாற்றங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. பழைய மூன்று திரைப்படங்களில் ஏற்படுத்தப்பட்ட அந்த மாற்றங்கள், உண்மையில் அந்தத் திரைப்படங்களுக்கே சிறப்பைத் தந்துள்ளன. காலம் பல கடந்தும்கூட, இன்றும் அம் மாற்றங்கள் திரைப்பட ரசிகர்களின் நெஞ்சங் களில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

சம்பூர்ண ராமாயணம் படத்தில் இராமராக என்.ரி. ராமராவும், சீதையாகப் பத்மினியும், பரதனாகச் சிவாஜிகணேசனும் இலட்சுமணனாக நரசிம்மபாரதியும் நடித்திருந்தனர் என்பது பலருக்கும் தெரிந்த விடயம். இத்திரைப்படத்தில் பரதனாக நடிப்பதற்கு முதலில் எஸ்.எஸ். ராஜேந்திரனைத்தான் அணுகினார்கள். ராஜேந்திரன் தான் 'இலட்சிய நடிகர்' ஆயிற்றே. புராண, இதிகாசப் படங்களில் நடிப்பதில்லை என்ற தம் இலட்சியக் கொள்கைக்கேற்ப, அப்படத்தில் நடிக்க மறுத்துவிட்டார் (ஆனானப் பட்ட எம்.ஜி. ஆர் கூட ஒரு படத்தின் பாடல் காட்சியில் முருகனாக நடித்துள்ளார்). அதனால், சிறுபாத்திரத்தில் நடிக்கச் சம்மதிப்பாரோ என்ற தயக்கத்துடன் சிவாஜியை அணுகினார்கள். ஆனால், சிவாஜி சிறுபாத்திரமாக இருந்தாலும், அதனை ஏற்று நடிக்கச் சம்மதித்தார். அவர் ஏற்ற பரதன் பாத்திரம், அப்படியே பரதனை முன் நிறுத்தியது. அப்படத்தைப் பார்த்த மூதறிஞர் ராஜாஜி, "பரதனைக் கண்டேன்" என்று பாராட்டினார். சிவாஜிகணேசன் நடித்ததனால், அப்பாத்திரம் உயிர் பெற்றது.

கர்ணன் படத்தில் கிருஷ்ணனாக நடிப்பதற்கு முதலில் ஜெமினிகணேசனைத்தான், அதன் இயக்குநரும், தயாரிப்பாளருமான பி.ஆர். பந்துலு தீர்மானித்திருந்தார் (வீர அபிமன்யு படத்தில் ஜெமினிகணேசன் கிருஷ்ணனாக நடித்தார்). ஆனால், சிவாஜிகணேசன், அப்பாத்திரத்துக்கு என்.ரி. ராமராவ் பொருத்தமாக இருப்பார் என்று தெரிவித்ததோடு, அவருக்கு இரண்டு பாடல் காட்சிகளையும் வழங்குவதற்கு வழிவகுத்தார். அப்படத்தில் சிவாஜி கர்ண னாகவும், என்.ரி. ராமராவ் கிருஷ்ணனாகவும் அற்புதமாக நடித்தனர். மற்றவர்களும் நன்றாகச் செய்தனர். சிவாஜியினால் ஏற்படுத்தப்பட்ட அந்த மாற்றம், படத்துக்குச் சிறப்பைத் தந்தது.

திருவிளையாடல் படத்தில் பாகவதராக நடித்த ரி. எஸ். பாலையா பாடுவதாக அமைந்த "ஒருநாள் போதுமா? நான் பாட இன்றொருநாள் போதுமா?" என்ற பாடலைப் பாடுவதற்காக முதலில் சீர்காழி கோவிந்தராஜனைத் தான் இயக்குநர் ஏ.பி. நாகராஜன் அணுகினார். ஆனால், கதையின்படி பாகவதருக்குத் தோல்வி ஏற்படுகிறது என்பதனால், தாம் அப்பாடலைப் பாடமுடியாது என்று கோவிந்தராஜன் மறுத்து விட்டார். அதனால், பாலமுரளி கிருஷ்ணாவை நாகராஜன் அணுகினார். பாடலும் மிக அற்புதமாக அமைந்துவிட்டது. இன்றும் என் போன்ற பல்லாயிரக்கணக்கான ரசிகர்களால் விதந்து போற்றப்படும் பாடலாக அது அமைந்து விட்டது.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பேசுகிறார்

ஈழத்தைச் சேர்ந்த பல்துறை அறிஞர் பெருமக்களுக்கு இயல்முனைவர் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கும் சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் சாகித்தியரத்னா தி.ஞானசேகரன், பேராசிரியர் சி. தில்லைநாதன் ஜனாதிபதி சட்டத்தரணி முனைவர் கனக ஈஸ்வரன், வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன், கலாநிதி செல்வி திருச்சந்திரன் ஆகிய அறிஞர்கள் ஐவருக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கமானது இயல் முனைவர் என்ற பட்டத்தை வழங்கி 'மெல்லத் தமிழினி வாழும்' என்ற காத்திரமான செய்தியைப் பாறறியப் பறை சாற்றியுள்ளது. மேற்சொன்ன ஐந்து ஆளுமைகளுக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்க அங்கத்தவர்கள் சார்பாக எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம்.

**கலைமாமணி கா.தவபாலன்**

●●●

ஞானம் சஞ்சிகை 278 ஆடி மாத இதழில் வெளிவந்த திருமதி .ரஞ்ஜனி சுப்பிரமணியம் எழுதிய 'நான் சந்தியில் நிற்கிறேன்' என்ற சிறுகதையைப் படிக்க நேர்ந்தது. உண்மையான ஒரு சம்பவத்தை வர்ணனைகள் இல்லாமல் இயற்கையாகவே எழுதியுள்ளார். சந்தியில் நின்றவாறே மனிதமனங்களின் குணாதிசயங்களையும், மனப் பிறழ்வுகளையும் பாத்திரங்களினூடாகப் படம் பிடித்துக்காட்டியுள்ளார். 'பிச்சையெடுத்த பெண்களுக்கு ஆடை விலகல்' பற்றிய அவதானமிருந்தது. எனப் பெண்மையை மாசுபடுத்தாமல் பாத்திரத்தைச் சித்தரித்துள்ளார். ஔவையாரின் அறம்செய்ய விரும்பு எனும் கருத்துக்கிணங்க தர்மம் செய்ய விரும்புவதே தர்மம் தான். அதற்கு அப்பாலும் "தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயம்பியது போல் **இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின், கரப்பான் இரவன்மின்** என்று இல்லை என்போரிடம் யாசிக்காமல் கொடுப்போரிடம் யாசித்த முடவன் கிடைத்ததை எண்ணி உவகையடைந்தான். யாசகம் எடுப்பது, யாசகம் கொடுப்பது சரியா? தவறா? என்ற விவாதத்துக்கு அப்பால் பாத்திரம் அறிந்து பிச்சையிடு எனும் கருத்தை வலியுறுத்துகிறது இந்தச் சிறுகதை.

**-ராதா சிவப்பிரகாசம்**

○○○

## நின்றால்தான் என்ன!?

**கனகசபாபதி செல்வநேசன், அல்வாய்.**

முகில்கள் உடைத்து எட்டிப் பார்க்கும்
நிலவின் நீல ஒளி
என் கரங்களில் ஒரு
பறவையின் முறிந்த சிறகு
ரத்தம் உறையாமல்..!
விடியலுக்கு முன்னர்
ஒப்படைத்துவிட வேண்டும்.

இருக்கு இல்லை என்கிற
வாதப் பிரதிவாதங்களுக்கிடையில்
அடுத்த கட்டத்துக்கு நகர்கிறது
பெருந் தவறுகள்!

பாதைகள் எங்கும்
புதைகுழிப் பொறிகள்
கவலைகள் வேரோடி
அடர்ந்த மரங்களுக்கிடையே
மறைந்திருக்கும் வழித் தடங்கள்.

பனித்துளி தீண்டி
நகரும் நத்தையின் ஓட்டுக்குள்
ஒளிந்திருக்கும் அருவி
அங்கே ஒரு ட்ராகன்
உயிர்பெற்று எழுகிறது.

ஓ! என்
பணியைத் துரிதப்படுத்தும்
போதிமரம் அது!

கண்டம் விட்டுக் கண்டம் பாயும்
தவளையை உரசியபடி
கடந்து செல்கிறது வௌவால்
அது இடறி விழுந்த
முட்படுக்கை விலக்கி
எட்டிப் பார்க்கிறது
விடுதலைப் பறவை
விழிகளில் அகரம் மெல்லத் திறந்து
மகரத்தில் நனைகிறது
நான் நிலைத்து நிற்கிறேன்!
நின்றுகொண்டிருக்கிறேன்
எத்தனை காலமானாலும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (22) லீலாவதி அரசியின் நாணயங்கள்

தர்மாசோகதேவனைப்போன்று ஒரு வினோதமான வரலாற்றைக்கொண்டவளாக லீலாவதி அரசி இலங்கை வரலாற்றிலே இடம்பெறுகின்றாள். முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதி, பராக்கிரமபாகுவின் மறைவிற்குப்பின் (கி.பி.1186) பதினொரு ஆண்டுகள் கழித்து கி.பி. 1197ஆம் ஆண்டு பொலனறுவையில் ஆட்சிக்கு வருகின்றாள். இலங்கை வரலாற்றிலே அனுலா, சிவாலி, கல்யாணவதி, டோன கதரீனா, சுகுலா போன்ற பெண் அரசிகள் அரசாட்சி செய்துள்ளபோதிலும் லீலாவதியின் அரசாட்சி கவனிபுக்குரியது. இவள் பதினைந்து ஆண்டு காலப்பகுதியிலே மூன்று முறைகள் அரசபீடம் ஏறியுள்ளாள்.

| | | |
|---|---|---|
| முதலாம் பராக்கிரமபாகு | கி.பி. 1153 – 1186 | – நாணயம் உண்டு |
| இரண்டாம் விஜயபாகு | கி.பி. 1186 – 1187 (முதலாம் பராக்கிரமபாகுவின் மருமகன்) | |
| ஆறாம் மகிந்தன் | கி.பி. 1187 – 1187 | |
| நிஸ்ஸங்கமல்லன் | கி.பி. 1187 – 1196 (முதலாம் பராக்கிரமபாகுவின் மருமகன்) | – நாணயம் உண்டு |
| முதலாம் வீரபாகு | கி.பி. 1196 – 1196 (நிஸ்ஸங்கமல்லனின் மகன்) | |
| இரண்டாம் விக்கிரமபாகு | கி.பி. 1196 – 1196 (நிஸ்ஸங்கமல்லனின் இளைய சகோதரன்) | |
| சோடகங்கன் | கி.பி. 1196 – 1197 (நிஸ்ஸங்கமல்லனின் மருமகன்) | – நாணயம் உண்டு |
| லீலாவதி (1ஆம் முறை) | கி.பி. 1197 – 1200 (முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவி) | – நாணயம் உண்டு |
| ஸாகஸமல்லன் | கி.பி. 1200 – 1202 (நிஸ்ஸங்கமல்லனின் இளைய சகோதரன்) | – நாணயம் உண்டு |
| கல்யாணவதி (அரசி) | கி.பி. 1202 – 1208 (நிஸ்ஸங்கமல்லனின் மனைவி) | |
| தர்மாசோகன் | கி.பி. 1208 – 1209 | – நாணயம் உண்டு |
| அனிகங்கன் | கி.பி. 1209 – 1209 (தர்மாசோகனின் தந்தை) | |
| லீலாவதி (2ஆம் முறை) | கி.பி. 1209 – 1210 (முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவி) | – நாணயம் உண்டு |
| லோகேஸ்வரன் | கி.பி. 1210 – 1211 | |
| லீலாவதி (3ஆம் முறை) | கி.பி. 1211 – 1212 (முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவி) | – நாணயம் உண்டு |
| பராக்கிரம பாண்டியன் | கி.பி. 1212 – 1215 | |
| கலிங்க மாகன் | கி.பி. 1215 – 1236 | |

லீலாவதி அரசி பற்றிய பிறிதொரு சுவாரசியமான செய்தியாக 1981ஆம் ஆண்டு இலங்கையிலே இனங்காணப்பெற்ற Shearella இனத்தைச் சேர்ந்த ஒருவகை சிலந்தி உயிரினத்துக்கு Shearella lilawati (லீலாவதி) என்று பொலனறுவை அரசியை கருத்திலே கொண்டு பெயர் சூட்டப்பட்டமை அமைகின்றது.

கி.பி. 1306 – 1329 வரை ஸ்கொட்லாந்து நாட்டை ஆட்சிசெய்த முதலாம் ரொபர்ட் புரூஸ் மன்னனின் சிலந்தியுடன் இணைந்த நிகழ்வு உலகப் புகழ்பெற்றது. எதிரியிடம் தோல்வியடைந்த ரொபர்ட் மன்னன், குகை ஒன்றிலே மறைந்திருக்கும்போது சிலந்தியொன்று பலமுறை முயன்று வலை பின்னியதைக் கண்டு மனம் உறுதியடைந்த மன்னன் மீண்டும்மீண்டும் சண்டையிட்டு தன்நாட்டை மீட்டான். இவ்வாறே தமிழ் இலக்கியத்திலே கோச்செங்கட் சோழ நாயனார் புராணத்திலே யானை சென்று சிலந்தியின் வலையை தினமும் அழிக்க சிலந்தி மீண்டும்மீண்டும் வலைபின்னிய பதிவைக் காணலாம். இவ்வாறு பொலனறுவை இராச்சியத்தை அரசி லீலாவதி, தனது கணவனின் மறைவிற்குப் பின்னரும் 26 ஆண்டுகள்வரை மீண்டும்மீண்டும் முயற்சிசெய்து மூன்றுமுறை அரசாட்சி ஏறிய விடாமுயற்சி மெச்சத்தக்கது.



Shearella Lilawati
சிலந்தி வகை



Robert the Bruce மன்னன், சிலந்தியின் விடாமுயற்சியைக் கண்டகுகை



Robert the Bruce மன்னன், சிலந்தியின் விடாமுயற்சியைக் காணும் விதத்திலே தீட்டப்பட்ட ஓவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/60/2023



லீலாவதீ அரசியின் நாணயங்கள் ஆயிரக்கணக்காக கிடைக்கப்பெறுகின்றன. நாணயத்தின் ஒருபுறத்திலே ஸ்ரீ ராஜ லீலா வ தீ என்று தேவநாகரி எழுத்திலே பொறிக்கப்பெற்றுள்ளன. லீலாவதீ மும்முறை அரசாட்சிசெய்த பதினைந்து வருட காலத்தின் இடையிடையே ஆட்சிசெய்த ஸாகஸமல்லன் மற்றும் தர்மாசோகன் ஆகிய மன்னர்களின் நாணயங்களும் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. அதாவது லீலாவதீயின் ஆட்சியைக் கைப்பற்றிய ஸாகஸமல்லன், லீலாவதியின் நாணயங்களை புழக்கத்திலேயிருந்து நிறுத்தி தனது நாணயங்களை புழக்கத்கு கொண்டு வந்திருக்கவேண்டும். அதேபோன்று பின்னேவந்த தர்மாசோகனின் ஆட்சியிலும் நடந்திருக்கவேண்டும். இதனடிப்படையிலே நோக்கும்போது லீலாவதீ தனது 2ஆம் மற்றும் 3ஆம் முறை ஆட்சிகளிலும் புதிய நாணயங்களை மீண்டும் வெளியிட்டிருக்கலாம் என்ற ஊகத்துக்கு வரலாம். லீலாவதீயின் பல நாணயங்களை ஆராய்ந்ததிலே இந்த ஊகத்துக்கு வலுசேர்க்கும் ஆதாரங்கள் கிடைக்கப்பெறுகின்றன. உதாரணத்துக்கு இங்கு லீலாவதீயின் நான்கு நாணயங்கள் காட்டப்பட்டுள்ளன.

லீலாவதீ 1 லீலாவதீ 2 லீலாவதீ 3 லீலாவதீ 4





நாணயம் 1 மற்றும் 2 ஆகியவற்றிலே 'ரா ஜ' என்னும் இரு எழுத்துக்களை எடுத்துநோக்கும்போது வடிவ வேறுபாடுள்ள எழுத்துக்களைக் காணமுடிகின்றது.



நாணயம் 3 மற்றும் 4 ஆகியவற்றிலே நாணயங்களின் முன்புறம் காட்டப்பட்டுள்ளன. இவற்றிலே ஆளுருவத்தின் முகத்திலே வித்தியாசங்கள் காணப்படுகின்றன.




2009ஆம் ஆண்டு இலங்கை அஞ்சல் திணைக்களம் நிஸ்ஸங்க மல்லனின் கல்வெட்டு ஒன்று மற்றும் லீலாவதீ அரசியின் நாணய படங்களை உள்ளடக்கி வெளியிட்ட முத்திரை

இவ்வாறு எழுத்து வேறுபாடு மற்றும் உருவ வேறுபாடுகளுடன் லீலாவதீயின் நாணயங்கள் கிடைக்கப்பெறுகின்றபோதும் எந்த நாணயம் அவளின் எத்தனையாம் ஆட்சிக்குரியது என்று திடமாகக் கூறமுடியாதுள்ளது.

இந்த விடயம் மேலும் ஆய்வுக்குரியது.

தொடரும்

9 772478 034009

ISSN 2478-0340

PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org